

# முழுநிலா முத்து

## முழுநிலாக் கலைவிழா மலர் – 2013

### மாகாணக் கல்வித் திணைக்களம்
### வடமாகாணம்.

# முழுநிலா முத்து

வடமாகாண முழுநிலா நாள்

**கலைவிழாச் சிறப்பு மலர்**

**2012**

# நூல் விபரப் பட்டியல்


| | | |
|---|---|---|
| இதழின் பெயர் | : | **"முழுநிலா முத்து"** |
| வகை | : | கலை ஆக்கங்களின் தொகுப்பு |
| தொகுப்பாசிரியர் | : | திருமதி மதிவாணி விக்னராஜா |
| வெளியீடு | : | முழுநிலா விழாக்குழு<br>மாகாணக் கல்வித் திணைக்களம்<br>வடமாகாணம். |
| இதழ் வடிவமைப்பு | : | திரு.மு.இராதாகிருஷ்ணன் |
| பதிப்பு | : | 2012 |
| பக்கங்கள் | : | 112 |
| பிரதிகள் | : | 1500 |
| அச்சுப்பதிப்பு | : | தீபம் பிறிண்டேர்ஸ்<br>717,கே.கே.எஸ்.வீதி,<br>யாழ்ப்பாணம். |

# மலர்க்குழு

**திரு.மு.இராதாகிருஷ்ணன்**

*(மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், கல்வி அபிவிருத்தி)*

**திரு.வ.ஸ்ரீஸ்கந்தராசா**

*(பிரதிக் கல்விப் பணிப்பாளர்,கல்வி அபிவிருத்தி)*

**திருமதி மதிவாணி விக்னராஜா**

*(ஆசிரிய வளவாளர் - அழகியல்)*

**திரு.த.தர்மலிங்கம்**

*(உதவிக் கல்விப் பணிப்பாளர் -தமிழ்)*

# விழாக் குழுவினர்

**காப்பாளர்**

**திரு.சி.சத்தியசீலன்**
செயலாளர்,
கல்வி பண்பாட்டலுவல்கள்
விளையாட்டுத்துறை அமைச்சு
வடமாகாணம்.

**தலைவர்**

**திரு.வ.செல்வராசா**
மாகாணக் கல்விப் பணிப்பாளர்
வடமாகாணம்.

**இணைப்பாளர்**

**திரு.மு.இராதாகிருஷ்ணன்**
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்
வடமாகாணம்.

**செயலாளர்**

**திருமதி.மதிவாணி விக்னராஜா**
ஆசிரிய வளவாளர் - அழகியல்
வடமாகாணக் கல்வித் திணைக்களம்.

**செயற்குழு உறுப்பினர்கள்**

**திரு.ஆ.இராஜேந்திரன்**
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்
(நிர்வாகம்)
வடமாகாணம்.

**திரு.கு.பிரேமகாந்தன்**
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்
(கல்வி அபிவிருத்தி)
வடமாகாணம்.

**திரு.வ.ஸ்ரீஸ்கந்தராஜா**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்
(கல்வி அபிவிருத்தி)
வடமாகாணம்.

**திரு.க.பிரட்லி ஜனற்**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்
(திட்டமிடல்)
வடமாகாணம்.

**திரு.க.சத்தியபாலன்**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்
வடமாகாணம்.

**திரு.த.கிருபாகரன்**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்
(நிர்வாகம்)
வடமாகாணம்.

**திரு.க.மணிமார்பன்**
உதவிக் கல்விப் பணிப்பாளர்
(திட்டமிடல்)
வடமாகாணம்.

# மலரின் உள்ளே...


| | | |
|---|---|---|
| | வாழ்த்துச் செய்திகள் | vii |
| | நிலா,கலைநிலா,முழுநிலா..... | x |
| | இதழாசிரியரின் இதயத்திலிருந்து.... | xi |
| 1. | அழகியலும் ஆரம்பக் கல்வியும் | 01 |
| 2. | முத்தே நீ வாழ்க! | 04 |
| 3. | பண்ணிசையின் சிறப்பும் பெருமையும் | 05 |
| 4. | நாம் நாமாக வேண்டில்....? (நமது ஆடலியல் பற்றிய சிறு குறிப்பு) | 08 |
| 5. | முழுநிலா | 15 |
| 6. | மாணவப் பருவத்தில் அந்வைத தியானம் | 17 |
| 7. | இது எங்கள் தேசம் | 20 |
| 8. | இசையும் ஆளுமையும் | 22 |
| 9. | நாட்டிக்கலையும் தமிழ் இசையும் | 27 |
| 10. | நினைவுச் சின்ன மரபின் வரலாற்றுப் பின்னணி | 29 |
| 11. | பௌர்ணமி நிலவே! நீ வருவாயா...? | 32 |
| 12. | சங்கீதத்தின் தொன்மையும் வளர்ச்சியும் | 33 |
| 13. | தமிழ் | 45 |
| 14. | அழகியலுணர்வுள்ள மாணவ சமூகத்தை உருவாக்குதல் | 47 |
| 15. | நிலவென்ன பேசுமோ...! | 51 |
| 16. | கண்ணன் கீதமும் வண்ண அமுதக்கீதையும் | 53 |

17. பௌர்ணமியே வந்து வரம் தந்திடு...! 56

18. ஓவியக்கலையில் எகிப்திய கிரேக்கக் கலைகள் 57

19. தமிழர் பண்பாட்டில் கலை 59

20. சொல்லு பாப்பா! 62

21. உள்மனச்சித்திரம்

(உளவியல் அரங்கு பற்றிய சிறுகுறிப்பு) 64

22. தமிழோடு நான் 67

23. ஐரோப்பிய சங்கீதமும், கர்நாடக சங்கீதமும்

ஓர் ஒப்புநோக்கு 69

24. கலைகள் சமூகப் பிரக்ஞையின் வடிவங்களாகும் 72

25. யாழும் யாழ்ப்பாணனும் 75

26. கல்வி 79

27. மனங்களுடன் அழகியற் கலைகள் 80

28. மனித வாழ்வில் இசைக்கலை 85

29. நாடக இலக்கிய வளர்ச்சியும் அதன் அவசியமும் 88

30. இசையே...உயிரே... 90

31. தண்ணீர் இல்லையேல் கண்ணீர்.

(சிறுவர் நாடகம்) 91



வடமாகாண கௌரவ ஆளுநர்

திரு.ஜி.ஏ.சந்திரசிறி அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

எமது நாட்டின் எதிர்காலச் சமுதாயத்தைச் சிறப்பாகக் கட்டியெழுப்புவதற்காகப் பாடசாலைமாணவர்களுக்கெனப் பல விசேட செயற்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படுகின்றன. வடமாகாணப் பாடசாலை மாணவர்களுக்கு இத்திட்டங்களை வலுப்படுத்தி அவற்றை வினைத்திறன் மிக்கதாக்கவேண்டிய தேவை எமக்கு உண்டு இதனாலேயே வகுப்பறைக் கற்றல் செயற்பாட்டுடன் நின்று விடாது அனுபவத்துடன் இணைந்த அறிவை மாணவர்கள் பெற்றுக்கொள்ள உதவும் இணைப்பாடவிதான செயற்பாடுகள் மிக உன்னிப்பான கவனத்துடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பாடசாலைகளை வழி நடாத்தி வரும் கல்வித்திணைக்களங்கள் மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்கும், ஆளுமை விருத்திக்கும் பெரும் பங்காற்றி வருகின்றன. இவ்வகையில் வடமாகாணக் கல்வித் திணைக்களம் மாதந்தோறும் வரும் முழுநிலா நாட்களில் ஒவ்வொரு வலயத்திலும் உள்ள பாடசாலை மாணவர்கள்,ஆசிரியர்கள் இணைந்து நடாத்தும் கலைநிகழச்சியைச் சிறப்பாக நடாத்தி வருகின்றது. கடந்த இரு வருடங்களும் பாராட்டுக்குரிய வகையில் நிறைவேறியுள்ள இவ்விழா இன்று இருபத்தைந்தாவது விழாவாக அமைகிறது. இக்கலைவிழாவில் கலை ஆர்வலர்களின் ஆக்கங்களுடன் "முழு நிலா முத்து" என்ற மலர் மலர்கின்றமையும் எனக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. இன்றைய கலைவிழா சிறப்புடன் அமையவும் "முழு நிலா முத்து" மலர் வெளியீடு சிறப்புறவும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்து, எதிர்காலத்திலும் இத்தகைய சீரிய பணிகள் தொடர ஆசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.ஜி.ஏ.சந்திரசிறி**
வடமாகாண ஆளுநர்



வடமாகாணக் கல்விப்பணிப்பாளரும்
முழு நிலாக் கலைவிழாத் தலைவருமான
திரு.வ.செல்வராசா அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

இன்றைய பாடசாலை மாணவர்கள் நாட்டின் நாளைய தலைவர்களாக மிளிர வேண்டியவர்கள். இவர்களை உருவாக்கும் பெரும் பங்கு பாடசாலைகளைச் சாரும், கலைத்திட்டத்தைப் பூரணப்படுத்திப் பரீட்சையில் சித்தியடைவதால் மட்டும் மாணவர்கள் உயர் நிலைக்கு வரமுடியாது. அவர்கள் கல்வி அறிவுடன் ஆளுமைமிக்கவர்களாகவும் வளரவேண்டும். இதனைக் கருத்திற் கொன்டே எமது நாடடில் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் அதிக கவனம் செலத்தப்படுகிறது ஒரு மாணவனை அல்லது பாடசாலையை மாவட்ட, மாகாண, தேசிய, சர்வதேசரீதியில் அடையாளப்படுத்துவதில் இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் பெரும் பங்காற்றுகின்றன.இந்த வகையில் வடமாகாணக் கல்வித் திணைக்களம் ஆசிரியர்களுக்கு வழிகாட்டவும் மாணவர்களுக்கான களம் அமைத்துக்கொடுக்கவும் மாதந் தோறும் வடமாகாணத்தின் பன்னிரண்டு வலயங்களிலும் முழு நிலா நாட்களில் கலை நிகழ்ச்சிகளை ஒழுங்கமைத்து ஆற்றுகைப்படுத்தி வருகின்றது அவ்வப்பிரதேசக் கலைஞர்களும் முழு நிலாக் கலைவிழாவில் பங்குகொள்வது குறித்த பிரதேசங்களின் சிறப்பான பாரம்பரிய கலை வடிவங்களை வெளிக்கொணர வழி தருகின்றது. எமது கலை, பண்பாடு, கலாசாரம், விழுமியங்கள் என்பவற்றை இளம் சமுதாயத்திற்கு கையளிப்பதும் இவ் விழாவின் மறுபக்கமாகும். மாணவர்கள்,ஆசிரியர்கள்,கலைஞர்கள் தங்களின் உள்ளார்ந்த திறனை வெளிப்படுத்தித் தமது இயலுமைகளை இனங்கண்டு அவற்றை மேலும் வளர்க்க முடிகிறது.

நல்ல கலைஞனை உருவாக்கவும் நல்ல ரசிகனை உருவாக்கவும் அதனூடே தேசிய ஒற்றுமையை வளர்க்கவும் இவ்விழாவை அனைவரும் பயன்படுத்தவேண்டும். மேலும், எமது நாட்டின் பன்மைத்துவ கலாசாரத்தை கட்டியெழுப்புதல், மாற்று வலுவுள்ளோரின் திறன்களை வெளிப்படுத்தி அவர்களை எங்களுடன் இணைத்து அவர்கள் வாழ்வில் வெற்றி பெற உதவுதல் என்பனவும் இவ் விழா தரும் பயன்களெனலாம்.

இரு வருடங்கள் நிறைவுற்ற நிலையில் வடமாகாணக் கல்வித் திணைக்களம் இவ் விழாவை இருபத்தைந்தாவது விழாவாக முன்னெடுக்கிறது. அத்துடன் கலைத்துறை சார்ந்த அறிஞர்கள், கலைஞர்கள், மாணவர்களின் ஆக்கங்களைத்தாங்கிய நலையில் இன்று “முழு நிலா முத்து” என்கிற மலர் மலர்கிறது. இத்தகைய நல்ல முயற்சியைப் பாரபட்டி எதிர்வரும் காலங்களிலும் இப்பணிகள் சிறப்புடன் தொடர எனது நல் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகிறேன்.

**வ.செல்வராசா**
மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மாகாணக் கல்வித் திணைக்களம்,
வடமாகாணம்.



# நிலா, முழுநிலா, கலைநிலா...

இப் பூமியின் உயிர்களுக்கு ஆச்சரியமானதாகவும் புதினமானதாகவும் இருந்த விடயங்களில் தண்ணொளி பரப்பும் நிலவும், கதிரொளி பரப்பும் சூரியனும் பிரதானமானவை அதிலும் உற்று நோக்கிப் பார்த்து மகிழ்ந்து கூடிக்களிக்க உகந்த நிலவொளியை நல்கும் நிலா மனிதர்களால் பெரிதும் விரும்பப்பட்டது அறிவும், காதலும், ஆன்மீகமும், மகிழ்வும் மட்டுமல்லாது கவிதையும், கலைகளும் இத்தண்ணொளியில் உதயமாகின இவ்வகையில் முழு நிலா நாள் என்பது உயிர்களுக்கு மகிழ்வைக்கொடுத்த நிலவிரவாகும்.

நமது பாரம்பரியத்தில் நம் முன்னோர் முழு நிலா நாளை விசேட நாளாகக் கருதிப் பல நற்செயல்களுக்காய் அதனை ஒதுக்கினர். சமய, சமூக சடங்குகள் முதல் அறிவுக்கான செயற்பாடுகள் வரை நிலவொளியில் நம்முந்தையோர் ஈடுபட்டனர். எமது சமூகத்தின் இத்தகைய பாரம்பரியங்களை நாமும் அறிந்து நம் அடுத்த தலைமுறைக்கான அனுபவப் பகிர்வாக வழங்க ஒரு களத்தை அமைக்கும் நோக்குடன் வட மாகாணக் கல்வித் திணைக்களம் பன்னிரு வலயங்களிலும் மாதந்தோறும் முழு நிலா நாள் அன்று கலை விழாக்களை இரு வருடங்களிலும் நடாத்த வழி காட்டியது. இது பாடசாலை மாணவருக்கு அனுபவ அறிவு கிடைக்க உதவுகிறது. மாணவனின் தன்னம்பிக்கை வளரவும், தலைமைத்துவப் பண்பு உயரவும் இத்தகைய செயற்பாடுகள் உதவுகின்றன. நாளாந்த கற்றல் செயற்பாடுகள் வெற்றிகரமாக நடைபெற இவ் இணைப் பாடவிதான செயற்பாடுகள் உதவுகின்றன.

வட மாகாணப் பாடசாலை மாணவர்கள் அனைவரும் பங்குபற்ற வாய்ப்பு வழங்கும் இம் முழுநிலா கலை விழா இன்று இருபத்தைந்தாவது விழாவாக வட மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படுகின்றது. இவ்விழா சிறப்புறவும், மேலும் பாடசாலை மாணவர்கள், ஏனைய கலை ஆர்வலர்கள் ஆகியோரது உள்ளார்ந்த கலை சம்பந்தமான வேட்கையின் வெளிப்பாடுகளைத் தாங்கி இன்று மொட்டவிழும் "முழு நிலா முத்து" மலர் வெளியீடு சிறப்புறவும் வாழ்த்துக்களைக் கூறி, இப்பணிக்காக உழைக்கும் அனைவரையும் பாராட்டி, இச்சீர்மிகு பணிகள் எதிர் காலங்களிலும் சிறப்புடன் தொடர எனது நல்லாசிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**முத்து.இராதாகிருஷ்ணன்**
மேலதிக மாகாணக் கல்விப் பணிக்காளர்



# இதழாசிரியரின் இதயத்திலிருந்து...

மாணவர்கள் பாடசாலைக்கல்வியைப் பெற்றுக்கொண்டு அறிவை வளர்க்கும் அதேநேரம், கலைத்திட்டத்திற்குப் புறம்பான இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபடுவதால் ஆக்கத்திறன் வளர்ச்சி, அனுபவ அறிவு என்பன கிடைக்கின்றன. இதனால் மாணவர்கள், ஆசிரியர்கள், பாடசாலைகள், சமூகம் என்பன நாடளாவிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் இனங்காணப்பட முடிகிறது. இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபடும் மாணவர்கள் அனைவரும் அவ்வத்துறைகளில் துறைசார் விற்பன்னர்களாக முடியாவிட்டாலும் அவற்றில் ஈடுபடும் போது அவர்களில் விரும்பத்தக்க மாற்றங்கள் உருவாகுவதையும் அதனால் அவர்கள் சமூகம் எதிர்பார்க்கும் நற்பிரஜைகள் ஆகிவிடுவதையும் மறுக்கமுடியாது. இணைப்பாடவிதானச் செயற்பாடுகளினால் கிடைக்கப்பெறும் மன உறுதி மாணவர்களின் வகுப்பறைக் கற்றல் செயற்பாடுகளை வினைத்திறன் மிக்கதாக்க உறுதுணையாகிறது. மேலும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் அனுபவ அறிவை வழங்கி மாணவர்களின் ஆளுமையை விருத்தியாக்குகின்றன.

ஒருநாட்டில் கலைத்திட்டங்களின் மூலம் அடையப்படவேண்டிய குறிக்கோள்கள், தேர்ச்சிகள் முதலானவை இலகுவில் மாணவர்களைச் சென்றடைய மாணவரின் வினைத்திறனுடனான கற்றற் செயற்பாடு உதவுகின்றது. வட மாகாணக் கல்வித் திணைக்களம் வட மாகாணப் பாடசாலை மாணவர்களுக்கு அவர்களின் ஆற்றுகைத் திறன்களை, உள்ளார்ந்த திறன்களை வெளிக்கொணர மாதந்தோறும் பன்னிரு வலயங்களிலும் நடாத்தி வரும் முழு நிலா நாள் கலை விழாவில் சந்தர்ப்பங்களை வழங்கி வருகின்றது. அவ்வப் பிரதேசங்களுக்குரிய சிறப்பான கலை அம்சங்கள், பண்பாடு, பாரம்பரியம் முதலானவை இவ்வேளையில் அவர்களிடையே பரிமாறப்படுகிறது. இதுவே முழு நிலா நாள் கலை விழாவின் பிரதான நோக்கமாகும்.

2011ம் ஆண்டு முதல் பன்னிரு வலயங்களிலும் ஒழுங்கமைக்கப்பட்டு சிறப்புடன் நிறைவேறியுள்ள இவ்விழா, இன்று இருபத்தைந்தாவது விழாவாக வட மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்றது. மேலும் கலை ஆர்வலர்களின் ஆக்கங்களை இதழ்களாகக் கொண்டு "முழு நிலா முத்து" என்ற மலரும் இன்று வெளியிடப்படு வதையிட்டு மகிழ்வடைகிறோம்.

எமது இக்கலை விழா செவ்வனே நிறைவேற உதவிகள் புரிந்து ஆசிகளும் வழங்கிய வட மாகாண கௌரவ ஆளுநர் திரு.ஜி.ஏ.சந்திரசிறி, அவர்தம் செயலாளர் திரு.இ.இளங்கோவன், வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் திரு.சி.சத்தியசீலன், வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு.வ.செல்வராசா ஆகியோரை இவ்வேளை நன்றியுடன் நினைவிற் கொள்கின்றோம். மேலும் முழு நிலா நாள் கலை விழா சிறப்புற சகல உதவிகளையும் செய்த வட மாகாணக் கல்வித் திணைக்கள மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், நிர்வாக உத்தியோகத்தர், பிரதம கணக்காளர், கணக்காளர் ஏனைய உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் நன்றிகள். மாதந்தோறும் இக்கலைவிழாவைச் சிறப்பாக நடாத்துவதில் பெரும் பங்காற்றும் ஒவ்வொருவருக்கும் வட மாகாணக் கல்வித் திணைக்களத்தின் பாராட்டுகளும் நன்றிகளும்.

"முழு நிலா முத்து" மலர் அழகுடன் மலர ஆக்கங்கள் தந்த கலை ஆர்வலர்கள் அனைவருக்கும், இம்மலரைச் சிறப்பாக அச்சுப் பதிப்புச் செய்து உதவிய தீபம் அச்சகத்தினருக்கும் வட மாகாணக் கல்வித் திணைக்களத்தின் உளம் நிறைந்த நன்றிகள்.

**திருமதி. மதிவாணி விக்னராஜா**<br>
ஆசிரிய வளவாளர் (அழகியல்)<br>
வட மாகாணக் கல்வித் திணைக்களம்.

# அழகியலும் ஆரம்பக் கல்வியும்

**திரு.இ. இராஜேஸ்வரன்**
உதவிக்கல்விப் பணிப்பாளர் (ஆரம்பக்கல்வி)
வடமாகாணக் கல்வித் திணைக்களம்

கருவறை தொடங்கி கல்லறை வரையும் ஒருவருடைய வாழ்க்கையில் அழகியலும் இணைந்து புரையோடியுள்ளது.

**"அழகியல் ரசனை இல்லாதவன் பசாசுகள் வாழ்கின்ற உலகிற்குப் பொருத்தமான வன்"** என்று ஆங்கிலக் கவிஞன் சேக்ஷ்பியர் கூறியுள்ளார். "ஆளுமையுள்ள ஒருவன் அழகை விரும்புகின்றான்" என்றார் கிரேக்க தத்தவஞானி பிளேட்டோ. அழகியல் உணர்வு (Aesthetic sence) மனிதப் பண்புகளையும் ஆளுமை களையும் வளர்க்கின்றது. என்றார் கவியரசர் இரவீந்திரநாத் தாகூர் அழகியல் என்பது உணர்வுகளுடன் தொடர்புடையது. உள்ளுண ர்வை ஆட்டம் காணச் செய்யும் ஆற்றல் இந்த அழகியலுக்கு உண்டு.

அழகியல் என்ற பொது வார்த்தையில் ஆயிரம் வகைகள் உண்டு சித்திரம், சங்கீதம், நடனம், சிற்பம் என்று கலைகள் வேறுபடுவது போல ஒவ்வொருவருடைய உணர்வுகளுக்கு ஏற்றாற்போல அழகியல் இரசனையும் மாறுபடு கின்றது.

கருவுற்றதாய் பல்வேறு அழகியல் காட்சிகளைப் பார்க்க வேண்டும். இனிமையான கீதங்களை, இசைகளை கேட்க வேண்டும். நல்ல எண்ணங்களை எண்ண வேண்டும். என்றெல்லாம் கூறப்பட்டுள்ளதால், உள் நோக்கமே பிறக்கின்ற குழந்தை இந்த அழகியல் உணர்வுகளால் செழுமையாக்கப்பட்டு மனித உலகிற்கு பொருத்தப்பாடுள்ள பிள்ளைகளாக இந்த மண்ணில் பிறக்க வேண்டும் என்பதற்காக வேயாகும்.

குழந்தை பிறந்து ஒரு சில நாட்களிலேயே தனது தாயின் குரலை, அரவணைப்பை, தாயின் மணத்தை வேறுபடுத்தி அறிய கற்றுக் கொள்கின்றது. உணர்தல், அறிதல், ரசித்தல் போன்ற விடயங்கள் எமது புலன்கள் ஐந்துடனும் தொடர்புபட்டவையே. எனவே ஐம்புலனையும் நல்ல விடயங்கள் பால் கவரக் கூடியவாறு குழந்தைப்பருவம் முதலே கற்றுக் கொள்கின் றது. மாறாக வேறுபட்ட குரல், மணம், தொடுகை ஏற்படும் போது குழந்தைகள் அழ ஆரம்பிக்கி ன்றன. இவை அழகியல் ரசனையின் வெளிப்பாடே.

தாயின் தாலாட்டிலே குழந்தை கண்ணுற ங்குகிறது. உயர்வான எண்ணங்களை எண்ணிய வாறு தனது குழந்தையின் உள்ளத்தை வருடக் கூடிய வகையில் தாலாட்டு அமையும் போது குழந்தை நிம்மதியாக ஆழ்ந்த உறக்கம் கொள்கிறது.

திடீரென ஒரு நாய் குரைத்தாலோ பலத்த சத்தமாக யாராவது கதைத்தாலோ குழந்தை திடுக்கிட்டு எழுந்து விடுவது மட்டுமல்லாமல் வீரிட்டுக் கத்தி அழுகின்றது. எனவே இந்த இசைக்கு, அரவணைப்பிற்குத் துலங்கல் காட்டக் கூடிய சக்தி குழந்தைக்கு இளமையிலேயே தொடங்கி விடுகின்றது.

இதனால் தான் சதங்கை ஒலிகள், குருவிகளின் மென்மையான சத்தங்கள், சதங்கைகள், சிறிய மணிகள் கொண்ட விளையாட்டுப் பொருட்களைக் குழந்தைகளின் தொட்டிலில் தொங்க விட்டு அது காலைக் கையை அசைக்கும் போது இந்தப் பொருட்களில் பட்டு ஒலி எழுப்ப அதைக் கேட்டு சிரித்துக் கொண்டே விளையாடும் குழந்தைகளைக் காண்கின்றோம். ஆகவே அழகியல் எவ்வாறு குழந்தைகளை ஆக்கிரமிக்கின்றது என்பதைக் காண்கின்றோம்.

சற்று வளர்ந்த குழந்தை முதலாவது வயதிலேயே பொருட்களை எடுத்து உருட்டிப் பார்ப்பது, வாயில் வைத்து சுவைப்பது, மணந்து பார்ப்பது, கீழே போட்டு விளையாடுவது போன்ற விளையாட்டுக்களில் ஈடுபடுகின்றது. சிறிய கைகளால் மாவைப் பிசைந்து சிறிய சிறிய உருண்டையாக்குவது, தட்டையாக்குவது, உருவங்கள் செய்வது எல்லாம் பிள்ளைகளுக்கு பிடித்தமான செயல்கள். இதன் அடிப்படையில் படிப்படியாக தெய்வங்களின் உருவம் செய்யப் பழகுகின்றது. இதுவே மனித வாழ்வின் அழகியற் கலையின் தொடக்கம் ஆகின்றது.

சிரட்டை, தகரங்களைத் தட்டி ஒலி , எழுப்புவதுடன் வாயில் ஏதாவது பாட்டை வரவழைத்து கியா, மாயா என்று ஒலி எழுப்பி பாட ஆரம்பிக்கின்றது. கால்களை நிலத்தில் உதைத்தும் துள்ளியும் குதித்தும் கைகளை அசைத்தும் நெளித்தும் இடுப்பை ஆட்டியும் குனிந்தும் நிமிர்ந்தும் பல்வேறு கோலங்களை உண்டாக்கி மகிழ்கின்றன. இவை தான் படிமுறை வளர்ச்சி கண்டு சங்கீதம், சிற்பம். நடனம், ஓவியம் என்று பரிணாமித்துள்ளன.

எனவே இளம் சிறார்களுக்கு அழகியல் என்பது கற்கண்டு போன்றது. முன்பள்ளி தொடக்கம் ஆரம்பக் கல்வி வரை பாட விதானத்தில் மகிழ்வூட்டும் விளையாட்டுக்கள், பாடல்கள், ஆடல்கள் முக்கிய இடம் பெறுகின் றது.

ஆரம்பக் கல்வி வகுப்பென்றால் ஒரு மகிழ்வரங்களாகவே காட்சியளிக்கும் வண்ண வண்ணப் படங்கள் மாதிரி உருவங்கள், இசைக்கருவிகள், ஒப்பனை மூலைகள், சிறிய அரங்குகள் போன்று பல்வேறு மூலைகள் ஆரம்பக்கல்வி வகுப்பறைகளை ஆக்கிரமித்து விடுகின்றன.

பிஞ்சுக் குழந்தைகளுடன் பழகும் ஆசிரியர்களும் தானும் பிஞ்சுக் குழந்தைகள் போன்றவர்களாக மாறி விடுகின்றார்கள். தாய் உணர்வை அப்படியே அள்ளிச் சொரிகின்றார் கள். தனது தாய் தந்தையரை ஒத்த அன்பு பாசத்தை தனது ஆசிரியர்களிடம் இந்தக் குழந்தைகள் வெளிக்காட்டுவதற்கு முக்கிய காரணம் இந்த அழகியல் உணர்வே. குழந்தைகளுடன் ஆடிப்பாடி மகிழும் ஒரு

ஆசிரியரின் முகம் என்றும் மலர்ச்சியாகவே இருக்கும். உடலில் தளர்ச்சி காண முடியாது. சுறுசுறுப்பாக இருப்பார்கள். இவை அனைத்தும் உருவாக்கியது இந்த அழகியல் தான்.

இளம் வயதிலே உண்டான இந்த ரசனைதான் அழகியல் உணர்வுகளாகப் பெரிய மனிதர்களாகும் போதும் நீடித்து நிற்கின்றன. தனது வீட்டை அழகாக வைத்திருப்பது, சமைக்கும் உணவுகளைச் சுவைபடச் சமைப்பது, விருந்தினரை வரவேற்பது, அன்பாகப் பேசுவது போன்ற நல்ல பக்க வளர்ச்சி காணுகின்றன. வளர்ந்த ஒவ்வொருவருடைய செயல்களிலும் அழகியல் ரசனையும் இணைவதால் தான் அவர்களின் எண்ணம், சொல், செயல், தூய்மை யாகவும் நேர்த்தியாகவும் முன்மாதிரியாகவும் அமைகின் றன.

அழகியல் ரசனையுள்ளவன் வாழ்க் கையை செம்மையாக வாழ்ந்து முடிப்பான். சோகம், துன்பம், நோய் என்பன அவனை எதுவும் செய்யமாட்டாது. எந்தச் சவால்களையும் எதிர் கொள்ளும் ஆற்றல் வளரும்.

ஆக அழகியலுக்கா இவ்வளவு சக்தியு ண்டு என்றால் அது மிகையில்லை.

**"இசையால் வசமாகா உலகமெது"**

**'நானசைந்தால் அசையும் அகிலமெல் லாம்"**

"அகத்தினுள் எழும் மனவெழுச்சியால் பிள்ளையுணர்வுகளை வெளிப்படுத்த முனை கின்றது. உளச்சமநிலைக்கு மிகவும் முக்கியமான இச்சுய சிந்தனை செயலொழுங்கு தடையின்றி பிரவாகிக்க இடமளிப்பதும் ஆசிரியரின் பணியாகும்" என ஹேர்பட் ரீட் Educate through Art என்ற நூலில் குறிப்பிடுகின்றார். எனவே அழகியற் கல்வியின் தார்ப்பரியத்தை ஒவ்வொருவரும் அறிந்து கொள்ள வேண்டும். அதன் தாக்கத்தைச் சரியாகப் புரிந்துகொண்டு எதிர்கால சுபீட்ச வாழ்விற்கு வித்திடுவோமாக.

**"கல்விக் கழகு கவினுறும் கற்பனை**
**கல்விக்கு வளர்ச்சி புதியன படைத்தல்"**

# முத்தே நீ வாழ்க!

திரு. இரா. ஜெயக்குமார்
அதிபர்
யா/மயிலணி சைவ ம.வி.

எத்திக்கும் தித்திக்கும்
எங்கள் முத்தமிழின்
கொத்தாக கொத்தாக மணம் பரப்பி
வித்தாகும் முத்தே நீ வாழ்க!

வடமாகாணக் கல்விப் பணிமனையின்
வாசம் பரப்பும் அறிவுச் சுடரே,
கயமைகள் போக்கி கனவுகள் தந்து
உயர்வினைத் தந்தே நீ வாழ்க!

கலைகள் யாவையும் கவினுற வளர்த்து
உளங்கள்தோறும் உணர்வினைப் பெருக்கி
வளங்கள் கண்டு தளங்கள் தந்து
ஈழத்து முத்தேநீ வாழ்க!

ஏற்றம் தருகின்ற ஏற்ற தலைவர்கள்
சாதனைப்பசியால் சாகசம் புரிய
வெற்றியாளராய் வேதனையாளர்கள்
ஏணியில் ஏறிட என்றுமே வாழ்க!

# பண்ணிசையின் சிறப்பும் பெருமையும்

செல்வி. சந்திரிகா கணேஸ்பரன்
ஆசிரியை
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி

இசை இறைவன் வடிவமாகும். கலைகள் யாவும் இறைவனிடமிருந்தே தோன்றியவை மேலும் இறைவனை அடைவதற்கு ஏற்ற சிறந்த சாதனமும் இசையேயாகும். சுந்தரமூர்த்தி சுவாமிகள் "ஏழிசையாய் இசைப்பயனாய்" என இறைவனை விழித்தார். ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளும் "நாதத்தையே சரீரமாக உடையவன் இறைவன்" எனத் தமது கிருதியின் குறிப்பிடுவ தோடு ஏழு சப்தஸ்வரங்களும் இறைவனின் ஐந்து முகங்களில் இருந்தும் பிறந்தன எனவும் குறிப்பிடுகின்றார். இசைக்குக் காந்தர்வ வேதம் எனவும் பெயர் உண்டு. காந்தர்வ வேதம் நான்கு உப வேதங்களில் உண்டு. சிவபெருமான் கையில் டமருகமும், கண்ணபிரான் கையில் குழலும், சரஸ்வதிதேவியின் கையில் வீணையும் இருப்பது இசைக்கலையின் தெய்வீகத்தன் மையை புலப்படுத்தும்.

இத்துணைச் சிறப்புள்ள இசைக் கலையை மனிதன் தன் அறிவினாலும், புத்தி சாதுரியத்தினாலும் இன்று காலவரை வளர்த்து வந்திருக்கிறான். அக்கால பண்பட்ட சமுதாயத் திலிருந்து எழுந்தவையே பண்ணிசை வடி வங்கள். மூங்கில் கழியினிடத்திலிருந்து வந்த இசையை உணர்ந்த மனிதன் நாளடைவில் அதையே ஒரு வாத்தியமாக அமைத்தான். அவ்வாத்தியமே இன்று வழங்கும் புல்லாங்குழல் வாத்தியமாகும். இது ஓர் இயற்கை வாத்தியமாக விளங்குகின்றது. குழலும் யாழும் சங்க காலத்தே சிறப்புற்றிருந்தமையை சங்கப்பாட்டால் அறியக் காணலாம். தெய்வப்புலவர் திருவள்ளுவரும் தமது திருக்குறளில் இவ்விரு வாத்தியங் களையும் குறிப்பிடுவது குறிப்பிடத்தக்கதாகும். இன்று வெளிநாடுகளில் இசையைப் பற்றி ஆராய்ச்சி செய்து இசை மூலம் நோய்கள் தீருவதையும், பயிர்கள் வளர்வதையும் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

தமிழகத்தில் மிகப் பழங்காலத்தில் இருந்தே இராகமுறையைப் பண்முறை என்றும், இராகங்களைப் பண் என்றும் அழைத்து வந்திருக்கின்றார்கள். தமிழ்நாட்டில் நெடுங் காலமாக வழங்கி வந்துள்ள இராகங்களின் ஒலி வரலாற்றை ஆராய்வோமாகில், தேவாரப் பாசுரங் கள் தோன்றிய காலத்திற்குப் பலநூறு ஆண்டு களுக்கு முன்பிருந்தே பண்கள் என்று அழைக்கப் பெற்ற இராகங்கள் தமிழ்நாட்டில் வளர்ந்து வந்த மையை அறியலாம். ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள், முத்துசுவாமி தீட்ஷிதர், சியாமா சாஸ்திரிகள் முதலான இசை மேதைகள் தமிழகத்தில் மரபு வழியாக வழங்கி வந்த இராக இசை மரபைக் கையாண்டே தங்கள் கிருதிகளை அமைத்துச் சங்கீத உலகிற்கு வழங்கினர். தேவாரப் பாடல் களும் திவ்வியப் பிரபந்த பாசுரங்களும் இந்த

அடிப்படையிலேயே எழுந்தவையாகும்.

"பண்" எனும் பதம் பண்ணுதல் எனும் வினையடியாகப் பிறந்து பெருந்தானமாகிய நெஞ்சு, மிடறு, நாக்கு, மூக்கு, அண்ணாக்கு, உதடு, பல், தலை ஆகிய எட்டினாலும், கிரியையாகிய எடுத்தல் (ஆரோகணம்) படுத்தல் (அவரோகணம்) நலிதல், கம்பிதம், குடிலம், ஒலி, உருட்டு, தாக்கு ஆகிய எட்டினாலும் பண்ணிற் படுத்தலாற் பண் என்று பெயராயிற்று. "பண்" என்பது நிறைந்த நரம்புள்ளது எனவும், ஏழு சுரங்களுமுள்ள சம்பூர்ண இராகமெனவும் அழைக்கப்பெறும்.

திருமுறைத் தீந்தமிழ்ப் பாடல்கள் ஏனைய பாடல்களைப் போல அல்லாமல் பண்முறை யாகவும், கட்டளை முறையாகவும் நம்முன்னோர் நமக்கு அமைத்துத்தந்தருளியது. நம் முன்னோரால் பெரிதும் போற்றத் தக்கதாகும். இம்முறை இசை முறை அல்லது சங்கீதமுறை என அழைக்கப்படும். இசையுடன் ஓதி அன்பு செலுத்தினால் தான் இறைவன் அருள் செய்வானோ? என்று சிலர் வினவலாம். இறைவன் திருவருளைப் பெறுவதற்கு வழிகள் எண்ணிலவாயினும் அவை எல்லாவற்றிலும் மிக மேலாகக் கொள்ளப்படும் நெறி "இசைச் சாதனமே" என்பது பெரும்பாலார்க்கும் ஒப்ப முடிந்ததொன்றாகும்.

ஐம்புலங்களையும் அடக்கி மனத்தை இறைவன்பால் ஈடுபடச் செய்து மக்கள் இறைவன் அருள் பெறுவதற்கு "இசைமுறையே" மேலானதென்று கருதியன்றோ நம்மூவர் பெருமக்கள் இறைவன் மீது திருவாய் பை நாம் மலர்ந்தருளிய தேவாரப் பாக்களைப் பண்முறைப்படுத்தியும். கட்டளைமுறைப் படுத்தி யும் நமக்கு அமைத்துத் தந்திருக்கின்றார்கள். தேவாரச் செழுந்தமிழ்ப் பனுவல்களின் பல இடங்களிலும் இசையின் சிறப்புப் பற்றி பேசப்படுவதைக் கொண்டு பண்ணிசையின் சிறப்பை நாம் அறியலாம். ஒலி வடிவாகிய நாதத்தை முறையாகவும். கால அளவினதாகவும் அமைத்துப் பாடுவதே "இசைமுறை" எனப்படும். இம்முறை ஒரு மொழிக்கு மாத்திரம் உரித்துடை யது அல்ல பண்முறையில்க் கண்ட இராகங்கள் சுருதியைச் சேர்ந்தும், அதாவது ஒலிவடிவாகிய சுரங்களை சேர்ந்தும் கட்டளை முறை என்பது கால அளவை சேர்ந்தும் அதாவது தாளத்தைச் சேர்ந்தும் இருக்கின்றன.

இக் காலத்தே சங்கீத சம்பந்தம் ஆகும் வடமொழியில் வழங்கும் ஸ்வரப்பெயர்களாகிய ஷட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் எனும் ஏழு சுரங்களும் தமிழ் முறையே குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பவற்றிற்கு சமமான வையாகும். இவ்வேழிலிருந்து உண்டானவையே பண்களும், திறங்களும் பண்கள் ஏழு சுரங்களோடு கூடிய ராகங்கள் இந்த ராகங்கள் சம்பூர்ண ராகங்கள் எனவும் ஜனகராகங்கள் எனவும் மேள கர்த்தா இராகங்கள் எனவும் வடமொழியில் வழங்கப்பெறும்.திறங்கள், பண்களுள் ஒவ்வொன்றிலிருந்து உண்டாகிப் பல வகைப்பட்டு வேறுவேறு பெயர் பெற்று வழங்கும். இவை ஏழிற் குறைந்த சுரங்களை யுடையனவெனவும், ஜன்னிய ராகங்களெனவும் கூறப்படும். ஏழு சுரங்களாலான ராகங்களை பண் என்றும் ஆறு சுரங்களாலான ராகங்களை

பண்ணியல் என்றும் ஐந்து சுரங்களாலான ராகங்களை திறம் என்றும் நான்கு சுரங்களாலான இராகங்களை திறத்திறம் என்றும் கூறுவது மரபாகும். மேலும் தமிழிசை மரபில் கீதத்தின் முதலெடுக்கும் ஸ்வரம் முதல் என்றும் கீதத்தை முடிக்கும் ஸ்வரம் முடிவு எனவும் வழங்கப்படும் வடமொழி இசையாசிரியர் இராகங்களுக்குக் கூறிய பத்து இலட்சணங்களும் தமிழில் முதல், முடிவு, நிறை, குறை, கிழமை, வலிவு, மெலிவு என்னும் ஏழினுள் அடங்கும்.

"நிறை நரம்பிற்றே பண்ணெனலாகும் குறை நரம்பிற்றே திறம் எனப்படுமே" என்றும் திவாகரத்தால் பண்ணியல்பும், திறனியல்பும் நன்கு விளங்கும். பண்ணின் சிறப்பிற்கு எடுத்துக் காட்டாக ஓர் குறமகள் குறிஞ்சிப் பண்ணைப்பாட ஓர் யானை தினைக்கதிரை உண்ணாமலும், புடை பெயராமலும் அப்பண்ணைக் கேட்டு மனமுருகி நின்று உறங்கியதென்பது கீழ்வரும் அகப்பாட்டால் அறியக் கிடக்கின்றது.

**"ஒலியல் வார்மலியுளரினன் கொடிச்சி**
**பெருவரை மருங்கிற் குறிஞ்சி**
**பாடக் குரலுங் கொள்ளாது நிலையின**
**தும் பெயராது**
**பாட அப்பைங்கண் பாரு பெற்றேய்யென**
**மறம்புகழ் மழகளி றுறங்கு நாடன்"**

திருச்சிற்றம்பலத்தேசிகர் என்னும் பெரியார் தமது நாட்டில் பயிர்கள் அழிந்து மக்கள் உணவில்லாமல் வருந்துவதைக் கண்டு தமது பூசையில் மேகராகக் குறிஞ்சிப்பண்ணமைந்த திருப்பதிகத்தை ஓதுவிக்கச் செய்த பொழுது உடனே நாட்டில் மழைபெய்யத் தொடங்கித் துன்பத்தை நீக்கியதென்றும் இதனை அறிந்த கேதுபதி வேந்தனொருவன் அவரிடம் நன்றி பாராட்டித் தமது சமஸ்தானத்திலுள்ள வெள்ளக் குளம் போன்ற சில கிராமங்களை அளித்தனனென்றும் அங்ஙனமளித்த காலத்தில் எழுதப்பெற்ற பட்டயம் வாயிலாக அறியக் கிடக்கின்றது. இதிலி ருந்து தமிழ்ப் பண்களின் சிறப்பை அறியலாம். திருமுறை இசைப பாடல்களைப் பண்ணோடு பாடினால் அவை கல் மனதையும் கரையச் செய்யும் என்பதற்கு சிறிதளவும் ஐயமில்லை. திருத் தருமபுரத்தில் சம்பந்த சுவாமிகள் பாடியருளிய யாழ் முறி எனும் பண்ணைத் திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் தமது யாழில் அமைத்து வாசிக்க இயலாது யாழை உடைக்கச்சென்றமை பண்ணின் சிறப்பிற்கு ஓர் எடுத்துக் காட்டாகும். எடுத்த இயலும் இசையும் இடையே முறிந்து மாறுபடுமியல்புடையதாய் அமைந்த இசைப் பாடல் "முறி" என அழைக்கப்படும். இத்தகைய முறிப்பாடலாக அமைந்து விளங்குவது "மாதர் மடப்பிடி" எனும் முதற் குறிப்புடைய இத்திருப் பதிகம் ஆகும். "எடுத்த இயலும் இசையும் தம்மின் முறித்துப் பாடுதல் முறியெனப்படுமே" என்பது சிலப்பதிகாரம்.

தொன்றுதொட்டு நம்மிடையே வழங்கி வரும் பண்ணிசை மனித உள்ளங்களைப் பண்படுத்தி, தீய சிந்தனைகளிலிருந்து விடுவித்து இறைவனுடனான இணைப்பை ஏற்படுத்தி மனிதப்பிறவியில் நோக்கமான வீடுபேற்றுக்கு அழைத்துச் செல்லும் சக்தி வாய்ந்தது. எம்மைப் பண்படுத்தும் இசையான பண்ணிசையின் பெருமைகள் சிறப்புக்கள் அளவிடற்கரியன.

# நாம் நாமாக வேண்டில்.........?

**நமது ஆடலியல் பற்றிய சிறு குறிப்பு**

"நாட்டியவேள்"கலைஞர், **வேல் ஆனந்தன்**
ஓய்வுநிலை, பிரதிக்கல்விப்பணிப்பாளர்(அழகியற்கல்வி)
வடக்கு கிழக்கு மாகாண கல்வி, கலாச்சார அமைச்சு,
திருகோணமலை.

ஒரு நாட்டினதும் அந்நாட்டில் வாழும் பல்வகை இனங்களினதும், பண்பாட்டுப் பெறுமானங்கள் மிக்க விழுமியங்களை, உரிய சமயப் பண்புகளின் நெறிமுறைகளை, அவற்றோடிணைந்த அவர்களது தனித்துவமான "சுயங்களை" அது சார்ந்த தொன்மைமிகு எண்ணக் கருக்களை – இப்படி இன்னும் பல அசல் செய்திகளையும் இணைத்து வெளிக் கொணர்பவை, **அந்தந்த மக்கள் குழுமத்தின் மத்தியில் உள்ள கலை வடிவங்களே.** இன்னும் சொன்னால்,ஒரு மண்ணில் மரபு வழி வாழ்ந்த மக்களதும், அவர்களது வாழ்காலங்களில் ஏற்படும் செவ்வைமிகு மாற்றங்களையும் உரிய உரிய காலமாற்றங்களுக்கேற்ப படம்பிடித்துக் காட்டும் கண்காட்சி ஊடகங்களாகவும் குறிப்பிட்ட கலைவடிவங்களே அமைகின்றன.

இந்நிலையில் எமக்குள்ளே ஓர் வினா எழுகிறது. அது மட்டுமன்றி பிற இனத்தவர் களாலும் கேட்கப்படுகிறது...... அது தான் நாம் யார்? எமது நாடு எது? அந்த நாட்டில் நாம் சார்ந்த இனக் குழுமம் எது? எமக்கென்றொரு தனித்துவமான கலாசாரத்துக் குரிய குறியீடுகள் உள்ளனவாக இருந்தால் அவை எவை? அதன் அடையாளங்களை எப்படித் துல்லியப் படுத்துவது? அல்லது எதற்கூடாகத் துல்லியப் படுத்துவது இத்தகைய வினாக்களுக்கு "நான் **முதற் பந்தியில் குறிப்பிட்ட இனக்குழுமத்தின் மத்தியில் உள்ள கலை வடிவங்கள் என்பது தானே"? என்பது விடையாக அமையும்:– அப்படியானால் நமது இனக் குழுமத்தின் உரித்துக்குரிய கலை வடிவங்கள் ....?** குறிப்பாக ஆடல் வடிவங்கள் எவை? தொடராக இல்லாவிட்டாலும் இடையிடையே என்றாலும், அங்கொன்றும் இங்கொன்றுமாக அரங்கு களிலும், காணொலிப் பெட்டிகளினூடாகவும் தலைகாட்டுகின்ற, பரத நாட்டியமா? மோகினி யாட்டமா? கதகளியா? குச்சுப்பிடியா? கண்டிய நடனமா? குத்தாட்டமா? பிறேக்டான்சா? இவற்றில் எதற்கூடாக எமது இனக் குழுமத்தின் "சுயங்கள்" அடையாளப்படுத்தப்படுகிறது? இத்தகைய வினாவிற்கு எங்கே விடை தேடுவது?

காலத்திற்குக் காலம் இறக்குமதி செய்யும் ஆடல் கோலங்களை அடுத்தடுத்து வரும் பரம்பரையிடம் நாம் ஒப்புவித்தால் மட்டும் போதுமா? இத்தகைய மனப்பாங்கு நமது இயலாமையையும், வார்த்தைகளால், செயல் களால் வெளிப்படுத்த முடியாத, ஒருவித மயக்கநிலை அடிமைத்தனம் என்பதையும் நாம் ஏற்றுக் கொள்ளலாமா? என்னதான் அவரவர் மேட்டுக்குடித்தன வாய்ப்பு வசதிகளுக்கேற்ப அரங்குகளில் உயர்நிலை மினுமினுப்புக்களை வெளிப்படுத்தினாலும் ஈழத்தமிழினம்

இவற்றிற்குரிய மரபுரிமை கொண்டாட முடியுமா? அழைப்பிதழ்களை ஏற்றுக் கொண்டு அரங் காற்றுகை நிகழ்விற்கு வருகின்றவர்களை மட்டும் வைத்துக்கொண்டு இந்த ஆடல் கோலங்கள் நமது மக்கள் மயப்படுத்தப் பட்டுள்ளன என்ற அளவு கோலாக நிர்ணயிக்க முடியுமா?

உதாரணமாக, அல்ல முக்கிய எடுத்துக் காட்டாக ஈழத்து தமிழ் இலக்கிய வளர்ச்சியை எடுத்துப் பார்த்தால்! எங்கு நிற்கிறது? சாண்டில் யனின் நாவலையும், கல்கி, பகிரதன் போன்றோரின் நாவல்களையும் மற்றும் பல தமிழக எழுத்தாளர்களது சிறுகதைகளையும் வாசித்து, தமிழக மக்களதும், மண்வாசனை யினதும் அடக்கத்தையும் சுயங்களையும் நுகர்ந்த நாம் இன்றும் அவற்றை ஒட்டுமொத்த மாக புறமொதுக்காத நிலையிலும், ஈழத்துத் தமிழிலக்கியப் பரப்பில் செ.கணேசலிங்கனின் நாவலையும், செங்கையாழியானின் நாவலை யும், இன்னும் பல நமது எழுத்தாளர்களின் குறுநாவல்கள், சிறுகதைகளையும் வாசித்து, நமது மண்ணின் தனித்துவ வாசனையையும், அது சார்ந்த சம்பவங்களையும் நமது சுயங் களையும் தெரிந்து தெளிந்து நமது மயப்படுத்திக் கொள்ளவில்லையா? அவற்றிற்கு நமது மக்க ளின் அங்கீகாரம் கிட்டவில்லையா? நம்மிட மிருந்து ஈழத்துத்தமிழ் இலக்கியம் அன்னியப் பட்டா நிற்கிறது- இல்லையே எப்படி?

மொத்தத்தில் நமது மக்கள் மயப்பட்ட செவ்வியல் முறைசார் அழகியல் ஊடகமாகவே ஈழத்துத்தமிழ் இலக்கியம் தன்வழி செல்கிறது.

ஆக, அன்னியன் ஒருவனின் மாடி வீட்டுக் குளிரூட்டி அறையில் வாடகைக்குக் குடியிருந்து கொண்டு உரித்துக்கு உரிமை கொண்டாட முடியாத, வரட்டுத்தனமான தற்பெருமை காட்டுகின்ற ஒருவனை விட ஒருபரப்புச் சொந்தக் காணியில் சுத்தமான மண் குடிசை அமைத்து வாழ்வது ஒருவனின் மரபுவழி உரித்துக்குரிய நம்முடையது என்ற தன்மானம் மிக்க தனித்துவத்துக்கு எடுத்துக் காட்டாக அமையாதா?

மேலும், பாடசாலைகள் மட்டத்தில் அழகியல் செயற்பாடுகள் ஊடாக அறிவியல் சிந்தனைகளை ஊட்டுவதன் மூலம் குழந்தை களது திறன்களை விருத்தி செய்வதும், அதற்கப்பால் அழகியற் செயற்பாடுகளுடன் ஒன்றித்த செய்திகளுக்கூடாக, இந்த மண்ணின் ஒவ்வொரு குழந்தைகளும், அவரவர் சார்ந்த இனக்குழுமத்தின் மரபுவழிப் பண்பாடுகளையும், சுயங்களையும் பள்ளிப்பருவத்தில் இருந்தே தன்மயப்படுத்திக் கொள்ளவும் அதன் பெறுபேறாக அவர்கள் தங்களை சமூக மயப்படுத்தி நற்குடிமக்களாக வாழவும் வழிகாட்டக் கூடிய ஒரு குதூகலமான ஊடகம் என்ற கோட்பாட்டு இலக்குடன் தான் 1970களில் அழகியற் கல்வி நம் நாட்டுப் பாட விதானத்தில் அறிமுகமாகியது. தெற்கில் மழை பெய்தால் தான் வடகிழக்கில் தூறல் விழும்.... ஆனால் இன்று அந்த இலக்கு?

இது சார்ந்த ஆரம்ப கால பாடவிதானத் தயாரிப்பின் போதும் – தனிப்பட்ட முறையிலும் நமது கல்வியியலாளர்கள், கல்வி அதிகாரிகள்

மற்றும் "இசையுலக அத்தாட்சி" பெற்றவர்களிடமும் ஒரு வேண்டுகோளை பலமுறை முன்வைத்தேன். அதாவது, மொழிவழி மூலமாவது நமது இவற்றிற்குரிய மரபுரிமையை நிலைபெறச் செய்யலாம் என்பதால் "தமிழிசை அல்லது இசைக்கல்வி என்றும் நடனப்பகுதியை" ஆடல் கல்வி அல்லது, சிங்கள மக்கள் கண்டிய நடனம் என்றும், றுகுனு நடனம் என்றும் அழைப்பது போன்று "தமிழர் ஆடல்" (Thamilian Dance) என்ற மகுடத்திலும் சமர்ப்பித்தால் ஓரளவுக்காவது நமது மயப்பட்டதாக இருக்குமே என்பது தான் எனது அந்த வேண்டுகோளின் ஆதங்கமாக இருந்தது. எனினும் அவர்களது மனப்பாங்கின் வெளிப்பாட்டினை விவரிக்க அவகாசம் இல்லை- ஆனாலும் அவர்களிடமிருந்து நான் அறிந்துகொண்ட மிகப்பெரிய ஆளுமைக் கூறு:- அதாவது தமக்குத் தெரிந்ததைத் தவிர நமது இனத்துல்லியப்படுத்தக் கூடிய அது சார்ந்த தேடல்களைச் செய்ய முடியாத சுயஞான சிரோன்மணிகள் என்பது தான். இன்று அவர்களில் பலர் நம்மிடையே இல்லை – இருப்பவர்களாலும் இலங்கையின் கல்விச் செல்நெறியை நிர்ணயிக்கும் "தேசிய கல்வி நிறுவனத்தில்" இடம்பெறும். **ஆதிக்க மேலாண்மையை மரபுரிமையற்ற நிலையில் ஏனென்று கேட்க முடியாத நிலையே உள்ளது.**

எப்படியோ உரிமையற்ற நிலையானாலும் கடமைக்காக என்றாலும் கர்நாடக சங்கீதம், பரதநாட்டியம், கதகளியாடல் என்பன தமிழ் மொழி மூலப் பாடசாலைகளுக்காக அழகியற் கல்வி பாடவிதானத்தில் உள்வாங்கப் பட்டு ஆரம்ப செயற்றிட்டப் பணிகள் நடைபெற்ற காலத்தில் இதற்கான பிரதம தொடர்பாளராக இருந்த காலஞ்சென்ற திரு. பி. டபிள்யு. மக்களுளுவா அவர்கள் ஒரு வினாவை என்னிடம் முன் வைத்தார். அதாவது:– சிவாஜி கணேசன், எம்.ஜி.ஆர். ஆகியோரின் நிழல் கலாசாரம் தானா இலங்கைத் தமிழர் கலாசாரம்? என்பதே அந்த வினா. அவரது இந்த வினாவின் அடித்தள எண்ணக்கரு எனக்குப் புரியவில்லை. தொடர்ந்து அவர் சொன்னார். நீங்கள் இந்த நாட்டின் அசல் உரித்துக்குரிய இனக்குழுமம் என்று உரிமை கோருகின்றீர்களே. அப்படியானால் தென்னிந்தியாவின் கலைவடிவங்களில் மட்டும் முழுமையாகத் தங்கியிராமல் உங்களது அடையாளங்களை வெளிப்படுத்தும் கலை வடிவங்கள் பற்றியும் சிந்திக்க வேண்டாமா? என்பதுடன் தொடர்ந்தும் அவர் கூறியது:–

**கண்டிய நடனத்தின் அடிப்படையான ஒரு சில** அம்சங்களை எமது முன்னோர்கள் இந்தியாவில் இருந்துதான் பெற்றார்கள். எனினும் அதிஷ்ட வசமாக அந்த அம்சங்களை அவர்கள் முழுமையாக அல்லாது, பெரும்பாலானவற்றை உள் வாங்கி தமது மயப்படுத்தத் தவறியதாற்தான் அவர்கள் பின்வந்தவர்களும், அதன் பின் வந்தோரும் ஆக்கித் தந்த பங்களிப் பின் பெறுபேறாக சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஆடல் வடிவமாக எமது சிங்கள கண்டிய நடனம் நிகழ்கிறது, என்றால்"

அவரது இந்த செய்தி நம்மவர்களுக்கு எந்தளவு யதார்த்தபூர்வமான சிந்தனையை ஏற்படுத்தும் என்பது தெரியாது.

அது மட்டுமன்றி, நமது "சுயம்" தென்படாத எந்த ஆடல் முறையும் மக்கள் மத்தியில் இருந்து

அந்நியப்பட்டே நிற்கும். நிற்கிறது. இந்த யதார்த்தத்தை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். **அது நம்மவர்களால் முடியாது. காரணம், "நாம் நாமாக இல்லை.**

**இத்தகைய எதிர்கால நோக்கோடு கூடிய இலக்குத் தவறிய** நிலையில் இருந்து எம்மை நாம் மீட்டெடுத்து செயற்படத் தவறினால் தென்னிந்தியாவில் இருந்து இங்கு இறக்குமதி யாகும். பெரிய திரை, சின்னத்திரை என்பதில் இருந்து தெறித்து விழும், அந்த ஆபத்தான ஆபாசமான குலுக்கல்களும், உலுக்கலும், திமிறலும் தான் அசல் ஆடல் வடிவம் என்று அடுத்த சந்ததிக்கு நாம் விட்டுச் செல்லும் பாழ் பட்டாக அமைந்து விடும். இவற்றிற்கு இங்குள்ள தொலைக்காட்சி சேவைகளின் தொல்லைக் காட்சிகளில் குறைத்து மதிப்பிட முடியாது.

மேலும் நமது கல்வித்திட்டத்தில் அழகி யல் கல்வி ஆரம்பிக்கப்பட்டு ஒரு தசாப்தகால மளவிற்கு "கதகளியாடல்" "பரதநாட்டியம்" கற்கைநெறிகளுக்கான பாடஅலகுகளையும், வினாக்கொத்துக்களையும் நம்மவர்களே தயார் செய்தனர் – ஆனால் என்ன காரணமோ கதகளி ஆடல் இதிலிருந்து புறந்தள்ளப்பட்டு விட்டது. அதன் காரண காரியங்களை இதில் விவரிப்பது நமக்கு நாமே கொள்ளி வைத்த நிலை ஒப்பாகி விடும் அத்தோடு அவகாசமும் போதாது.

எமது உரியகாலம் கடந்து சில காலத்திற் குப் பின்பு பெரும்பான்மை இனத்தவரே இது சார்ந்த கொள்கை வகுக்கும், நெறிப்படுத்தும் பொறுப்பை ஏற்படுத்திக் கொண்டார்கள். அதற்கு அவர்கள் கூறிய காரணம் :– "பரதநாட்டியம்" இந்திய நடனம், நாங்களும் அந்த நிலையில் டிப்ளோமா பெற்றுள்ளோம். ஆகவே பரீட்சை வினாத்தாள்களை நாங்களும் தயார் செய்கி றோம் என்பதே அவர்கள் நிலைப்பாடு, சிங்களமொழியில் ஆக்கப்பட்டு, அதன் மொழி பெயர்ப்பு ஆங்கிலத்திற்கு மாற்றப்பட்டு – அதிலிருந்து தமிழ் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு – என்னைப் போன்றவர்களை அழைத்து அந்த மொழிபெயர்ப்பு வினாத்தாள்களை மீளாய்வு செய்ய பணிக்கப்பட்ட காலங்கள் பல. அதில் நமது பிள்ளைகளுக்கு ஒவ்வாத வினாக்களில் ஒன்றிரண்டைத் தானும் சரிசெய்ய முனைந்தால் அதற்கு மறுப்புக் கூறப்பட்டது. தடுக்கப்பட்டது. அதற்கான காரணம் கேட்டால் அது அவர்கள் தயாரித்தது. அவர்களது அனுமதியின்றி மாற்ற முடியாது என்ற பதில் தான் தரப்பட்டது. எப்படியோ ஒப்பாசாரத்திற்காக எங்களது கையெழுத்தும் பெறப்பட்ட பின் அந்த பரீட்சை வினாத்தாள்கள் அங்கீகரிக்கப்பட்டு விடும். தற்போதைய நிலை எப்படியோ நான் அறியேன். கீழைத்தேய நடனங்கள் என்றால், இந்திய நடன மரபுகளே என்று அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இவற்றிற்கெல்லாம் மூலவிசையாக அமைவது பரதமகரிஷி ஆக்கிய, பரத நாட்டிய வேதம் என்பது தான். எனவே இந்திய நடனங்கள் அனைத்துமே பாரத நாட்டியங்கள் தானே. எனினும், ஆடல் வடிவங்கள் பலவாக உள்ளதுடன் பல்வகை மகுடங்களையும் கொண்டுள்ளன. இவற்றையெல்லாம் "சாத்திரிய நடனங்கள்" என்றே அழைக்கிறார்கள். எனினும் குறிப்பிட்ட ஒரு சாஸ்த்திரிய நடனத்தின் "வரையறை" மற்றுமொரு சாஸ்த்திரிய நடன வகைக்குப் பொருந்தாது. ஆகவே, சாஸ்த்திரியம் என்பது நடனவகைக்கு நடனவகை வேறுபடு

கின்றது. அதற்கும் அப்பால் ஒரு ஆடல் வகையில் ஒன்றுக்கு மேற்பட்ட "ஆற்றுகைப்படுத்தல் முறைகள்"(பாணிகள்) உள்ளன. இப்படியும் பார்க்கும் போது குறிப்பிட்ட அந்த நடன வகைக்குரிய "சாஸ்திரியம்" என்பதும் ஒன்றுக்கு மேற்பட்ட வரையறையாக அமைகிறது. அப்படியானால் சாஸ்திரியம் என்பது ஒன்றா? இரண்டா? அல்லது பலதா?

நமது பாடசாலை அழகியற் கல்வி பாட விதானத்தில் உள்ள "பரத நாட்டியம்" என்ற நிருத்திய ஆடல் வடிவத்தின் "நுணுக்குகளை" உருவாக்கித்தந்தவர்கள் - அதாவது அந்த ஆக்கத்தின் பிதா மக்கள் "தஞ்சை நால்வர்" எனப்படும் சின்னையா, பொன்னையா, வடிவேலு, சிவானந்தம் என்பது வரலாறு. அவர்கள் ஆக்கிய அந்த ஆடல் நுணுக்குகள் இன்றும் அப்படியே உள்ளனவா. தாசியாட்டம் சதிராகி, சதிர்சின்னமேளமாகி, இறுதியில் அழகியல் நாகரீகம் நோக்கிய "பரத நாட்டியமாக அது மாறுபடவில்லையா? மாற்றப்படவில்லையா? அதே போன்றுதான் "சாக்கியார் கூத்து" முறையில் இருந்து பல பரிமாணங்கள் தாண்டிய பின் வடிவமெடுத்தது தான் "கதகளி அல்லது ஆட்டக்கதை" என்ற சேர நாட்டு ஆடல் வடிவம். அதுவும், வடக்கன் சிட்டை, தெக்கன் சிட்டை என்ற இரண்டு பிரதான சமர்ப்பித்தல் (பாணிகள்) முறைகளோடு மட்டுமன்றி அவற்றுக்குள்ளேயும் இன்னும் பல பாணிகளைக் கொண்டுள்ளன. எப்படியும் இவை எல்லாம் ஒரு சேர கதகளி அல்லது ஆட்டக்கதை என்றே அங்கீகரிக்கப் பட்டுள்ளது. சுட்டிகுத்தி, வேசங் கட்டி ஆடுகின்ற மரபு முறையாக கதகளி, செறுதுருத்தி கலா மண்டலம், கொச்சின் "கலாரூபா" நிறுவனங்களில் உள்ளன. எனினும் கடந்த நான்கு, ஐந்து தசாப்த காலங்களாக சமூக மாற்றத்தின் நிலை கருதி கேரளத்திலும், **"கேரள நடனம்"** என்ற தனிநபர் ஆடல் முறைகள் திருவனந்த புரம் சுவாதித்திருநாள் அரச நுண்கலைக்கல்லூரியிலும், இன்னும் பல நிறுவனங்களிலும் கற்பிக்கப்படுகின்றன.

1970களிலிருந்தே "கதகளி" என்ற பெரும் பாகத்திலிருந்து தனிநபர் ஆடல் முறைக் கேற்றதாக என்னால் புத்தாக்கம் செய்யப்பட்டது தான் "கதகளிஆடல்" என்ற தனிநபர் ஆடல் முறை "கதகளிஆடல்" நிர்மாண மார்க்கத்தின் அரங்க வணக்கம் முதல் மேலாட்டப் பதம் வரை, அவற்றிற்குரிய தனித்துவ அடக்கங்கள் பிசகாமல், நமது சுயங்கள் அச்சோட்டாகத் துல்லியப்படக் கூடியதான மொழி வழி பிறழ்வின்றியும் ஆக்கப் பட்டுள்ளது. கடந்த நான்கு தசாப்தகால வரலாறாகும். எனினும் "கதகளி" என்ற மகுடம் இந்தியாவையே குறித்து நிற்கிறது..... ? அதையும் விடுவோம். குறைந்த பட்சம் கால் நூற்றாண்டுக்கு முன்பிருந்த அதே முறைகள் இன்றுள்ளனவா? அவை மாற்றத்திற்குட்படவில்லையா? எனவே அவையும் "சாஸ்திரீயம்" என்றால் இந்தக் காலகட்டத்தில், இத்தகைய புனர்நிர்மாணங் களுக்கும் சமர்ப்பித்தல் முறையிலான மாற்றங் களுக்குப் பிறக்கும் இவை சாஸ்திரியம் என்ற வரையறைக்குள் தானே பேசப்படுகின்றன. அப்படியானால் "சாஸ்திரியம்" என்பதும் கால மாறுபாடுகளுக்கும், சமூக மாற்றங்களுக்கும், பிர தேச அடையாளங்களுக்கும் ஏற்ப மாறுபாடு கொள்வதை ஏற்கத் தானே வேண்டும். அந்த வகையில் ஈழத்தமிழர் பிரதேச அடையாளங்கள் தெரியக்கூடியதாக "ஓராடல் ஆற்றுகை

**முறையை"** ஆக்க வேண்டுமென்றால் "சாஸ்திரியம்" கெட்டுவிடும் மரபை மாற்றலாமா? என்று கேட்கிறார்கள். யாருடைய மரபுக்கு யார் உரிமை கொண்டாடுவது? அப்படியானால் ஈழத்தமிழ் இனத்திற்கு அடிப்படையான மரபு முறைகள் பண்பாட்டுப் பெறுமானங்கள் இல்லையா? எனவே **எம்மை அடையாளப்படுத்தும் ஆடல் துணுக்குகள் அல்லது நமக்கென்றொரு ஆற்றுகைப்படுத்தல் முறையாவது (ஈழத்துப் பாணி) உருவாக்கப்பட வேண்டும் என்ற எண்ணக்கருவின் முகிழ் நிலை, சாஸ்திரியம் என்ற பெயரால் மறுக்கப்படுமானால் அந்த சாஸ்திரியம் உடைத்தெறியப்படவேண்டும். சாஸ்திரியத்திற்கு ஆடல் வடிவமா? அல்லது ஆடல் வடிவத்திற்கு சாஸ்திரியமா? எதற்கு எது இன்றியமையாதது.**

இந்தச் சிறிய தொகுப்பின் நிறைவாக:-

கலை கலைக்காக அல்ல அது மக்களுக்காக, மக்கள் மயப்படாத எந்த கலை வடிவமும் வெற்றுத்தனமான பொழுபோக்கு, போலித்தன கண்காட்சியாகி விடும் என்பதே யதார்த்தம்.

**"ஏதோ ஒரு தொழில் வேண்டும் என்பதற்காக கலைத்துறைக்கு வந்தவனல்ல நான். ஆடல்கலை என்தொழில் அல்ல - அது என் ஆன்மாவுடன் சங்கமமாகி விட்ட எனது வாழ்வியலின் மூலவிசைச்செயற்பாடு என்பேன்.** பொருள் தேடல் மட்டும் தான் எனது வாழ்வின் இலக்கானால் வேறு எத்தனையோ தொழில்வாய்ப்புக்களை என்னால் பெற்றிருக்க முடியும்.

என்னால் தரப்பட்ட மேற்கூறிய குறிப்புக்கள் கற்பனைக் கதையல்ல. அவர் சொன்னார், இவர் சொன்னார் என்று மேற்கோள்கள் பலதைக் காட்டி எழுதப்பட்ட ஆராய்ச்சி கட்டுரையுமல்ல - அரை நூற்றாண்டு கால எனது கலை வாழ்வின் வழித்தடத்தில் ஏறத்தாழ 900க்குமதிகமான அரங்குகளில் சுவடு பதித்த நிலையிலும் நான் பெற்றுக்கொண்ட பட்டறிவின் பெறுபேறுகளாகவே இக்குறிப்புக்களைத் தந்துள்ளேன்.

தென்னிலங்கையின் சித்திரசேனா பணி பாரதமுதல், சித்திராஅல்கம, பெசில்மிரிபான வரை பல அரங்குகளில் எனது குழுவினருடன் சந்தித்த வேளைகளிலும், வட அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் எமது அரங்காற்றுகையின் போது எம்மவர்களுக்கும் அப்பால் வெள்ளையினத்தவர்களும் என்னை நோக்கித் தந்த விமர்சனங்கள் எனது கலைத்துவத்தைப் பற்றியதல்ல - அதற்கூடாக சொல்லப்பட்ட செய்திகளைப் பற்றியுமல்ல - என்னால் சமர்ப்பிக்கப்பட்ட ஆடல் துணுக்குகளின் **"மூலத்தை"** ப்பற்றியதுதான். **"இந்தச் சந்தர்ப்பங்களில் தான் ஈழத்தமிழர் அடையாளம் சார்ந்த ஆடல் வடிவத்தின் வெறுமையை என்னால் உணர முடிந்தது".** எமது ஆடல் உலகைப் பொறுத்தவரை ஓரளவாவது அகலப்பார்வை தேவை, அதற்கு நமது சுயம்சார்ந்த வடிவங்கள் இனங்காணப்பட்டால் தான் நமது தனித்துவத்தை மற்றோரால் அங்கீகரிக்கச் செய்ய முடியும். தனிமரம் தோப்பாகாது. நமது பல்கலைக் கழகங்கள் (வடக்கு, கிழக்கு) நுண்கலைத் துறைகளைக் கொண்டுள்ளன. ஆற்றுகைக் கலைகள் சார்பான ஆற்றுகைக் கலைஞர்கள் உருவாகிறார்களோ? தெரியாது. ஆனால் அது

சார்ந்த பட்டதாரிகள் வெளிவருகிறார்கள் அவர்களால் சமூகத்திற்குக் கிட்டும் விளைபயன்......? ஆடல் உலகில் நாம் நாமாக வேண்டில், இந்தப் பல்கலைக்கழகப்பீடங்கள் இன்றைய கால கட்டத்திலாவது கண் திறந்து நமது சுயம் சார்ந்த ஆக்கங்கள் பற்றி சிறிதளவாவது சிந்தையில் எடுக்க வேண்டாமா? நீண்ட வரலாற்றுப் பெருமை கொண்ட வட இலங்கை சங்கீத சபையினரும், பாடசாலைகளில் கற்பிக்கும் நடன ஆசிரியப் பெருமக்களும் பரீட்சைகளை மட்டும் பிரதானமாக நோக்காமல் இந்த "சுயங்கள் பற்றியும் சிந்தனைக் கொடுத்தால் நமது இனத்துக்குரிய வரலாற்றுப் பெறுமானப் பணியாக அமையும் என்பதே எனது பிரார்த்தனை.

**"கலைகள், இலக்கியங்கள் ஒரு மனிதனைப் பண்புள்ள, ஆளுமையுள்ள, படைப்பாற்றல் கொண்ட பல திறமைகளை உள்ளடக்கியவனாக வளர்க்கும் மூலவேர்கள்"**

# வட மாகாணக் கல்வித் திணைக்களத்தின்
# முழுநிலா நாள் கலைவிழாவின் நிகழ்ச்சிகளில் சில













# வட மாகாணக் கல்வித் திணைக்களத்தின்
# முழுநிலா நாள் கலைவிழாவின் நிகழ்ச்சிகளில் சில













## தென்மராட்சி கல்வி வலயத்தின்
## முழுநிலா நாள் கலைவிழாவின் நிகழ்ச்சிகளில் சில













# முழுநிலா

**திரு.இ. சுபேந்திரன்**
மன்/ தூய யோசவ்வாஸ் ம.வி
விடத்தல்தீவு
(நவோதயா பாடசாலை)

**புவன முழுதும்
புன்னகை சிந்தி
புதுப் பொலிவோடு
புது மலராய்
முத்துச் சுடர் போல
முழு நிலவாய்
புவனம் முழுவதும் வலம் வரும்
முழு நிலாவே!**

**நீலவான் கடலுக்குள்
நித்தம் மூழ்கும் வெண்ணிலாவே
சத்தம் இல்லாது வந்து
முத்தம் தந்து விட்டு மறைகிறாயே
பத்தாம் நாள் முழு மதியே
பக்கத்தில் நான் வரவா?**

**மூவிரண்டு வயதினிலே
முத்துச் சுடர் நிலவினிலே
முற்றத்தில் நானிருந்து
மூதாட்டி சொன்னகதை
மூத்த பிள்ளை சாபத்தால்
முழு மதியே நீ தேய்ந்த கதை –கேட்டு
முத்துக்களாய் கண்ணீர்த் துளிகள்
முட்டி வழிந்தனவே கன்னத்தில்
எட்டி பிடிக்க முயன்றேன்–முடியவில்லை
ஏன்.............
என்னருகில் நீயில்லை.**

அபயம் அபயம் என்று
ஆதி பரமசிவன் காலடியில்
அன்று நீ விழுந்ததினால்
இன்னும் உலவுகிறாய் மேலாக
அன்று முயன்றதினால்
இன்று எத்தனை சாதனை வீரர்கள்
உன்னிடத்தில் வந்தனர்
என்னால் முடியவில்லை
ஏன்.................
நான் ஒரு விஞ்ஞானி அல்லவா?

பாரதி முத்துச் சுடர் கேட்டான்
பாமரர்கள் நிலாச்சோறு உண்ணக்கேட்டனர்
காதலர்கள் கள்ளமில்லா உள்ளம்
உனக்கென்றனர்
காளையர்கள் பெண் உருவில்
உன்னை பார்த்தனர்
காலத்தின்கோலத்தால் கலங்கி நின்றான்
ஏன்?
சில காலத்தில் மறைவதனால்.

பாற்குடமே
அழுத கூற்றோ
வெள்ளிப் பிரம்போ
என்னவென்பேன் உன்னழகை
ஏன் என் அருகில் வரத் தயங்குகின்றாய்?
தண் மதியே
வெண் நிலாவே!

# மாணவப் பருவத்தில் அத்வைத தியானம்

திரு.நா.சிவநேசன்
அதிபர், யா/ தாவடி இ.த.க.பாடசாலை,
கொக்குவில்.

தேகத்திற்கு தேக அப்பியாசம் எவ்வளவு அவசியமோ அதுபோல அகத்திற்குத் தியானப்பயிற்சி மிக அவசியமானதாகும். தியானம் என்ற சொல்லில் வரும் தி – பேரறிவு, யானம் என்பது பயணம், தியானம் என்றால் பேரறிவை நோக்கிய பயணம். அகவிழிப்பு ணர்வின் மூலம் நமக்குள் நாம் செல்வதே தியானம். முடிவாகச் சொல்வதாயின் ஆன்மாவிற்குள் நாம் செல்லும் பயணம் எனலாம்.

அத்வைதம் என்பது உண்மை ஒன்று. அதுதான் பிரம்மம் (கடவுள்) எனப்பெசும் கொள்கையாகும். அத்வைதம் வேதத்தைச் சார்ந்ததே. உத்தரமீமாம்சை எனப்படும். ஞானகாண்டமாகிய உபநிடதப் பொருளை அடிப்படையாக வைத்து உருவாக்கப்பட்டது. தீப்பந்தம் ஒன்றை வைத்து சுழற்றும் போது நெருப்பு வளையம் ஒன்று தற்காலிமாகத் தோன்றும். இதுபோலவே இருக்கும் பிரமத்தை ஆதாரமாக வைத்து மாயையால் இல்லாத உலகம் தோற்றுகின்றது.

பெருநெருப்பிலிருந்து நாலாபுறமும் தெறிக்கும் பொறிகள் நெருப்பே. அறிவே சொரூபமாகிய பிரம்மத்திலின்றும் (கடவுள்) அறிவுப்பொறிகள் அனேககோடி சீவர்கள் உருவாகக் காரணமாகின்றது. இந்த அற்ப அறிவுடைய சீவர்கள் தேகத்தையே நான் எனக்கருதி நோய், மூப்பு, சாக்காடு என்பவற்றை ஏற்றுக்கொள்கின்றனர். இதுவே மாயா உலக வாழ்க்கை ஆகும்.

இந்த சீவன் தேகத்திற்குரிய மரணத்தை அறிவாகிய தான் என அபிமானிக் கின்றான். ஆனால் இவன் தேகமல்ல, மனமல்ல, புத்தியல்ல, அகங்காரமல்ல. தான் அறிவு வடிவமாகிய பிரம்மம் (கடவுள்) என்பதை அறியான். இவன் பிரம்மமாகிய கடவுளிடம் இருந்து தேகத்துள் புகுந்தவன். தேகவடிவில் இவன் கடவுளிடமே சேரவேண்டும். தேகத்தை விட்டு கடவுளின் வடிவமே நான் என்று இடைவிடாது தியானம் செய்யவேண்டும்.

அத்வைத தத்துவத்தை உலகிற்கு வழங்கியவர் ஆதிசங்கரர் பதினாறு வயதிற்குள் அத்வைதம் என்னும் தத்துவத்தை ஸ்தாபித்துக் கோடானுகோடி உள்ளங்களில் ஞான அனுபூதி நிலையை ஏற்படுத்தியவர் இவர். இதுவரை இவ்வையகத்தில் தோன்றிய அத்தனை உயர்ந்த போதனைகளையும் தனது அத்வைத நெறிக்குள் அடக்கிக் காட்டியவர். குமரி முதல் காஸ்மீரம்

வரை பாதயாத்திரை சென்று பலவாதப் போர்களைச் சந்தித்து வென்று பல்வேறு அற்புதங்களை நிகழ்த்தி எம்மையும் ஆன்மீகப் பெருங்கடலில் அத்வைத நெறி மூலம் எளிமையாகப் பயணம் செய்ய உதவியவர்.

இறைவன் ஒன்று என்பதை சம்பந்தப் பெருமான் பின்வருமாறு பாடுகின்றார்.

**"ஒருவனாகி நின்றான் இவ்வுலகெலாம்**
**இருவராகி நின்றவர்க் கறிகிலான்.**
**அருவராரவர் ஆர்த்தனார்கழல்**
**மருவுவார் அவர் பாவம் பறியுமே"**

உள்ள பொருள் ஒன்று என்பதை வலியுறுத்தும் மாணிக்கவாசகரும் "இமைப் பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான்" எனக்குறிப்பிடுகின்றார்.

சர்வம் பிரம்ம சொரூபம் என சங்கரர் வலியுறுத்துகின்றார். நான் கடவுள் என்ற நிலையை விளக்குகின்றார். பஞ்சமா பாதகங் களையும் பல சாதனைகளின் ஊடாகக் களைந்த, கடந்த மனிதன் உள்ளத்தில் பிரம்ம சொரூபம் வெளிப்படும். நானும் அந்தப் பிரம்மமும் (கடவுள்) வேறல்ல. ஒன்றுதான் என்ற நிலையை சாதகன் அடைவான். நான் இறைவன் என்பதை உணர்வான்.

ஓசோ மனிதனின் உடலில் 112 இடங்களில் தியான மையங்களைச் சொல்கிறார். எவருக்கு எது சுகமோ அவ்விடத்தில் மனதை நிறுத்தி தியானம் செய்யுமாறு சொல்கிறார். 112 இடங்களிலும் இருப்பது ஒன்று. தெய்வம் பல அல்ல. ஒன்றுதான். 112 இடங்களும் உடலில் மனம் அசைவற்று நிற்கக்கூடிய சக்திவாய்ந்த இடங்கள். இம்மையமொன்றைத் தெரிந்து மனதை அதில் நிறுத்தித் தியானிக்க மனம் அழிந்துவிடும்.மனதற்ற பரிசுத்த நிலை உருவாகும்.

அறிவானது மூலாதாரத்தில் குண்ட லினி சக்தி என்ற பெயரோடு தமோ குணத்தின் கீழ் பூரண அறிவற்ற நிலையில் அடங்கி இருக்கிறது. இது மூலப்பதி எனவும் தமோ குணம் மூடம் எனவும் அழைக்கப்படும்.

தியானம். விசாரஞானம்,பக்தி அல்லது யோகம் மூலம் அப்பியாசிக்கும் சாதகனின் குண்டலினி சக்தி முள்ளந்தண்டு வழியாக மேலுயரும் மூலாதாரம், சுவாதிஸ்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆஞ்ஞை, துரியம், துரியாதீதம் ஆகிய எட்டு ஆதாரங் களையும் படிப்படியாக அடைய சத்துவகுணம் மேலோங்கிச் செல்லும்.

மூலாதாரம் உயிர் இயக்கமையம்.இந்த இடத்தில் மனம் குழப்பநிலையில் இருக்கும். மூலதாரத்திலிருந்து குண்டலினிசக்தி மேலேழ அயராவிழிப்பு நிலை கிட்டும். ஆன்மாவை மனம் கவனிக்கும். நிகழ்காலத்தில் வாழ்ந்து கொள்வோம். குண்டலினிசக்தி ஆஞ்ஞையை (வெற்றி) அடையும் போது தூக்கத்தில் பெறும் நிலை கிட்டும். மனத்தின் புயல் சுழல் வேகம் குறையும். படைப்பாற்றல் பெருகும். மனதை ஒருமுகப்படுத்தல் கைவரப்பெறும். ஜீவஅணு (விந்து) சேமிக்கப்பட உடல்வலு அதிகரிக்கும். ஓமோன்கள் உடலில் சீராகும்.

ஆஞ்ஞாசக்கரத்திலிருந்து மனம் படிப் படியாக துரியத்தை (உச்சி) நோக்கிக் கிளம்பி மையம் கொள்ளும். துரிய தவம் இதுவே. ஜீவசக்தி தலை உச்சியில் குவிதலே இது. மனம் ஆழ்ந்த அமைதி பெற்று எங்கும் ஓடமால் நிற்கும். தன்னம்பிக்கை வலுப்படும்.

நாலுதிசை எட்டுத்திக்கு பதினாறு கோணம், எங்கும் ஒன்றாய் முட்டித்தும்பி முளைத்தெழும்" என்ற நிலை கிட்டும். உடல் கடந்த ஏகநிலைத்தியானம் கிட்டும். இதில் பேரின்நிலை பூரணமாக கைவரப்பெறும். எல்லையற்ற பூரணப்பொருளான சுத்தவெளி யோடு இணைவீர்கள். இப்பேரின்ப நிலை அடைவதே. மனிதப்பிறவி எடுத்ததன் நோக்க மாகும்.

இறுதி நிலை துரியாதீதம், தலை உச்சியி லிருந்து ஒரு அடி உயரத்தில் இம்மையம் உண்டு. உடலைத் தாண்டி பிரபஞ்சத்தைத் தாண்டி பிரம்மத்துடன் இரண்டறக்கலக்கும் நிலை. இந்நிலையில் பூரணப்படும் பொழுது பொய்யான இவ்வுடலை ஞானிகள் களைந்து விடுவது வழமை.

மாணவப்பருவத்தில் மாணவர்கள் சுவாமி அறையிலிருந்து " சிவசிவ" என காலை மாலை வேளைகளில் 108 முறை நாமஜெபம் செய்துவர சித்த சுத்தி ஏற்பட உங்கள் பக்குவத்திற்கு ஏற்ப குரு ஒருவர் உங்கள் முன்வருவார். உங்கள் தியான நிலை வளர உதவுவார்.

**மாணவர்கள் தியானம் செய்வதால் ஏற்படும் நன்மைகள்**

1. குரு உங்களைத் தேடிவருவார்.
2. நுண்ணறிவு விருத்தியேற்படும்.
3. சரியான தீர்மானங்கள் எடுக்கும் திறன் வளரும்.
4. மன அமைதி ஏற்பட்டு மனம் அசை வற்று நிற்கும்.
5. நிறைவான மனம் உருவாகும்.
6. இரத்த அழுத்தம் போன்ற நோய்கள் வராது அல்லது நீங்கும்.
7. கார்மோன்கள் சீராகி நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.
8. ஆக்கமலர்ச்சி சிந்தனை வெளிப்படும்.
9. தேஜஸ் பெருகும்.
10. மனவியாதிகள் அகலும்.
11. பிறவிப்பயன் கிட்டும்.
12. இறை தரிசனம் கிட்டும்.

# இது எங்கள் தேசம்

பண்டைநகர் நாயகன்
பாடலாக்கம்:- திரு. அல்வின் எட்வின் பீரிஸ்
"அன்பகம்"
புனித அந்தோனியார் வீதி,
பண்டத்தரிப்பு.

**இது அன்னை தேசம்**
**நாம் பிறந்த பாசம்**
**இம்மண்ணின் வாசம்**
**எம் உயிரின் நேசம்**

**இந்து சமுத்திரம்**
**ஈன்றெடுத்த முத்து ~ இது**
**இனங்கள் அனைத்தும்**
**கட்டிக் காக்கும் சொத்து**
**இலங்கையென்பதே**
**நம்நாட்டின் பேரு ~ இது**
**எங்கள் தேசம்**
**என்று நீயும் பாடு ~ இது அன்னைதேசம்**

**பழங்குடி மக்களும்**
**பங்கு கொள்ளும் உரிமை**
**பாரினில் வேறு**
**இல்லை இதற்கு உவமை**
**மொழியினபேதம்**
**பேசுதல் இங்குமடமை**
**யாவரும் ஒன்றாய்**
**வாழ்வதே எங்கள் திறமை ~ இது அன்னை தேசம்**

முகில்தொடு மலையும்
மூங்கில்காடும்
மயில் ஆடும் வனமும்
குயில்பாடும் சோலையும்
கொண்டது எங்கள் நாடு ~ இது அன்னை தேசம்

வலைபாயும் கடலும்
வயலோடு வரப்பும்
விலைகூறமுடியா
இயற்கையின் வனப்பும்
கொண்டது எங்கள் நாடு~ இது அன்னை தேசம்

பாரதம் கூறும் சீதையின் நினைவும்
ராவணன் கொய்த பாறையின் வடிவமும்
சிகிரியா குன்றின் ஓவிய அழகும்
சிங்க வனத்தின் இயற்கை வளமும்
கொண்டது எங்கள் நாடு ~ இது அன்னை தேசம்

கடல்வளம் சேர்க்கும் வலியோர் உழைப்பும்
வயல்வளம் காணும் உழவர் உயர்வும்
தொழில்வளம் சேர்க்கும் தோழர்கள் வாழ்வும்
தொழில்நுட பத்துறையில் அறிஞர்கள் வனப்பும்
கொண்டது எங்கள் நாடு ~ இது அன்னை தேசம்

ஆசியாவின் ஆச்சரியமாக
காசினியெங்கும் காட்சிகளாக
நாம் ஒன்று சேர்ந்து வாழ்ந்திட வேண்டும்
நம் நாட்டின் பெருமை உயர்ந்திட வேண்டும்
தாயால் பெருமை அறிந்து கொண்டோம்
தாயகம் உயர உழைத்து நிற்போம்.
இனங்கள் அனைத்தும் இணைந்து கொள்வோம்
இலங்கையர் என்ற கௌரவம் காப்போம்.

# இசையும் ஆளுமையும்

**திருமதி சுகன்யா அரவிந்தன்**
விரிவுரையாளர்,
இசைத்துறை,
யாழ் பல்கலைக்கழகம்.

உலகப் பொது நிலையில் வைத்து இனங் கண்டு கொள்ளக்கூடியதாகவும், புரிந்து கொள்ளக்கூடியதாகவும் வாழ்வுக்கு மனிதன் செய்யும் வியாக்கியானமே கலையாகும். மனிதனது கருத்துக்கள் படிமங்களாக கலையில் படைக்கப்படுகின்றன. உணர்ச்சியைத் தூண்டுவதே கலைகளின் நோக்கமாகும். இவ்வுணர்வு நிலையானதொரு மனப்பதிவை ஏற்படுத்தி சிந்தனையைத் தூண்ட வேண்டும்.சிந்தனையும் உணர்வையும் தூண்டுவனவே கலைப்படைப்புக் களாகக் கருதப்படும். உணர்ச்சிகளின் பிரதி பலிப்பே கலையின் ஜீவன். பொருள் விளங்குமுன் அது உள்ளத்தைத் தொட வேண்டும்.

கலை எதையும் உணர்வு பூர்வமாக அணுகும் பான்மையானது. அதாவது aesthetic activity என்று சொல்லாம். இந்த வகையில் இசை என்னும் கலைவடிவம் உணர்ச்சிகளோடு மிக நெருங்கிய தொடர்பு டையது. லலித கலைகளில் ஒன்று இசைக்கலை. இது கலைகளுள் உயர்ந்தது. பழமையானது. இன்பம் தருவது. இசைக்கு இசையாதவர்கள். இவ்வுலகில் எவருமிலர். இசைக்கலை உணர்வு களின் மொழியாகும். கேட்போர் உள்ளங்களைக் கொள்ளை கொண்டு அவர் தமை நாத வெள்ளத்தில் திளைக்கச்செய்யும் சக்தி படைத்தது. நாதம் மட்டுமன்றி நமது கருத்துக்கும் இனிமை கூட்டுகிறது.

கலையின் சிறப்பு புறப்பொருளிலே அவ்வளவாக இல்லை. ஒருவனுடைய உள்ளத் துணர்விலே, எண்ணத்திலே தான் அதைச் சிறப்பாகக் காணமுடியும் என்கிறார் கலை விமர்சகர் “ஹேவல்”. இது இசைக்கு மிகவும் பொருந்துவதான ஒன்றாக அமைகின்றது. கவின் கலைகளுக்குள் அருங்கலையாக மதிக்கப் படுவது இசைக்கலை எனத் தொல்காப்பியர் எழுத்ததிகார நூன்மரபில் சித்திரித்துள்ளார்.

பிற உயிரினங்களின்றும் மனிதனை மொழி வேறுபடுத்துவது போன்றே இசையும் மனிதனுக்கே உரிய சிறந்த கலையாகும். மனிதனின் வாழ்க்கையில் பிறப்பு முதல் இறப்பு வரை இசை இடம் பெற்றிருப்பதைக் காணலாம். ஆதி மனிதனிடம் அறிவைக் காட்டிலும் உணர்வே மிகுந்திருந்ததாக மானிடவியலாளர்கள் கூறுவார்கள். தமிழ் சமஸ்கிருதம் ஆகிய மொழிகளிலும், முதல் இலக்கியங்களாக் கருதப்படும் ரிக் வேதமும் மற்றும் பண்டைத்தமிழ் நூல்களும் செய்யுள் வடிவிலே ஒரு வகை இசையுடன் இதக்கூடியவையாகவே இருப் பதைக் காணலாம்.

கவிதையில் எப்படிக் கவிஞன் வழங்கும் செம்பொருள் தாங்கிய எழிலார்ந்த சொற்கள் கேட்போன் மனதில் படிந்திருக்கும் உணர்வு களைத்தட்டி எழுப்பிப் பேரன்ப ஸ்வரங் களின் அமைப்பு (Melody) நாதோபாசகனான பாடகனால் உருக்கொடுக்கப்பட்டுச் செவி வழியே பாயும் போது கேட்கின்ற ரசிகனின் உள்ளத்திலே அமைந்துகிடக்கும் நிலையான உணர்வுகளுக் கேற்ப அமைதியான ஆனந்த பரவச நிலையை எட்டிப்பிடிக்கும் ஒரு கனவுலகத்திற்கே இட்டுச் செல்லும் ஆற்றல் வாய்ந்ததாக ஆகிவிடு கின்றது. ரசிகனின் அனுபவத்தைப் பற்றிக் கவி ரவீந்திரநாத் தாகூர் அவர்கள் சிறப்பாக கூறி இருக்கின்றார்கள்.

சங்கீதமென்பது கீதம், வாத்யம், நிருத்தம் என்ற மூன்றின் கூட்டு என்பர். சாரங்கதேவர் (சங்கீத ரத்தினாகரம்) நிருத்தம் வாத்தியத்தை அனுசரித்தும், வாத்தியம் கீதத்தை அனுசரித்தும் நிகழ்வதால் கீதமும் முதன்மையான இடத்தினைப் பெறுகின்றது. இதை "மார்க்கம்" (Classical Music) என்றும் "தேசி" (Popular Music) என்றும் இருவகையாகக் கொள்வர்.

ஸ்வரங்களைப் பல வகைகளில் சேர்த்து அவற்றை ஆரோகண அவரோகண முறைகளில் பாடும்போது வெவ்வேறு பாவங்களைக் குறிப்பனவாக இசை வாணர்கள் கண்டு அவற்றை இருபத்திரண்டு ஸ்ருதிகளாகக் கணக்கிட்டனர். அச்சுருதிகளின் பெயர்களிலிருந்தே அவை எப்படிப் பல்வேறு ரச பாவங்களை எழுப்ப வல்லன என்பதை நாம் காணலாம். அமெரிக்க உளவியல் நிபுணரான " மாகஸ் சோண்" – Max Schoen – இசை கேட்பவரின் உள்ளத்தில் எழுப்பப்படும் உணர்வுகள் வகைப்படுத்தியு ள்ளதைக் காணும்போது இசைக்கும் ரசானுப வத்திற்கும் உள்ள இயைபு நம்முன்னோர் கண்டவற்றோடு ஓரளவு பொருந்தியிருப்பதைக் காண முடிகின்றது என்கின்றார்.

இசை ரசக்கிளர்ச்சிக்குக் காரணமானது என்ற ஓர் கூற்று பல இடங்களிலே காணப்படு கின்றது. மாதவியும் கோவலனும் அகப்பொருட் சுவை மிக்க வரிப்பாட்டுக்களைப் பாடிக்கொண்டு வீணையை வாசித்ததன் விளைவாக அவர்களு ள்ளத்தில் அவ்விசை எற்படுத்திய உணர்வு மாற்றத்தைக் காணும் போது இசைக்கும் ரச வெளிப்பாட்டிற்குமுள்ள நெருங்கிய தொடர்பைக் காணமுடிகின்றது.

பல்வேறு பண்புகள் கொண்ட சிறந்த ஆளுமையுள்ள பூரண மனிதனை உருவாக்கு வதை நோக்காகக் கொண்ட கல்வியின் தேவையை இசை நிறைவு செய்கின்றது. அழகியல் வளர்ச்சியிலே தான் மனிதனின் முழுமையான வளர்ச்சி தங்கியுள்ளது என கிரேக்கத்தின் அறிஞர் பிளேட்டோ கூறுகின்றார்.

இசையானது ஒரு கலாச்சாரத்தினை (Cuture), ஆக்கத்திறன் (Creativitnrsss), சிந்தனையை மனத்தொருநிலைப்படுத்தலை (Concentration), சகோதரத்துவத்தை (Comradeship) வளர்க்கின்றது எனலாம். இயல், இசை, நாடகம் என்னும் மூன்றினுள்ளும் இசை நடுநாயகமாக போற்றப்படுவதற்கு காரணம் இசையின் சிறந்த இயல்புகளேயாகும். இசையின் மூலம் உடல்விருத்தி, உளவிருத்தி, நற்பண்புவிருத்தி, நயப்புணர்ச்சி விருத்தி,

ஆக்கச்சிந்தனை விருத்தி, வெளியிடும்திறன விருத்தி (இசையை தமது சொந்தக் கற்பனையில் உருவாக்கும் திறன்), விமர்சனத் திறன் விருத்தி என்பன வளர்க்கப்படுகின்றன. இனம், மதம், மொழி என்ற வேறுபாடின்றி உலக மக்களை ஒன்றிணைத்து வலிமை வாய்ந்த ஒரு தொடர்புச் சாதனமாக இசை விளங்குகின்றது.

படைப்பு ஆற்றல்களை வளர்ப்பதுடன் உணர்ச்சிகளுக்கும் பயிற்சியளிக்கமுடியும். உணர்ச்சிகளை வளப்படுத்தி உள்ளக்கருத்துக் களை வெளியிட உதவும் பல நிலைகளை நுண்கலைப் பாடங்கள் மூலமாகக் கற்பிக்கலாம். மனித உணர்ச்சிகளை வெளியிடவும், நடத்தை களுக்குப் பயிற்சி அளிக்கவும் இசை பலம் பொருந்திய ஊடமாக விளங்குகின்றது. இன்பத்தை வெளியிடும் சாதனமாக விளங்கும் இசை துன்பம் ஏற்படும்போது அதனை விலக்கி விடவும் செய்கின்றது. அதுதான் பாரதி, "துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ இன்பம் சேர்க்க மாட்டாயா" என்று பாடுகிறார். மனமுறிவு களிலிருந்து மீட்சி பெறுவதற்குரிய சீராக்க சாதனங்களுள் இசையின் முக்கியம் இன்று நன்கு உணரப்பட்டு வருகின்றது.

குழந்தைகளுக்குரிய கலைத்திட்டத்தில் இசைக்கு அளிக்கப்படும் முக்கியத்துவத்தின் மூலமே அவர்களது ஆளுமையை சிறந்த வகையிலே வளர்த்தெடுக்கமுடியும். ஒருவனது சிந்தனை ஆற்றல் படைப்பு ஆற்றலை வளர்த் தெடுப்பதுடன் உணர்ச்சிகளுக்கும் பயிற்சியளிக்க முடியும். உணர்ச்சிகளை வளப்படுத்தி உள்ளக் கருத்துக்களை வெளியிட உதவும் பல நிலை களை நுண்கலைப் பாடங்கள் மூலமாகக் கற்பிக்கலாம். மனித உணர்ச்சிகளை வெளியி டவும் நடத்தைகளுக்குப் பயிற்சி அளிக்கவும் இசை பலம் பொருந்திய சாதனமாக விளங்கு கின்றது.

ஆரம்பக் கல்வி நிலையிலே பிள்ளை களிடம் இயல்பாகவே தனக்கே உரித்தான முறையிலே சுய வெளிப்பாடுகள் தோன்றும். இந்த சுய வெளிப்பாடானது ஒருவனது அழகியல் வளர்ச்சியில் முக்கிய இடம் பெறுகின்றது என்று அழகியல் கல்வியியலாளர்கள் குறிப்பிடு கின்றனர். ஒருவனது ஆக்கசிந்தனை, நயப்பு, திறன்கள், என்பவற்றின் வளர்ச்சியில் இந்த சுயவெளிப்பாட்டின் தாக்கம் அதிகமாக காணப்படும் என்கின்றனர். "ஹேபர்ட் ரீட்" என்ற கல்வியியலாளர் கூறுவது போல தனது உள்ளத்து உணர்வுகளை வெளிவிடுவதற்கு பிள்ளை உந்தப்படுகின்றான். இந்த வெளிப் பாட்டின் மூலம் மகிழ்ச்சியும், திருப்தியும் உளச்சமநிலையும் பெறுகின்றான்.

பிள்ளை சுதந்திரமாகச் செயற்படும் பொழுது இயல்பாகவே வெளிப்படும் வாய்ச்சத்தங்களும் ஒலிகளும், முகபாவங்களும், பற்பல கோஷங் களும் உபகரணங்களூடாக வெளிப்படுத்தப்படும் சத்தங்களும் பிள்ளை சார்ந்த அழகியல் தொடர்பினை இயல்பாகவே புலப்படுத்துகின்றது. பிள்ளையின் இந்த ஞானத்தையும் கற்பனை யையும் ஓர் ஒழுங்கு நிரற்படுத்தி வழிப்படுத்து வதன் மூலம் அவனை ஓர் சிருஷ்டிகர்த்தா வாக்குகின்றோம். சப்தத்தையும் நாதத்தையும் ஊடமாகவும் கொண்டு பிள்ளை செய்யும் சுயவெளிப்பாடு சிருஷ்டிக்கப்பட்ட இசை எனப்படும்.

இவ்வாறாக ஒழுங்குபடுத்தலின் போது ஒழுங்கமைப்பு, குரல் கட்டுப்பாடு, உணர்ச்சிக் கட்டுப்பாடு என பல வழிகளில் குழந்தை வளப்படுத்தப்படுகின்றான். இது தவிர இசை கேட்டற் செயற்பாடுகளின் மூலம் அவதானம், கிரகிப்பு, மனவொடுக்கம் முதலிய பல சிறந்த பண்புகளை நாம் வளர்த்துக்கொள்ளமுடியும். மற்றும் கற்றலுக்குரிய ஒரு அமைதியான சூழலை இவன் மனதில் ஏற்படுத்திக்கொள்ளக்கூடிய நிலைமையை கேட்டற் செயற்பாடுகள் மூலம் விருத்தி செய்துகொள்ளலாம். ஓடிக்கொண்ருக்கும் இயந்திரமயமான உலகிலே மன ஆறுதலையும் உளவிருத்தியையும் இந்த இசைக்கலை ஏற்படுத்தி நிற்கின்றது. சிறந்த இரசனை மட்டமுடைய மாணவன் ஆளுமையுள்ளவனாகவும் சிறந்த கற்றலுடன் கூடிய ஒழுக்கமுள்ளவனாகவும் கட்டுப்பாடு விழுமியங்களை இயல்பாகவே பின்பற்றுபவனாகவும் இருக்கக்கூடிய இயல்பினைப் பெற்றவனாக இருப்பான்.

இந்த இசையைக் கூட்டாகவும் தனியாகவும் இசைக்கமுடியும். இது கூட்டிசை என்றும் தனியிசை என்றும் குறிப்பிடப்படும். கூட்டிசையானது குழு இயல்பூக்கங்களுக்கும் உளவியல் சமூகத்தொழிற்பாடுகளுக்கும் உதவும். சமூகத் தொடர்புகள் யாவை எனப்பார்த்தால் குழு இசையில் பல மாணவர்கள் கலந்துகொள்ள வசதி ஏற்படுகின்றது. இதனால் இவர்களது சமூகத்தேவை பூர்த்தி செய்து கொள்ளப்படுகின்றது. சமூகத் தேவை, சமூகத்தொடர்பு என்பது மாணவர்கள் குழுவாக இயங்கும் போது தலைமை தாங்கும் விருப்பம், வெற்றி தோல்விகளைச் சமமாக எண்ணும் பண்பு, கீழ்ப்படிதல் முதலியனவாகும். ஒரு பிள்ளையின் அடிப்படைத்தேவைகள் பூர்த்தியாகும் போது தான், அப்பிள்ளை முழுமையான ஆளுமையுள்ளதாக வளர முடியும். பிள்ளையின் பொதுவான வளர்ச்சிக்கு இசை ஓரளவு உதவினாலும் அதன் உளவளர்ச்சிக்கு இசை பெரிதும் உதவுகின்றது என்பது உளவியலாளர்களின் உறுதியான கருத்தாகும்.

சங்கீதம் பாடும்போது ஒருவர் தமது சாரீரத்தைக் கட்டுப்படுத்தி தாள லயம் பிசகாது ஸ்வர அட்சரம் கலையாது சங்கீத விதி முறைக்குஏற்ப இசைக்கவேண்டும்.ஆகவே சங்கீதப்பயிற்சி ஒருவரிடத்திலே அத்தகைய தற்கட்டொழுங்கை ஏற்படுத்த முக்கியமான ஒரு காரணியாக விளங்குகின்றது. தற்கட்டொழுங்கை ஒருவரின் ஆளுமை வளர்ச்சிக்கு அவசியமான பண்பாகும். சங்கீதப் பயிற்சி இன்னும் பல திறமைகளை ஒருவரிடத்திலே ஏற்படுத்தும் கற்றலுக்கு உதவும் காரணிகளில் அவதானம், கற்பனை, ஞாபகம் ஆகியவை முக்கியமானவை. இக் காரணிகள் வளர்ச்சியடைவதற்கு சங்கீதப்பயிற்சி பெரிதும் உதவும். சங்கீதம் கற்கும்போது பல உருப்படிகளை மனனம் செய்வதால் ஞாபகத்தன்மையின் திறன் அதிகரிக்க வாய்ப்பு ஏற்படுகின்றது. கற்பனா ஸ்வரங்கள் பாடுதல் என்பது சங்கீதத்தில் மிக முக்கியமான ஓர் அம்சமாகும்.சாரீர சாதனைகள் ஒருவரிடத்தில் அவதானத்தையும், தற்கட்டொழுங்கையும், தனது சக்தியை சுயமாக நெறிப்படுத்தும் பண்பையும் வளர்க்கின்றன. கற்பனை மட்டும் பிறரிடத்தில் உணர்வு களைத்தூண்ட உதவாது. தனது எண்ணக் கருவை மீளுற்பத்தி செய்யும் திறன் கலைஞனுக்கு இருக்கவேண்டும்.

எனவே தனது அனுதாபம் தந்த உணர்வை மீளுற்பத்தி செய்வதற்கு நுட்பம் அவசியம். இந்த நுட்பங்கள் காலத்தால் விருத்தி செய்யப் பட்டுள்ளன.

அனைத்துக் கலைகளுக்கும் பொதுவாகக் கருதப்படும் கோட்பாடுகளான ஐக்கியம் (unity), இசைவினை (Coherence), அழுத்தமும் தெரிவும் (Emphasis and selectivity), அளவுப் பரிமாணம் (Proportion) மீள் ஒழுங்கு (Re-arrangement) செறிவாக்கம் (inten sification) என்பன இசைக் கலைக்கும் பொருந்துவதாய் அமைந்து அதன் அம்சங்களைத் தெளிவு படுத்துகின்றது.

" கலை எனப்படுவது உணர்வின் வெளிப்பாடு.

அது உணர்வை வெளியிடுவதுடன் பிறருக்கும் அவ்வுணர்வை ஊட்டும் பெருமையு டையது" , என்பார் "டால்ஸ்டாய்"

"Art is the language of feeling it not only expression but aiso transmission if feeling"

வாழ்க்கை என்பதே கலையாக மிளிர வேண்டும். இசை மனிதத்தன்மையின் மேல் நிலைக்கு இட்டுச்செல்வதாக இருக்க வேண்டும். கலையின் முக்கிய குறிக்கோள் பொழுது போக்கிற்காக அமைந்து இன்பம் பயப்ப பதாகவோ அறிவூட்டுவதாகவோ இருப்பதல்ல. நம்மையறியாமலே நம்மிடம் ஆத்ம சுத்தியை ஏற்படுத்துவது. இதன் மூலம் ஒரு ஆளுமை மிக்க சமூகத்தினைக் கட்டியெழுப்புவதுமாக அமைய வேண்டும்.

இசை என்பது வெறும் ஒலி மட்டுமல்ல! கற்பனை வீதியிலே வரும் உணர்ச்சி யாத்திரை யுமல்ல. சங்கீதம் கலைஞர்களுக்கு மட்டுமல்ல சமூகத்திற்கு ஒரு உயிர் கொடுக்கும் ஜீவனாக இருக்கின்றது. இசையின் பௌதீக மூலங்கள் நமக்கு உணர்த்தும் உண்மை இதுதான்.

***ஆதார நூல்கள்:-***


1) "இசையும் சமூகமும்" - சபா ஜெயராசா - சேமமடு பதிப்பகம்.

2) "கர்நாடக இசை வளர்ச்சி" - கர்நாடக சங்கீத ஆசிரியர் கல்விப் பாடநெறி தொலைக்கல்வித்துறை - தேசிய கல்வி நிறுவகம்.

3) "அழகியலும் உடற்கல்வியும்" - ஆரம்ப ஆசிரியர் கல்விப்பாடநெறி - தொலைக் கல்வித்துறை -தேசிய கல்வி நிறுவகம்.


"இசையால் வசமாகா இதயமெது"

# கிளிநொச்சி கல்வி வலயத்தின் முழுநிலா நாள் கலைவிழாவின் நிகழ்ச்சிகளில் சில















# துணுக்காய் கல்வி வலயத்தின்

# முழுநிலா நாள் கலைவிழாவின் நிகழ்ச்சிகளில் சில











## தீவகக் கல்வி வலயத்தின்
## முழுநிலா நாள் கலைவிழாவின் நிகழ்ச்சிகளில் சில













# நாட்டியக் கலையும் தமிழ் இசையும்

**செல்வி.வ.சஜீவா**
ஆசிரியை,
வ/மாதர் பணிக்கர் மகிழ்ங்குளம் க.உ.
வித்தியாலயம்

பாலும் சுவையும் போன்றும், உடலும் உயிரும் போன்றும் நாட்டியக் கலையில் இசைத்துறை பின்னிப் பிணைந்து காணப்படுகின்றது.பரத நாட்டிய சாஸ்திரமானது கி.மு.2ம் நூற்றாண்டிற்கும் கி.பி.2ம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காரத்திலேயே தோன்றி இருக்கக் கூடும் என நம்பப்படுகிறது. இது நாட்டியத்திற்குத் தேவையான இசை, இசைக்கருவிகள் அவற்றின் பயன்பாடுகள் என்பவற்றைக் கருதுகின்றது. நாட்டிய சாஷ்திரத்தில் இசைக் கருவிகளை தந்திக் கருவிகள், காற்றுக் கருவிகள், தோற்கருவிகள் கைதீதானக் கருவிகள் என அடிப்படைக் கருவி அமைப்புக்களாகப் பகுக்கப்பட்டுள்ளன.

இசைத்துறையினை இந்துஸ்தானிய இசை என்றும் மற்றையதை கர்நாடக இசை என்றும் இரண்டு பிரிவாக வகுத்துள்ளனர். இப்பிரிப்பு முறையானது கி.பி. 13ம் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட காலங்களிலேயே பிரிக்கப்பட்டுள்ளது. தென்னிந்திய பரத நாட்டியத் துறையானது தன்னகத்தே கர்நாடக இசையினையே உயிர் நாடியாகக் கொண்டு விளங்குகின்றது. கர்நாடக இசையினையே உயிர் நாடியாகக் கொண்டு விளங்குகின்றது.கர்நாடக சங்கீதத் துறையானது தமிழ், தெலுங்கு, ஆகிய இரண்டு தென்னிந்திய மொழிகளில் அதிகம் காணப்பட்ட போதிலும் ஆங்காங்கே வடமொழிச் சொற்கள் சிலவற்றையும் கொண்டமைந்துள்ளது.

இந்தியாவில் இன்றும் நாட்டியக் கலையை தஞ்சை, மதுரை, அழகர் கோவில் போன்ற திருக்கோயில்களில் வளர்க்கப்பட்டு வருவதை காணலாம்.நடனக் கலையைக் கோயில்களில் வளர்ப்பதைப் போன்றே இசைக்கலையையும் கோயில்களில் வளர்த்து வருகின்றனர். இறை, இசை இவை இரண்டும் ஒலிநாத அமைப்பில் ஒன்றோடொன்று தனித்துவமான இயல்புகளால் ஒற்றுமைகளைக் கொண்டுள்ளது.

"முத்தொழில் புரிந்து வருவது இறை
முத்தமிழன் மையமாக இருப்பது இசை"

இறைவனே இசை வடிவினன் என்பதனை "ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே" என்னும் அப்பரின் திருத்தாண்டகம் எடுத்தியம்புகின்றது. தமிழிசைத்துறை, நாட்டியத்துறை இவை இரண்டுமே இறைவனிடத்தில் இரண்டறக் கலந்துள்ளது.இதனையே திருஞான சம்பந்தர் "இறைவனே ஆடல், பாடல் வடிவத்தினன்" என்று

அழகாகக் கூறியுள்ளார். இதிலிருந்து இறை வனே ஆடல், பாடல் வேள்விகளை காட்டினார் என்பது புலனாகின்றது. அப்பர் சுவாமிகள் வெப்பு நோயால் பீடிக்கப்பட்டிருந்த போது "தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்....." எனப் பாடியுள்ளார்.

பண்டைக் காலம் தொடக்கம் நாட்டியக் கலையும் தமிழிசைத் துறையும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து காணப்படுகிறது. கி.பி.2ம் நூற்றாண்டில் வாழ்ந்த இளங் கோவடிகள் சிறந்த தமிழ்ப் புலவர் அவரது சிலப்பதிகாரம். இசை, நாட்டியத் துறை முழுவதற்கும் சிறந்த தமிழ்ப் புலவர் அவரது சிலப்பதிகாரம். இசை நாட்டியத்துறை முழுவதற் கும் சிறந்த ஆராச்சி நூலாகக் கருதப்படுகின்றது. சிலப்பதிகார நூல் நாட்டியத்திற்குப் பயன்படும் முத்திரைகள், அபிநயப் பிரயோகங்கள், பக்க வாத்தியங்கள், மேடையில் அமைய வேண்டிய நிலை என்பன பற்றி கூறுகின்றது.

தமிழக வரலாற்றில் இசைத்துறையில் இருண்ட காலமெனக் கருதப்படுவது களப்பிர ராட்சிக் காலமாகும். இக்கால கட்டத்தில் காரைக்கால் அம்மையார் தோன்றி திருவாலங் காட்டு மூத்த திருப்பதிகம் எனும் பதிகத்தினை இசை நயத்துடன் பாடி எமக்களித்துள்ளார். இதன்பின் 7ம் நூற்றாண்டில் பல்லவராட்சிக் காலம் காணப்பட்டது. நாயன்மார்களம், ஆள்வார்களும் சமயவானில் உதித்தார்கள். இவர்கள்

**"நாளும் இன்னிசையால் – தமிழ்**
**பரப்பும் ஞானசம்பந்தனுக்கு**
**உலகத்தவர் முன் தாளம் ஈந்து"**

நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞான சம்பந்தன் எனும் பாடலினூடாக தமிழிசை வளர்க்கப்பட்டது புலனாகிறது.

மாணிக்கவாசகர் அருளிய திருவெம் மானை, திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி என்பன இன்றும் இசைக்கனிவுடன் பாடப்பட்டும், நாட்டியத்தாரகைகளினால் பக்திச் சுவை சொட்டச்சொட்ட ஆடப்படும் வருகின்றனர். தமிழுடன் கலந்த இசையும் நாட்டியக் கலையும் ஒன்றுடன் ஒன்று இணைந்து காணப்படுகின்றது என்பது மறுக்க முடியாத உண்மை.

கவிஞனின் கடமை பாடுவதோடு முடிந்து விடாது. தீரத்தையும் பெருந்தன்மையையும் நினைவூட்டி எதையும் எதிர்நோக்க வல்ல சக்தி மிக்கவனாக மனிதனை ஆக்குவதே கவிஞனின் கடமை மட்டுமல்ல உரிமையும் கூட.

# நினைவுச் சின்ன மரபின் வரலாற்றுப் பின்னணி

**ச.கஜனன்**
ஆசிரியர்,
வ/மதியாமடு விவேகானந்த வித்தியாலயம்,
புளியங்குளம்.

வீரத்தைப் போற்றும் பண்பும், ஆவி பற்றிய நம்பிக்கையுமே நினைவுக்கல் நாட்டுவதற்கு அடிப்படையாயின. வீரத்தினை உயர்வாகக் கருதிய வீரயுகத்தில் தோன்றிய நடுகல் எடுக்கும் வழக்கம் காலப்போக்கில் வேறு சில சமுதாய மதிப்புப் பெற்ற மனிதப் பண்பு களுக்கும் சிறப்பளித்தமையினை நட்பு, மானம், புகழ் ஆகியவற்றிற்காக உயிர் நீத்து நடுகல்லான மாந்தரின் வாழ்வில் நிகழ்ச்சிகள் உணர்த்து கின்றன. நடுகல் எடுக்கும் வழக்கத்தில் ஏற்பட்ட இடமாற்றம் ஆவிக்கொள்கைக்கு வழியமைந்த னைப் “பிரேசர்” (J.G.Frazer) என்ற சமூக மானிடவியல் ஆய்வாளர் இறந்தவனது ஆன்மாவைச் சில சடங்குகள் மூலம் ஓர் குறிப் பிட்ட இடத்திற்கு வரவழைக்கலாம் என்ற நம்பிக்கை உலகமெங்கும் பண்டைய மக்களின் பண்பாட்டில் காணப்படுகின்றது. மேலும் போரில் மாண்ட ஆவி சில நாட்களுக்கு உலகில் உலவுதாகவும் சாவுச் சடங்குகள் கழிந்த பின்னரே வேறு உலகு செல்வதாகவும் நம்பினர். சாவுச் சடங்குகள் நிகழ்த்துவதற்கு முன் கல் நாட்டிச் சடங்கு செய்தால் ஆவியின் ஒரு பகுதி அங்கு தங்குமெனவும் விழாக்காலங்களில் பழம் பிறப்புணர்வுடைய மேலோர் உலகிலுள்ள ஆவி இக் கல்லுக்கு வரும் என்ற நம்பிக்கை வழிபடுபவர்களுக்கு இருந்தது. நடுக்கல்லில் இறந்தோர் ஆவி புகுந்தாக நம்பும் நிலை நடுகல் வழிபாட்டிற்கு வழிகாட்டியமையினை இதன் வாயிலாக உணர முடிகின்றது. இறந்து போனவர்களுடைய ஆன்மாவிற்கு ஆற்றல் அதிகம் எனவும் அது ஆக்க சக்தியாகவும், அழிவு சக்தியாகவும் வெளிப்படலாமென்பது கல் நாட்டியோரின் நம்பிக்கையாகும். “எலிஸியம்” என்பது இறந்த வீரர் புகும் சுவர்கலும் எனவும் அது இவ்வுலகிலேயே உள்ளது என்றும் பண்டைய கிரேக்கர்கள், நம்பினர். அது போலவே பண்டைய ஜேர்மனியர், ரோமானியர், எகிப்தியர், சீனர்,தமிழர் ஆகியோரும் சுவர்க்கம் என்ற கருத்தில் நம்பிக்கையுடயவர்களாக இருந்தனர். வீரர்கள் போருக்குச் செல்லும் போது நடு கற்களை வாழ்த்திப் பலி கொடுத்துச் சென்றமை அக்கால நடுகல் நம்பிக்கையினைப் புலப்படுத்து கின்றது. இங்கு வீரர்கள் நடுகல்லில் அடங்கி யுள்ள ஆவியின் துணை பெற்றுச் செல்வதே அந் நம்பிக்கையாகும். இவ் வழிபாட்டின் எச்சத்தைக் கல் நாட்டுதல் என்றும் சாவுச் சடங்கில் காண முடிகின்றது.

முன்னோர்க்கு நடுகல் எடுத்ததற்கான சான்று இலக்கியத்தில் சுட்டப்படவில்லை. எனினும் தென் புலத்தார் வழிபாட்டிலும் நடுகல் வழிபாட்டிலும் வழிபவோருக்கும் உதவும்

நிலையில் ஒன்றிணைந்த நம்பிக்கையே அதிலும் நடுகல் வழிபாடு வழிபட்டோர் அனைவருக்கும் உதவும் நிலையினதாக அமைவதும் ஆன்றோர் வணக்கம் (Ancestor worship) உறவினர்க்கு உதவுதல் என்ற நம்பிக்கை அடிப்படையில் அமைவதும் குறிப்பிடத்தக்கது. மேலும் நடுகல் வீரத்தினை அடிப்படையாகக் கொண்ட நினைவுச் சின்னமாக அமைந்து வழிபட்டோருக்கு உதவும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலும் ஆன்றோர் வணக்கம் நினைவுச் சின்னமின்றி உறவினர்க்கு மட்டும் உதவுதல் என்ற நம்பிக்கை அடிப்படையில் அமைந்து நிற்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

சமுதாயச் சிறப்பு மிக்க இயல்புகளைக் கொண்டிருந்தவர்களின் இறப்பிற்குப்பின் அவர்களது நினைவாக நடப்பட்ட கல்லே நடுகல் ஆகும். நடுகல் எனறால் நடப்பட்ட கல் எனப் பொருள்படும். இதனை அக நானூறு "நட்ட போதும் நடாத நெருங்கல்" எனக் குறித்துள்ளது. வீரத்தினை போற்றும் பண்பின் அடிப்படையில் தோன்றிய நினைவுச் சின்னம் காலப் போக்கில் ஆவிபற்றிய நம்பிக்கையின் பாடப்பட்ட நிலையில் நகல் வழிபாடாக உருப்பெற்றது. வீர யுகத்தில் நினைவுச் சின்னமாக் கருதப்பட்ட ஒன்று காலப்போக்கில் வழிபாடாக மாற்றம் பெற்றதனையே இது காட்டுகின்றது. எனவே நடுகல் நாட்டும் வழக்கம் நம்பிக்கை வயப்பட்ட நிலையில் நம்பிக்கை வயப்பட்ட வழக்கமாக மாறியமையினையே நடுகல் வழிபாடு குறிப்பாக கருதலாம்.

இறந்தவர்களுக்கு நன்றிக் கடன் செய்வது தமிழர்களின் பழமையான வழிபாட்டு முறையாகும். இறந்தவர்களுக்கு கல் நாட்டி வழிபட்டனர். அது வீரக்கல் வழிபாடு எனப் படுகிறது. வீரத்தைப் பராட்டு முகமாக தோன்றிய நடுகல் வணக்கம் காலப் போக்கில் மனிதனின் பிற பண்புகளைப் பாராட்டும் நிலையினதாக அமைவதனை வடக்கிருற்றார். நடுகற்கள் தெரிவிக்கின்றன. நடுகல் எடுக்கும் வழக்கம் சங்க காலத்தில் ஆண்களுக்குரிய ஒன்றாகக் காட்டப்படுகின்றது. காலப்போக்கில் பெண்ணு க்கும் நடுகல் எடுத்துக் கடவுளாக்கிய நிலை யினை முதன் முதலில் சிலப்பில் தான் காண்கின்றோம். இளங்கோவடிகள், தொல் காப்பியர் காட்டும் நெறியில் நின்று கண்ண கிக்குக் கல் நாட்டிக் கடவுளாக்கிய புதுமை யினை செய்துள்ளனர். இதனைக் காலத்தால் ஏற்பட்ட வழிபர்டு மாற்றம் எனக் கொள்வதே பொருந்தும் ஆனால் ஜி.எல்.ஹார்ட் என்பவர் கணவனை இழந்த பெண்கள் தீப் பாய்ந்து உயிர் நீத்த பின் அவர்களுக்கும் கல் நடும் வழக்கம் தென்னிந்தி யாவில் பரவலாகக் காணப்பட்ட தெனினும் அதனை இலக்கியங்கள் சுட்ட வில்லையெனக் கூறி அடிக்குறிப்பில் கண்ணகிக்குக் கல் நாட்டியதனைச் சான்றாக்கு அடக்கிருத்தல் வெறும் தீர்மானம் அல்ல அது உண்மையில் உண்ணாது உயிர் துறந்தலே யாகும். வடக்கிருத்தல் மானக்கேடு, நோக்கம், நிறை வேறாமை, பிரிவாற்றமை ஆகிய நிலைகள் வந்துள்ள போது மேற்கொள்ளப் பட்டத்தனை இலக்கியச் சான்றுகள் வாயிலாக அறிகின்றோம். பழந்தமிழர் சமுதாயத்திற்கே பொதுவான வழக்கமாக இருந்துள்ளதனை மன்னர், புலவர் வீரர் ஆகியோர் வடக்கிருந்த செய்தி கொண்டு அறிய முடிகின்றது. வடக்கி ருந்தோர் நினைவாக அவர்கள் வடக்கிருந்த

இடத்தில் நடுகல் எடுக்கப்படுதனை இலக்கியச் சான்றுகள் தெரிவிக்கின்றன. இதனை வடக்கி ருந்தார் நடுகற்கள் எனவும் மேலும் இவற்றை மூன்று வகையாக பிரிக்கின்றனர்.வீரச் செயல் புரிந்து இறந்த வீரனை குறிப்பதற்காக நடும் கல் "வீரக்கல்" எனவும், ஒருவர் இறந்தால் அவருடன் உடன் கட்டை ஏறியதின் நினைவாக நடும் கல் "சதிக்கல்" எனவும் வாழ்க்கையை வெறுத்து உணவு உண்ணாது வடக்கு நோக்கி இருந்து உயிர் துறந்தவர்களுக்கு "நிசேதிக்கல்" எனப்படும் நடுக்கல்லையும் நட்டனர். ஒவ்வொருவரது கலை முனைப்பும் தனித்துவமான வடிவமைப்பினைக் கொண்டிருக்கும். வடிவமைப்பு என்பது மனிதனின் உயிரியல் பண்புடன் தொடர்புடையது. மூளையம் புலனுணர்ச்சிச் செயற்பாடும் உயிரியல் ஆதாரங்களைக் கொண்ட கலையாக்கம். சமூகவியல் ஆதாரங்களைக் கொண்டு பாரம்பரிய நினைவுச் சின்னமமைக்கும் மரபு வளர்ச்சிய டைந்து வந்துள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.

பெருங்கற்கால பண்பாட்டில் அம்மக்கள் வாழ்ந்த குடியிருப்புக்களை விட அவர்கள் இறந்தவர்களுக்காக கற்களை கொண்டு அமைக் கப்பட்ட ஈமச்சின்னங்களே இன்றும் அழியாத நிலையில் காணப்படுகின்றன. இவ் ஈமச்சின்னம் அவற்றின் கட்டிட அமைப்புக்கு ஏற்ப கல்வட்டம் (Stone circle), கல்வறை (Dolmen Acist), நடுகல் (Hero Stone), குத்துக்கல் (Men hir), தொப்பிக்கல், குடைக்கல், குடைவரைக் குகை என பலவாறு அழைக்கப்படுகின்றன. இவை இலங்கை தென்னிந்திய கட்டிடக்கலை மரபின் தொன்மையான சான்றுகள் எனக் கூறலாம். இவ் ஈமச் சின்னங்களின் சிலவகை கட்டிட அமைப்பையே சங்க இலக்கியத்தில் வரும் நடுகல், நெடுநிலை, நடுகல், கல்பதுக்கை போன்ற குறிப்புகள் உணர்த்துகின்றன. தமிழ் இனத்தைப் போல் இலங்கையிலும் இப் பெருங்கற் காலப் பண்பாட்டிற்குரிய சில மட்பாண்டங்களில் தமிழ்ப் பிராமி எழுத்தும், தமிழ்ப் பெயர்களுடன் பெறப்பட்டன. இவற்றிலி ருந்து இப்பண்பாட்டு வழிவந்த மக்களில் ஒரு பிரிவினர் தமிழ் மொழி பேசினர் என்பது உறுதியாகத் தெரிகின்றது. இதனால் இலங்கைத் தமிழரின் தொடக்க காலக் கட்டிடக் கலை மரபாக இப் பெருங்கற்கால ஈமச்சின்னங்களைக் குறிப்பிடலாம். இப் பண்பாடு தென்னிந்தியாவின் தென்பகுதியில் இருந்து இலங்கைக்குப் பரவியிருந்தாலும் இவ் ஈமச்சின்னங்களின் அமைப்பு நாட்டின் பௌதீக நன்மைக்கு ஏற்ப இடத்திற்கு இடம் வேறுபட்ட தாக உள்ளது. ஈமச்சின்னங்கள் அமைப்பதற்கு ஏற்ற கற்கள் அதிகமில்லாத வட இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் தாழியும், புதை குழியுமே முக்கிய ஈமச்சின்னங்களாக இருந்துள்ளன. முன்பே ஈழத்தமிழரின் கலைமரபின் தனித்துவம் பெருங்கற்காலப் பண்பாட்டுன் தோன்றியதெனக் கூறமுடியும்.

# பௌர்ணமி நிலவே! நீ வருவாயா.....?

செல்வி மதனரூபி பாரதிதாசன்
(ஆசிரியர்)
யா/நாகர் கோவில் அ.மி.த.க. பாடசாலை
புனிதநகர் கற்கோவளம்

பௌர்ணமி நிலவே நீ வருவாயா ...
என் பருவ மங்கையவள் காத்திருக்கின்றாள்
உன்னை வரவேற்க.....
இருளகன்று இன்ப ஒளி சொரிய
வஞ்சியவள் வட்டமுகம் தெரிய
பௌர்ணமி நிலவே நீ வருவாயா ...!

ஆரத்தழுவும் தென்றலைக் கூடத்
தூரத்தில் வைத்து விட்டாள்
தன் மடியில் உன்னைத் தாங்கத்
தவமாய்க் கிடக்கின்றாள் என்னவள்
பௌர்ணமி நிலவே நீ வருவாயா ...!

அச்சம், மடம், நாணம், பயிர்ப்ப ஏதுமின்றி
அர்த்தசாமத்தில் துயிலெழுந்து வருகின்றாள்
உன் தொடுகை ஒளி சுமப்பதற்கு
பௌர்ணமி நிலவே நீ வருவாயா ...!

கண்டபடி கலங்கிடாதே ....
காதலன் நான் காத்திருக்கின்றேன்
என்னவளை மணப்பதற்கு ...
உன் ஒளியில் .........
இருவர் நாம் இன்ப உலா வர
பௌர்ணமியே நீ வருவாயா...............!

# சங்கீதத்தின் தொன்மையும் வளர்ச்சியும்

திருமதி. மலர்விழி கனகசபை
உதவிக்கல்விப்பணிப்பாளர்
அழகியல்
தீவக கல்வி வலயம்.

மனதை இறைவன் பால் இசைவிப்பது இசையாகும். இவ் இசையையே நாம் சங்கீதம் என்கின்றோம். உலகம் எப்போது தோன்றியதோ அப்போதே சங்கீதம் தோன்றியதெனலாம். உலக உயிரினங்கள் யாவும் இன்புற்று வாழவும் குறிப்பாக மக்கள் வாழ்வோடு வாழவும் வாழ்வு பண்பாடாக அமையவும், அப்பண்பாடு வழியாக கலாச்சாரத்தைப் பேணவும் சங்கீதம் மிகவும் இன்றியமை யாதுதென்றாகும். சங்கீதம் ஓம் என்ற ஒலியின் பிரதிபலிப்பாகவே அமைகின்றது. சங்கீதத்திற்கு அடிப்படை ஓங்காரம் எனும் நாதமாகும் மக்கள் இறைவனுடன் இணைவதற்கு முதற்படியாக அமைவது சங்கீதமாகும். மக்கள் இவ்வுலகில் உலகோடு இசைந்து வாழ்ந்து ஆன்ம ஈடேற்றத்திற்கான வழியைத் தருவதே சங்கீதத்தின் நோக்கமாகும். இதனாலேயே இறைவனுக்கு இசைப்பிரியன், சாமகானப் பிரியன், இராகப்பிரியன், நாதரூபன், ஓம்கார ரூபன் போன்ற பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. இவ்விசை சங்கீதம் இரண்டாக வகுக்கப் பட்டுள்ளது.

1. மிடற்றிசை
2. கருவிஇசை

எமக்குள்ளே இருந்து மிடறு மூலம் பாடப்படும் இசை மிடற்றிசை எனவும் நாம் எமது அங்கங்களைக் கொண்டு கருவிகளின் மூலம் வாசிப்பது கருவி இசை எனவும் வழங்கப்படுகின்றது.

சங்கீதத்தின் வளர்ச்சிப்பகுதியில் முதல் முன்னோடியாக அமைவது நாட்டுப்பாடல்கள் எனலாம். இந்த நாட்டுப் பாடல்கள் யாரால் எப்போது இயற்றப்பட்டன என எவருக்கும் தெரியாது. மக்களின் அன்றாட வாழ்க்கையின் சமூகப் போராட்டங்களிலிருந்தும் சுற்றுப் புறச்சூழல் நிகழ்வுகளில் இருந்தும் மலரும் முழுமையான உணர்வின் ஊற்றுத்தான் நாட்டுப்புறப்பாடல்கள். நாட்டுப் புறப்பாடல் களுக்கு மூவகை நிலை உண்டெனலாம். அவை மொழி வடிவம், பொருள், சூழல் என்பவை யாகும். இம் மூவகை நிலைகளும் மிக முக்கியமாகக் கருதப்படுகின்றன. நாட்டுப்புற மக்கள் தம் அன்றாட வாழ்வின் ஒவ்வொரு காலகட்டத்திலும் தொட்டில் முதல் அதாவது குழந்தை பிறந்தது முதல் அது வாழ்ந்து வாழ்க்கையின் ஒவ்வொரு படிகளையும் அனுபவித்து இறந்து சுடுகாடு செல்லும் வரை இன்பம், துன்பம், ஏக்கம், ஏமாற்றம் என அனைத்து உணர்ச்சிகளையும் கூட்டி அவ்வு ணர்ச்சிகளோடு ஒன்றிப் பாடல்களைப் பாடினார். அதுவே நாட்டுப் பாடல்களாகும்.

இப்பாடல்கள் கள்ளங்கபடமற்றவை கள்ளங் கபடமில்லா மனத்தோடு உண்மையாகப் பாடப்படும் பாடல்களாகும். இந்நாட்டார் பாடல்கள் எளியவை, பகட்டில்லாதவை, பரிசுத்த மானவை, கள்ளங்கபடமற்றவை, நேராக உள்ளத்தையும் ஈர்க்கும் இனிமையும் இசைப் பொலிவும் நிறைந்தவை, செழுமை மிக்க மனோபாவமும் கற்பிக்கப்படாத கட்டுப்பாடற்ற கற்பனையும் கொண்டவையாக விளங்குப வையாகும்.

இச்சிறப்புப் பெற்ற நாட்டார் இசையை தொல்காப்பியர் "பண்ணத்தி" எனக் குறிப்பிடு கின்றார்.என ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். "பாட்டிடைக் கலந்த பொருளாகி பாட்டின் இயல் பண்ணத்தின் இசையே" எனத் தொல்காப்பியர் பண்ணத்திற்கு விளக்கம் கூறியுள்ளார்.

நாட்டுப்பாடல் எழுதா முறையில் வழிவழியாக காதால் கேட்டுப் பாடப்பட்டு வந்தது. மக்கள் இலக்கியமாக நாட்டுப் பாடல் ஏட்டிலும் நில்லாத வாய் மொழி இலக்கியமாக வழங்கி வந்த போதிலும் இவற்றின் கவிச்சிறப்பைப் போலவே இவற்றின் இசைச் சிறப்பும் பல நூற்றாண்டுகளாக மக்களால் பாடப்பட்டு வருகின்றது.

நாட்டுப்புறப் பாடல்களில் புன்னாகவராளி, நாதநாமக்கிரியை, ஆனந்தபைரவி, செஞ்சுருட்டி, குறிஞ்சி, நவரோஷ்நீலாம்பரி போன்ற இராகங்கள் காணப்படுகின்றன.

தாய்மை உலகிற்கு வழங்கிய முதல் பாட்டுத்தான் தாலாட்டுப் பாடலாகும். இப்பாட்டு நீலாம்பரி இராகத்தில் பாடக் கேட்கின்றோம்.

உ +ம்

**ஆராரோ ஆரிவரே**
**ஆராரோ ஆரிவரோ**
**கண்ணே என் கற்பகமே**
**கண்மணியே கண்ணுறங்கு**

**மாமன் அடித்தாரோ**
**மல்லிகைப் பூச் செண்டாலே**
**அத்தை அடித்தாளோ**
**அரளிப் பூச் செண்டாலே**

கிராமப் புறங்களில் இன்றும் பாடப்படுகின்ற

**"சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு"**
**'கைவீசும்மா கைவீசு"**

போன்ற குழந்தைப் பாடல்கள் சங்கராபரண இராகத்திலேயே பாடப்பட்டு வருகின்றது. கிராமப் புறங்களிலே இன்றும் காணப்படுகின்ற சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு, கைவீசும்மா கைவீசு போன்ற குழந்தைப் பாடல்கள் சங்கராபரண இராகத்திலே பாடப்படுகின்றது. இது பழமையான இராகம் எனக் கூறலாம்.

இதே போல தொழிற் பாடல்
சிந்துபைரவி இராகம்

இடுப்புப் பெருத்தவரு இடவாகு போட்டவரு
பாதம் சிறுத்தவரு பாதை வரப் பாத்தியளா
மாதுளம்பூ பூப் பூக்கும் மாதமொரு காய்
–காய்க்கும்
எம்மனசு விட்டு சொன்னாக்கா
உங்க மதிவதனம் வாடுமென்று

பண் செஞ்சுருட்டி இராகம்:மத்தியமாவதி

**நெல்லுக் குத்துற பெண்ணே**
**சும்மா பாக்கிறா என்னே**
**புரசன் வாரன் பின்னே**
**பழுங்கல் குத்தடி கண்ணே**

இதோ மாதிரிக் காதல் பாடல்களும்உண்டு
இராகம் : ஹரஹரப்பிரியா

**வெள்ளிமலை ஓரத்திலே வெண்ணெய்**
**–கொண்டுபோற பெண்ணே**
**வெண்ணெய் குருதடி உன் வெள்ளி முகம்**
**தோணுதடி**
**சோளம் விதைக்கையிலே சொல்லி விட்டு**
**போனவரே**
**சோளம் பயிராச்சு நீங்க சொன்ன சொல்லு**
**என்னாச்சு**

இதே மாதிரி வேதாந்தப் பாடல்களும் அக்காலத்தில் பாடப்படுவதற்கு சான்றுகள் உண்டு.
இராகம்: நாதநாமகிரிய

**அஞ்சு கல்லால் ஒரு கோட்டை – அந்த**
**ஆனந்தக் கோட்டைக்கு ஒன்பது வாசல்**
**நந்தவனத்தில் ஓர் ஆண்டி – அவன்**
**நாலாறு மாதமாய் குயவனை வேண்டி**
**கொண்டு வந்தான் ஒரு தோண்டி – அதைக்**
**கூத்தாடி கூத்தாடி போட்டுடைத் தாண்டி**

அடுத்ததாக, திருமண விழாவில் மண மக்களை வாழ்த்திப் பாடப்படும் பாடல்களும் இராகம் கூறப்பட்டு பாடப்பட்டதை காணக் கூடியதாக உள்ளது.

மணவாழ்த்துப் பாடல் இராகம்: சாருகேசி

**வெள்ளிக் கிழமை அன்று வீடுவாசல் சுத்தம் பண்ணி**
**தங்கப் புரசன் அவன் தாலி கட்ட வாரானாம்**
**சோ................. சோ......**
**காசே கொடுத்த மின்னு காசே கொடுத்த மின்னு**
**காசு எங்கப்பன் போட்ட காதணிக்கே காணாது**
**சோ..................சோ.....**

அடுத்து கும்மிப்பாடல்
இராகம்: ஆனந்தபைரவி

**வாங்கடி வாங்கடி தோழிப் பெண்கள் – வள்ளி**
**மாமயில் பாட்டை பாடுங்கடி**
**கானல் இருந்த மாமயில் கந்தன்**
**கண்ட கதையைப் படியுங்கடி**

இவ்வகையான நாட்டார் பாடல்களில் கர்நாடக சங்கீதத்தின் தொன்மையான இராகங்கள் பின்னிப் பிணைந்து கிடப்பது ஒரு கலை அற்புதமாக இருக்கின்றது.

சங்கீதத்தைப் பற்றி சான்று பகரும் முதலிசை இராவணன் என்னும் அரசனது காலமாகும். இராவணன் மிகுந்த சிவபக்தன் எனவும் இவன் யாழ் வாசிப்பதிலும் வல்லவன் எனவும் இலக்கிய சான்று பகருகின்றது. இராவணன் கைலாய மலையில் அகப்பட்டு நாற்பெறும் பண்ணை வீணையில் வாசித்து விடுபட்ட செய்தி மூலம் இவன் சிறந்த சங்கீத ஞானமுடையவன் எனத் தெரிய வருகின்றது.

தென்னாட்டை அரசாண்டு வந்த இராவணன் பலருக்கு அதாவது மக்களுக்கு பெருந் துன்பம்

செய்து வந்தான். அவனை அங்கிருந்து அகற்ற அகத்திய மாமுனிவர் இசைப்போரினால் அவனை வெற்றி கொள்ள தீர்மானித்தார். இருவரும் இதற்குச் சம்மதித்து இசையால் பொதிய மலைக்கல்லை உருக்குபவரே வென்றவர் என ஒப்புக் கொண்டனர். அகத்திய முனிவரின் இசைக்குப் பொதிய உருகியது. அதன் பின் இராவணனின் இசை தொடங்க உருகிய கற்குழம்பு இறுகியது. இதனை தொல்காப்பியம் "பொதியினின் கண்ணிருந்து இராவணன் கந்தவத்தாற் பிணிந்து இராக்கதரை ஆண்டு இயங்காமை விலகினார்" என்கின்றது. இதனையே கோணேசகைலாசமாலை இப்படிக் கூறுகிறது "இனிய பைந்தமிழின் பொதிய மால்வரை போலிசைக்குருகாது", இச் சான்றிலிருந்து இராவணன் காலத்தில் சங்கீதம் இருந்திருக்கின்றது தெளிவாகின்றது.

அடுத்த காலமாகிய வரலாற்றுத் தொடக்கமான சங்ககாலத்தில் இசை மிகவும் சிறந்த நிலையில் இருந்தது என்பதை தொல்காப்பியம் எடுத்துக்காட்டுகின்றது.இதில் கருப் பொருளாக ஐவகை நிலத்திற்கும் யாழினையும் ஐவகை பறைகளையும் அக்காலத்தவர் வகுத்துள்ளதையும் காணலாம். பாண்டிய மன்னர் காலத்தில் மதுரையில் முதற் சங்கத்தினால் இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழிலும் சிறப்புற வளர்க்கப்பட்டன எனச் சிலப்பதிகாரம் கூறுகின்றது.

தொல்காப்பிய நூல் தோன்றுவதற்கு முன்பே வகைவகையான கலிப்பாடல்கள், பரிபாடல்கள், தேவபாணி, தரவு, தாழிசை, வெண்பா, ஆசிரியம், பண்ணத்தி முதலிய இசைப்பாடல்கள் வளர்ந்து செழிந்திருந்தன. உதட்டின் ஒலி அசைவு ,ஒலியின் தோன்றரைல வகைப்படுத்தி உறுப்பியல் என்னும் பகுதியில் விளக்கப் பட்டுள்ளது. சங்ககாலத்தில் பாணர், கூத்தர், பாடினி, விறலி ஆகியோர் இசையிலும் கூத்திலும் திறமையுடையவர்கள் என இலக்கியம் சுட்டுகின்றது. இக்காலத்தில் இயற்கையின் ஒலிகளைக் கொண்டே அறிவின் திறத்தால் மனிதன் பல புலமைகளை ஒட்ட முற்படுகின்றான். குழல், முழவு, யாழ் என்பவற்றைக் கண்டதில் இயற்கை உதவியிருப்பதனைப் பரிபாடல் வரிகள் மிக அழகாகச் சுட்டுகின்றன.

கொளைப் பொருள் தெரிதரக் கொளுத்தாமற் குரல்
– கொண்ட
கிளைக்குற்ற உழை சுரும்பின் கேழ்கெழு பாவை
–இனுயோர்மின்
பண்கண்டு நிறனெய்தாப் பண்தாளம் பெறப்பாடிக்
கொண்ட இன்னிசைத் தாளம் கொளை சிர்க்கும்
–விரிந்தாடும்
தண்தும்பி இனம் காண்மின்

இன்று கிடைத்துள்ள சங்க காலத்துப் பாடல்களில் பரிபாடலும் கலித்தொகையும் இசையமைப்புடன் காணப்படுகின்றன. தொல்காப்பியர் கலியையும் பரிபாடலையும் தேர்ந்தெடுத்து இசையியக்கத்திற்குத் தகுதியானவை எனக் குறிப்பிட்டுள்ளமை இங்கே குறிப்பிடத்தக்கது.

பொருணராற்றுப்படையில் திருமாளவனின் பெருமையைக் குறிப்பிடும் முடத்தாமக்கண்ணியர அவனுடைய அவையில் இசைப்பாடல் பெருமையாகப் பாடப் பெற்றவை

இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

**முரசு முழங்கு தானை மூவரும் கூடி**
**அரசவை இருந்த தோற்றம் போல**
**பாடல் பற்றிய பயனுடை எழாஅல்**
**கோடியர் தலைவ கொண்தறிந்**

வெற்றி பெற்ற மன்னர் மனம் மகிழப் பெண்கள் பாடுவதைப் பதிற்றுப்பத்து எனும் நூல் கூறுகின்றது. இப் பண் பெரியாழின் துணையுடன் பாடப்பட்டுள்ளது.

**வண்டுபடு கூந்தன் முடிபுனை மகளீர்**
**தொடைபடு பேரியாழ் பாலை பண்ணிப்**
**பணியா மரபினுழிசை பாட**
**இனிது புறந்தந்தவர்க்கின் மகிழ்**
**-சுரத்தலின்**

சங்ககாலப் பால்கள் பல கேட்டுச் சுவைப்பதற்கே பயன்படுத்தப்பட்டமையினால் எழுதிக் காக்கப்படவில்லை. பாடலைப் பாடியதில் பாணர் பாடினிக்குச் சிறப்பிடம் உண்டு. அப்பாடல்கள் என மூவகைப்படும் இப்பண்ணில் தாளம் அமைந்த பாடல்கள் காணப்படுகின்றன. அத்தோடு அப்பண்கள் இசைக் கருவிகளோடு பாடப்பட்டன. ஆம்பலங் குழலின் ஏங்கி என்ற நற்றினை பாடலடியால் ஆம்பற் பண் குழலின் வழி வெளிப்படும் என அறியலாம்.

விழுப்புண்பட்டவர்கள், பேய்பிணி கொண்டவர்கள் வருத்தம் தீரக் காஞ்சிப் பண்ணைப் பாடியதாக மலைபடுகடாம், புறநானூறு போன்ற நூல்களில் குறிப்புக்கள் காணப்படுகின்றன. காமரம் என்ற பண் மருதநில மக்களாற் பாடப்பட்ட பண்ணென சிறுபாணாற்றுப்படையில் குறிப்புக்கள் காணப்படுகின்றது. மலைப் பாங்கான இடங்களில் நள்ளிரவு நேரம் வில் யாழ் கொண்டு குறிஞ்சிப்பண் பாடப்படுவதாக குறிப்புக் காணப்படுகிறது. பெறும்பாணாற்றுப் படையில் வில் யாழ் இசைக்கும் விரலெறி குறிஞ்சி என்னும் பாடலடி காணப்படுகிறது.

முல்லை நிலத்திற்கும நெய்தல் நிலத்திற்கும் உரிய பண் செல்வழிப்பண்ணாக கருதப் படுகின்றது. இப்பண் துன்பவுணர்வைக் கொண்டதாகவே இருக்கும். இப்பண் சிறியாழின் துணையோடு பாடப்பட்பட்ட செய்தி புறநனூற்றில் உண்டு.

**சிறியாழ் செவ்வழி பண்ணி யாழ் நின்**
**காரெதிர் கானம் பாடினோம் ஆக**

பாலை நிலப்பண் நந்தவனம் இது மகிழ்வுடனே பாடும் பண்ணாக இருக்கலாம். இதனைப் பரிபாடல் இவ்வாறு கூறுகின்றது.

**நைவனம் பூத்த நரம்பினைச் சீர்பொய்வனம்**
**பூத்தன பாணர்நின் பாட்டு**

இப்பண் தற்காலப்பண் நட்டபாடை எனப்படுகின்றது. இக்கருத்துக்களைக் கொண்டு பார்க்கும் போது சங்ககாலத்தில் இது உயர்நிலை பெற்றதாகவும் இசைக்கருவிகளான யாழ், குழல் போன்றவற்றோடும் தாளத்தோடும் பண்கள் பாடப்பட்டதாகவும் சான்றோடு அறியக் கிடக்கின்றன.

அடுத்து சிலப்திகார இசையை நோக்கு வோமானால் முத்தமிழ், காப்பியமாக விளங்கும் சிலப்பதிகாரம் ஒரு தமிழிசைக் களஞ்சியம் இந்நூலின் அரங்கேற்றுக்காதை, வேனிற்காதை, ஆய்ச்சியர்குறவை, கானல்வரி முதலிய பகுதி களில் காணப்படும். இசைச் செய்திகள் இசை இலக்கணம் தொடர்பானவையாக இருக்கின்றன. இவை தவிர ஏனைய பகுதிகளில் பாடுவதற்குரிய பாடல்கள் அனேகம் நிறைந்துள்ளன. சிலப்பதிகார அரங்கேற்றுக் காதையில் இசையாசிரியன், தண்ணுமையாசிரியன், கவிஞன் ஆகியோரின் இலக்கணம் மிக விரிவாக்கக் கூறப்படுகின்றது. கூத்துக்குரிய செந்துறை, வெண்துறை என்னும் இரு பிரிவு பாடல்களுக்குப் பொருளாய் அமைந்த இயக்கம் நான்கினையும் முதனடை, வாரம், உடை, திரள் அமைத்து இசை புணர்தல் வேண்டும். இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்று சொல்லப்பட்டு கின்ற சொற்கள் இசைபூணும் படி கடைப்பிடித்து இச்சொற்களில் புணர்ப்புடன் இசை வேறுபாடு களை எல்லாம் குற்றந்தீர் உணரவல்ல அறிவினை உடையவனாகவும் இயற்பலவன் நினைத்த கோட்பாடுகளையும் அதற்குத் தகுந்த வாறு ஆடலாசிரியன் அமைக்கும் ஆடல் தொகுதியினையும் அதன் இலக்கணங்களையும் மனதில் கொண்டு இசையமைக்கத் தெரிந்த வனாகவும் இவ்வாறு அமைக்கும் போது குற்றம் தீர்ந்த நூல் வழங்கவே வகுக்கவும் விரிக்கவும் வல்லவனாக இருத்தல் வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது.

கானல்வரியில் கோவலனும் மாதவியும் யாழ் வாசித்துப் பாடுமிடத்தல் யாழிசைக்கரணம் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. இதில் வார்த்தல், வடித்தல், உந்தல், உறழ்தல், உரட்டல், நெருட்டல், அள்ளல், பட்டடை என்னும் யாழிற் குரிய தொழில்கள் எட்டும் பண்ணல், பரிவட் டனை, ஆராய்தல், தைவரல், விளையாட்டு, கையூழ், செலவு, கறும்போக்கு என்னும் யாழ் நரம்புகளில் இசை பிறப்பிக்கும் தொழில்கள் எட்டும் கூறப்பட்டுள்ளன. சிலப்பதிகாரத்தில் யாழ் மிகுந்த சிறப்பான வாத்தியமாக மதிக்கப் பட்டதைக் காணக் கூடியதாக இருக் கின்றது. குழல்வழி நின்றது யாழே யாழ் வழி தண்ணுமை நின்றது தகவே தண்ணுமைப் பின்வழி நின்றது முழவே முழவோடு கூடி நின்று இசைத்தது ஆமத்திரிகை என்னும் வரிகள் ஆடல் பாடல் இசை என்னும் மூன்றும் ஒருங்கிணைந்து நாட்டிட அரங்கில் இசைக்கப்பட்டது தெரிய வருகின்றது.இதனையே நச்சினார்க்கினியர் ஆமத்திரிகை என்பது வாத்தியங்கள் கூடி இசைக்கும் பல்லிய இசை என்றும் விபுலானந்தர் யாழ் நூலில் ஆமத்திகை என்பதைக் கூட்டு வாத்திய இசை என்றும் கூறினார். சிலப்பதி காரத்தில் வீணையைப் பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன. "நாரதன் வீணை நயத்தெரி பாடலும்" எனவும் " மங்கலம் இழப்ப வீணை மண்மிசை" எனும் அடிகளையும் காணக் கூடியதாக உள்ளது.

இவற்றை விட சிலப்பதிகாரத்தில் நாட்டுப்புற இசை வடிவங்களும் மிகுதியாகச் சிறப்பிக்கப் படுகின்றன. நாட்டுப்புற மக்கள் பாடிக் களிக்கும் கானல்வரி, வேட்டுவவரி, கந்துகவரி,ஊசல்வரி, அம்மானை போன்ற வரிப்பாடல்களையும் ஆச்சியர்குறவை, குன்றக்குறவை போன்ற குரவைப்பாடல்களையும் உழவர், உழத்தியர் பாடும் விருத்தின் பாணி ஏர்மங்கலம்,

முகவைப்பாட்டு ஆகிய தொழிற் பாடல்களையும் ஆகிய தொழிற் பாடல்களையும் இந்நூல் சிறப்பாக எடுத்துக்காட்டுகின்றது.

இந்திர விழாக் கொண்ட்டத்தின் போது மாதவி சுருதி கூட்டிக் கொடுக்க கோவலன் யாழை வாங்கி ஆற்றிவரியும், கானல் வரியுமாக இசைப்பாடல்கள் எனத் தெரிய வருகின்றது. இதனை விட ஆச்சியர் குரவை என்பது பெண்கள் ஏழு ஸ்வரங்களாகத் தமிழ் பெயர்களாகிய குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் ஆகியவற்றை அவர்களுக்குப் பெயர்களாக வைத்து விட்டு கைகோர்த்து நின்று மாயவனை ப்பாடி குரவையாடினர் என ஆச்சிய குரவை எடுத்துக்காட்டுகின்றது.

இவற்றை நோக்கும் போது சிலப்பதி காரத்தில் சங்கீதம் மிக உன்னத நிலையில் இருந்ததென்றும் இசைக்கருவிகள் மிகச் சிறப்பான வகையில் பாவிக்கப்பட்டிருக்கிறது என்பதும் கண்கூடாகக் காணக்கூடியதாக உள்ளது.

இசை வரலாற்றில் தேவாரப் பணிகளே மிகப்பழையான உருப்டிகளாகும் தற்காலத்தில் வழங்கும் பல இராகங்களுக்கு இவைதான் ஆதி வடிவங்கள் எனச் சொன்னால் மிகையாகாது. இந்திய சங்கீத வரலாற்றில் பாஷாங்க இராகங்கள் என்பதை முதன்முதலில்தேவாரப் பண்ணில் தான் காண்கிறோம். உதாரணம் பண் – கௌசிகம் பைரவி இராகம் பண் – வியாழக் குறிஞ்சி சௌராஷ்டிரம் இராகம் மனதை உருக்கும் படியான பதிகங்கள் பாடிய நாயன்மார்கள் பக்தி இராகங்களைப் பயன்படுத் தியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. நவீன காலத்தில் பிரசித்தி பெற்றுள்ள இராகங்கள் தேவார இசையில் இல்லை. மேலும் இராகப்பத் தத்தியின் தந்தையான மதங்கமுனிவர் கூறியுள்ள சுத்தசாயாலக, சங்கீரண என்னும் இராக வகுப்பிற்கு தேவாரப் பண்களே சிறந்த உதாரணங்களாக விளங்குகின்றன எனலாம். நுட்ப சுருதிகளையும் நுட்ப கமகங்களையும் வியாழக்குறிஞ்சி, பஞ்சமம் போன்ற பண்களில் நாம் காணலாம்.ஆகவே தற்காலத்தில் ஆய்வுக்கு எட்டிய வகையில் பண் சுமந்த தேவாரப் பாடல்களே நமக்குக் கிடைத்துள்ள ஆதி உருப்படிகள் எனலாம்.

இசை உலக வரலாற்றில் இசைபாடல்களை இயற்றியவர்களுள் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரே வயதில் இளையவராவார். உமை யம்மை இவருக்கு ஞானப்பால் ஊட்டிய நிகழ்ச்சியைஆதிசங்கரர் தமது சௌந்தர் யலகரியில் அழகாக வர்ணித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். சம்பந்தர் பாடிய முதல் மூன்று திருமுறைகளுள் 383 பதிகங்கள் இன்று 23 பண்களில் அமைந்துள்ளன. முத்தமிழ் விரகராகிய சம்பந்தரே தமிழ் மொழியில் புதிய வகை சொல்மாலைகள் பலவற்றை யாப்பிலக் கணத்திற்கு உட்பட்டு அருளிச் சென்றுள்ளார். இத்திருப்பதிகங்கள் தமிழில் உள்ள பாடல்களுக் கெல்லாம் மூல இலக்கியங்களாகத் திகழ் கின்றன. இவற்றைச் சித்திரக் கவிகள் எனவும் அழைப்பர். அவையாவன திருயமகம், நாலடி மேல் வைப்பு, மாலைமாற்று, ஏகபாதம், திருஎழுக்கூற்றிருக்கை, திருந்தாளச்சாதி, திருவிராகம், யாழ்முறி, மொழிமாற்று, திருயிருக்குக்குறள், ஈரடிமேல்வைப்பு. சுங்கர

மாற்று, கோமுத்திரிகம் முதலியனவாகும்.

நாயன்மார்கள் பாடும் போது சொல்லும் யாப்பும் இசையும் ஒன்றாகவே சேர்ந்து வெளிவந்தன. இவ்வகைப் பாடல்கள் இசைப்பா வகையுள் அடங்கும். திரியமகம் என்பது ஓரடியில் வந்த சொல்லோ தொடரோ வேறொறு பொருள்பட மீண்டும் அதே அடியில் மடக்கி வருவது இதனை மடக்கு என்றும் சொல்வர்.

உ+ம் –

**உற்றுமை சேர்வது மெய்யினையே**
**உணர்வது நின்னருள் மெய்யினையே**
**கற்றவர் காய்வது காமனையே**
**கனல் வழி காய்வது காமனையே**
**அற்றம் மறைப்பதும் உன் பணியே**
**அமரர்கள் செய்வதும் உன் பணியே**
**பெற்றும் உகந்தது கந்தனையே**
**பிரமபுரத்தை உகந்தனையே.**

அடுத்து நாலடி வைப்பை பார்த்தால் நான்கு அடிகளான பாடலின் மேலாக இரண்டு அடிகள் வைக்கப் பெற்ற அமைப்பை உடைய தாகும்.

உ+ம் –

**இடரினும் தளரினும்எனதுறு நோய்**
**தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்**
**கடல் தனில் அமுதொடு கலந்த நஞ்சை**
**மிடரினும் அடக்கிய வேதியனே**
**இதுவே எமையாளுமாறு ஈவதொன்றெமக்**
**– கில்லையே**
**அதுவோ வுனதின்னருள் ஆவடுதுறை அரனே.**

ஒரு பாடலை முதலில் இருந்து படித்தாலும் அல்லது இறுதியில் இருந்து படித்தாலும் அதே பாடலாக அமையும் தன்மை பெற்ற பாடல் மாலை மாற்று எனப்படும் இதனை முடகு அல்லது விகடகவி எனவும் அழைப்பர் இப்பாடலுக்கு எளிதில் பொருள் காணமுடியாது.

**யாமா மாநீ யாமாமா யாழிகாமா காணாகா**
**காணா காமா காழீயா மாமா யாநீ மா மாயா**
**நேரகாழா மித யாரழிதா யேனனி யேனனி ளாயுழிகா**
**காழியுளா னினயே தாழிசயா தமிழாகரீன**

ஏகபாதம் என்னும் அங்கத்தை நோக்கும் போது முதல் அடி போல் ஏனைய மூன்று அடிகளும் அமைந்திருக்கும். ஆனால் பொருள் வேறுபடும்.

**பிரமபுரத்துறை பெம்மான் எம்மான்**
**பிரமபுரத்துறை பெம்மான் எம்மான்**
**பிரமபுரத்துறை பெம்மான் எம்மான்**
**பிரமபுரத்துறை பெம்மான் எம்மான்**

கி.பி 6ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட கல்லாடம் என்னும் நூலில் கல்லாடர் காரைக்கால் அம்மையார் முதல் நாயன்மார் ஈறாக அவரவர் பாடிய பதிகங்களையும் இசைக்கருவிகள் பற்றியும் சிறப்பாகக் கூறுகின்றது.

இக்காலத்தில் நாயன்மார்களோடு ஆழ்வார்களும் பலர் தோன்றி இசை வளர்த்தார்கள் தாம் கண்ட அனுபவித்த இசைச் செய்திகளை மக்கள் நுகரும் வண்ணம் தேனிசைப்பாடல்களாகச் சொரிந்தனர்.

அற்புதங்கள் பல செய்து இசையால் மக்களைக் கவர்ந்தனர். இவற்றில் இருந்து பார்க்கும் போது அக்காலத்தில் சங்கீதம் மிக உன்னத நிலையில் இருந்துள்ளது என அறியக்கிடக்கின்றது.

இவ்வகை சிறப்பு மிக்க தேவாரப் பதிகங்களும் அவற்றின் பண்ணமைதிகளும் இடைக்காலத்தில் போற்றுவார் இன்றி அருகிய நிலையில் 1ம் இராஜசோழன், திருநாரையூர், நம்பியாண்ர் நம்பி என்பவரின் துணை கொண்டு தில்லையில் பதிகங்களைத் தேடித் தொகுத்து முறைப்படுத்தியமையால் அவ்வரசனும் திருமுறை கண்ட சோழன் எனப் பெயர் பெற்றன. என்பது வரலாறு இம்மன்னன் திருவெருக்கத்தம் புலியூரில் திருநீலகண்ட யாழ்ப்பாண மரபில் பிறந்து இசைத்துறையில் வல்ல பாடினி ஒருவரைக் கொண்டு இப்பதிகங்களுக்குரிய பண்முறைகளை அடியொற்றி இசை வகுக்கச் செய்தனர்.

சங்ககாலத்தில் உலகியலைப் பற்றிக்கூறிய இசை பல்லவர் ஆட்சிக் காலத்தில் பக்தி இசையாக மாறியது. நாயன்மார்கள் இசையைத் தெய்வ வழிபாட்டுடன் இறுகப் பிணைதர். சம்பந்தருக்குப் பொற்றாளம் கிடைத்த வரலாற்றைப் பார்க்கும் போது தெய்வீக தாளத்துடன் பாடப்பட்டது தெரிய வருகின்றது. பன்னிருதிருமுறைகளும் நாலாயிர திவ்ய பிரபந்தங்களும் எமக்குக் கிடைத்த பழமையான இசை நூல்களாகும். இந்திய சங்கீதத்தின் இராக தாளத்துடன் கிடைத்த பழமையான உருப்படி தேவாரங்களாகும். இது சங்கீத வளர்சசி அக் காலத்தில் அடைந்திருந்த சிறப்பு நிலையை எடுத்துக்காட்டுகின்றது.

இதனை விட கி.பி 5ம் நூற்றாண்டில் மதங்க முனிவர் மிருகத்தேசி என்னும் சங்கீத கிரந்தத்தின் வாயிலாக இராக பத்ததியை விளக்குகின்றார். இந்நூலில் இராகத்திற்கு பெருமளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்தது என்பதை வாக்கேயகாரர்களால் ஆங்காங்கே குறிப்பிடப்பட்டிருந்தது. இராக பத்ததியின் தந்தை என்ற சிறப்புப் பெயரை இவர் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கதாகும். கி.பி 8ம் நூற்றாண்டில் நாரதரால் சங்கீத மகரந்தம் என்னும் இலட்சண கிரந்தம் எழுதப்பட்டுள்ளது.

12ம் நூற்றாண்டில் ஜயதேவர் எழுதிய கீத கோவித்தம் என்னும் பல தரப்பட்ட நுட்பங்களை மேலும் அறியக் கூடியதாக இருந்தது. உருப்படிகள் பக்தி மார்க்க, சிருங்காரரச மார்க்க உருப்படி வகைகள் பாவத்திற்கும் மனித உணர்ச்சியைத் தூண்டி விடுவதற்கும் ஏற்றதாக இந்நூல் அமைந்துள்ளது. "பதங்கள்" போன்ற ஒரு வகையான உருப்படிகளை இதில் நாம் காணக்கூடியதாக இருந்தது. ஷேஷத்ர்க்ஞர் பதங்கள் இயற்றுவதற்கு இக் கீத கோவிந்தம் முன்னோடியாக இருந்திருக்கலாம் என இசை வல்லோர் கூறுகின்றார்கள். இதன் பின் சாரங்கதேவரால் இயற்றப்பட்ட சங்கீதரத்னாகரம் எனும் நூல் 13ம் நூற்றாண்டு காலப்பகுதியில் பிரசித்தமாகியது. இந்நூலை இசைக்கென்று வெளிவந்த முதல் நூலாகக் கருதிக் கொள்கின்றார்கள். சாரங்கதேர் இந்நூலை 7 அத்தியாயங்களாக வகுத்துள்ளார். இதில் நாதம், ஸ்வரவிதியாசம், இராகப்பிரிவுகள், தாளவிளக்கம், வாத்தியவிளக்கம், காபகுண தோஷங்கள், போன்ற விடயங்கள் கூறப்பட்டுள்ளன.

14ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஷரிபாலர் என்பவரால் எழுதப்பட்ட சங்கீதஸீதாகரம் என்னும் நூலில் தான் முதன்முறையாக இந்திய சங்கீதத்தில் ஏற்பட்ட இருபிரிவுகள் பற்றிக் குறிப்புக் காணப்படுகின்றது. அவை,

1. கர்நாடக இசை

2. ஹிந்துஸ்தானிய இசை

14ம் நூற்றாண்டிற்க்கு முன் இந்தியா முழுவதும் ஒரே சங்கீதமே வழக்கத்தில் இருந்தது. 14ம் நூற்றாண்டில் வடக்கில் முஸ்லிம் மன்னர்களின் ஆதிக்கம் இருந்த காலத்தில் பாரசீகம், அரேபியா போன்ற நாடுகளில் இருந்து வந்த சங்கீத முறைகள் இந்திய சங்கீதத்தில் கலந்தன. காரணமாக வட இந்தியாவில் ஏற்கனவே இருந்த சங்கீத முறை மாறுதல் பெற்றது. ஆனால் தென்னிந்தியாவில் பூர்விகமுறையே பின்பற்றப்பட்டு வந்தது. வட இந்தியாவில் கலந்த இந்திய சங்கீதம் ஹிந்துஸ்தானி சங்கீதம் எனவும், பூர்விக பந்ததியை தொடர்ந்து பேணிய சங்கீத கர்நாடக சங்கீதம் எனவும் வழங்கலாயிற்று.

கி.பி 15ம் நூற்றாண்டில் தாளப்பாக்கம் சின்னையாவும், அவரது முன்னோர்களும் தெலுங்கு மொழியில் சுமார் 20,000 கீர்த்தனை களும் உற்சவ சம்பிரதாயக் கீர்த்தனை களும் இயற்றி பஜனை பக்திக்கு வழிவகுத்தனர். தாளப்பாக்கம் சின்னையா பஜனைப்பக்தியின் தந்தையாவர். தாயப்பாக்கம் அன்னம்மாச் சாரியாரின் அத்யாத்ம சங்கீர்த்தனங்களில் தான் முதன்முதலில் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் அங்கவித்தியாசங்களைக் காண்கின் றோம். இவருடைய பேரனாகிய தாளப்பக்கம் சின்னையாவின் கிருதிகளியும் பின் புரந்தர தாசரின் கிருதிகளிலும் அனுபல்லவி என்னும் அங்கத்தைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

அருணகிரிநாதர் தன் திருப்புகழால் சந்தங்களை அமைத்தும் தமிழ் மொழியில் ஆயிரக்கணக்கான திருப்புகழ் பாடல்களைச் சாதாரண தாளங்களிலும் அபூர்வ தாளங்களிலும் பல்வேறு நடைகளில் அமைத்துப் பாடிச் சங்கீதத்தைச் சிறப்புறச் செய்திருக்கின்றார். இவரது திருப்புகழ் சந்தங்களில் ஓசைச்சிறப்பு அமைந்துள்ளதும், வழக்கில் இல்லாத அநேக தாளங்களைப் பயன்படுத்தித் திருப்புகழை அமைந்திருப்பதாலும் இவருக்கு சந்தப்பாவலர் என்னும் பெயரும் கிடைத்துள்ளது. ஒவ்வொரு திருப்புகழ் பாடல்களுக்கும் முன்னால் அதற்குரிய நடையும் தாள அமைப்பும் குறிப்பிடப்பட்டிருப்பது சிறப்பான அம்சமாக உள்ளது.

16ம் நூற்றாண்டில் சங்கீதபிதாமகர் என்ற ழைக்கப்படும் புரந்தரதாசர் சங்கீத கலை வளர்ச்சிக்கு மிக முக்கியமான பணியைச் செய்த வராவார். இவர் இசைப் பயிற்சிக்குரிய ஸ்வரவரிசைகள், அலங்காரங்கள், கீதங்கள் போன்றவற்றை இயற்றினார். ஸ்வரிசைகளைப் பாடுவதறக்கு மாயாமாளவ கௌளை இலகு வான இராகம் என்றும் பயிற்சிக்கு அவ்விராக த்தை பாட வேண்டும் எனவும் வழி வகுத்தார். இவர் கன்னட மொழியில் நூற்றுக்கணக்கான கீர்த்தனைகளையும் தேவர் நாமாக்களையும் புரந்தரவிட்டால் என்னும் முத்திரையுடன் இயற்றினார். லஷ்ஷியத்திற்குத் தக்கதாக லட்சணம் அமைய வேண்டும் என்ற முறையில் ராமநாதயரால் எழுதப்பட்ட ஸ்வரமேளகலாநிதி

எனும் சமஷ்கிருத கிரந்தம் அக்காலத்தில் சங்கீதக்கலையில் இருந்த ஐயப்பாடுகளை நீக்குவதாக இருந்தது.

இந் நூற்றாண் டிலேயே வெங் கடமாகி அவர்கள் இயற்றிய சதுர்தண்டிப் பிரகாசிகை என்னும் கிரந்தம் வெளிவந்தது. இதில் 12 ஸ்வரஸ்தானங்களும் 16 ஸ்வரப் பெயர்களையும் ஆதாரமாகக் கொண் 72 மேளகர்த்ததாக்களை வகுக்கும் வழிகளை விபரித்துள்ளார். இது வளர்ச்சியில் பெரும் சாதனையாகும்.

17ம் நூற்றாண்டில் சேஷத்ரக்ஞர் நாயக நாயகி பாவத்தை அடிப்படையாகக் கொண்டு ஆயிரக்கணக்கான பதங்களை இயற்றினார். இராகத்தின் மூலம் பக்திப் பிரவாகத்தை வெளிப்படுத்தலாம் என்பதற்கு அத்தாட்சியாக பதராசல இராமதாஎ பல கீர்த்தனைகளை இயற்றி சங்கீதத்திற்குப் பெருமை சேர்த்தார். 18ம் நூற்றாண் டில் அருணாசல கவிராயரால் இராமநாடகக் கீர்த்தனத்தில் விருத்தங்கள், கீர்த் தனங் கள், தருக் கள் போன் றவை காணப்படுவது சங்கீத வளர்ச்சியில் ஒரு திருப் புமுனையாகும். இந் நாடகம் பாமர மக்களிடையே மிகச் சிறப்பாக விளங்கி வந் திருந் தன. இந் நாடகத் தில் உள் ள கீர்த்தனைகளில் பண்டைய தமிழ் பழமொழிகள் பல காணப்படுகன்றன. இராம நாடகம் தவிர சீர்காழிஸ்தலபுராணம், ஹனுமார் பிள்ளைத் தமிழ், சீர்காழிகோவை, அசோகமுகி நாடகம் போன்றவையும், திரிகூட இராசப்ப கவியாரால் எழுதப்பட்ட குற்றாலக் குறவஞ்சி என்ற இசைநாடகமும் மிகப்பிரபல்யமாக இருந்தது.

இக்காலத்தில் சிறந்த லஷ்ய, லஷ்ண வித்துவானாக விளங்கிய பைடால குருமூர்த்தி சாஸ்திரிகள் ஆயிரக்கணக்கான கீதங்கள் பிரபந்தங்களை இயற்றியுள்ளார். இதனால் இவர் வெயிகீத பைடால குருமூர்த்தி சாஸ்திரம் என்ற சிறப்புப் பெயரையும் பெற்றார். இக்காலப் பகுதியில் சாஸ்திரம் மூலம் கற்ற கமகங்கள் நுட்பங்களைப் பாடிக்காட்டி சீர்படுத்தியவர் பச்சிமிரியம் ஆதியப்பையர் தானவர்ணமார்க்க தீர்க்கதரிசி என சிறப்புப் பெயர் பெற்றார். இவர் இராகம் பல்லவி பாடும் முறையில் ஓர் ஒழுங்கினைடு உண்டாக்கினார். இக்காலத்தில் தான் தானவர்ணம் என்ற உருப்படி தோன்றியது. தசவித கமகங்களையும் வெளிப்படுத்தும் விரிபோணி வர்ணம் இயற்றப்பட்டது.

சங்கீத மும்மூர்த்திகள் காலத்தில் உன்னத நிலையில் விளங்கிய கர்நாடக இசையை 19ம் நூற் றாண் டில் திருவாங் கூரை அரசாண் ஸ்வாதித்திருநாள்மகாஜா மேன்மேலும் சிறப்புற வளர்த்தார். இவர் ஒரு அரசனாக இருந்து சங்கீதத்தை வளர்த்து மட்டுமல்லாமல் சிறந்த வாக்கேயகாரராகவும் விளங்கினார். இவரது சபையைத் தஞ்சை நால்வாரன சின்னையா, பொன் னையா, சிவானந் தம், வடிவேலு சகோதரர்களும் மும்மூர்த்திகளின் சீடர்களும் அலங்கரித்தனர். 19ம் நூற்றாண்டில் தமிழ் மொழியிற் பல்வேறு கிருதிகளை இயற்றிய பெருமை கவிக்குஞ்சர பாரதி, கோபாலகிருஷ்ண பாரதி போன்றோர்களைச் சாரும். கவிக்குஞ்சர பாரதியார் இயற்றியவற்றுள் முக்கியமானது அழகர் குறவஞ்சி நாடகப்பாடல்களாகும். இதில் வெண் பா, விருத் தம் முதலிய செய் யுள் வகைகளும் சிந் து ,கும் மி, கண் ணிகள்,

ஓரடிக்கீர்த்தனம் போன்ற பா வகைகளும் கையாளப்பட்டுள்ளன. இதில் சாஸ்திரிய இசையும் நாட்டுப்புற இசையும் நன்கு கையாளப் படுகின்றது. இக்காலகட்டத்தில் ஆன்மிகத்தையும் தமிழிசையையும் வளர்த்த பெருமை கோபால கிருஷ்ண பாரதியாரை ச்சாரும். நந்தனார் கீர்த்தனை மூலம் தனி முத்திரை பதித்தவர் இவராவார். நலுங்கு ஊஞ்சல், கும்மிப்பாடல் களையும் இவர் இயற்றியுள்ளார். இதேகால கட்டத்தில் பாலஸ் வாமிதீட்சி தரால் மேல்நாட்டு இசை வாத்தியமான வயலின் கர்நாடக இசை யோடு மேடையில் அறிமுகப்படுத்தப்பட்டது.

இதைவிட தாள வகைகள் தேசாதி, மத்தியாதி தாளங்கள் பிரசித்திக்கு வந்தன. அண்ணாமலை ரெட்டியார் காவடிச் சிந்துகள் பலவற்றைப் பாடினார். இவர் காவடிச் சிந்தின் தந்தை எனப் போற்றப்பட்டார். இதன் பின் சாதாரண மக்கள் விரும்பத்தக்க இசைப்பாடல்கள் சுப்பிரமணிய பாரதியார் தேசிகவிநாயகம்பிள்ளை போன் றோரால் இயற்றப்பட்டன. தேசிய கல்விப்பாட நெறியில் இசை ஒரு பாடமாக பேராசிரியர் பி. சாம்பமூர்த்தியவர்களால் புகுத்தப்பட்டது. இதனால் இசை கற்கும் மாணவர் பரம்பரை ஒன்று உருவாகியது.

பாபநாசம்சிவன் காலத்தில் பாமரரும் படித்தோரும் இரசிக்கும் வகையில் பாடல்கள் தமிழில் இயற்றப்பட்டன. சங்கீதலிபி முறையில் பாடல்கள் அச்சடிக்கப்பட்டன. திரைப்படப் பாடல்கள் சாருகேசி, கரகரப்பிரியா, நாதநாமக் கீர்த்தனை, போன்ற பல இராகங்களில் இயற்றப் பட்டன. இதனால் கர்நாடக இசை வளர்ச்சி கண்டு கொண்டிருந்தது. இப்போதும் இதை வளர்க்கும் நிறுவனங்கள், இசை மன்றங்கள், சபாக்கள் போன்றவையும் சங்கீதத்தை வளர்ப் பதில் முன்னனி வகிக்கின்றன.

எனது திறமையை அடைய நான்
எவ்வளவு கஷ்டப்பட்டு உழைத்தேன் என்பதை மக்கள்
அறிந்தால் இதெல்லாம் ஒரு அதிசயமாகவே தோன்றாது.

## மன்னார் கல்வி வலயத்தின் முழுநிலா நாள் கலைவிழாவின் நிகழ்ச்சிகளில் சில













# மகு கல்வி வலயத்தின் முழுநிலா நாள் கலைவிழாவின் நிகழ்ச்சிகளில் சில
















## வவுனியா வடக்கு வலயத்தின் முழுநிலா நாள் கலைவிழாவின் நிகழ்ச்சிகளில் சில













# தமிழ்

திருமதி. சி. அரங்கநாதன்
யா/ பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க பாடசாலை

தாய் பேசியது தமிழ் ~ என்
வாய் பேசியதும் தமிழ்
சேயின் முதல்மொழி தமிழ் ~ ஏன்
கன்றின் குரலும் தமிழ்.

நன்மொழி என்பது தமிழ்
செம்மொழி என்பதும் தமிழ்
முதல்மொழி என்பது தமிழ்
முதுமொழி என்பதும் தமிழ்.

சங்கம் வளர்த்தது தமிழ்
சங்கடம் தீர்ப்பதும் தமிழ்
பொங்கிய கண்ணகி தமிழ்
மனுநீதி தந்ததும் தமிழ்.

ஆதியும் அந்தமும் தமிழ்
நீதியில் வென்றது தமிழ்
மேனியை ஈந்ததும் தமிழ்
மெல்லினம் கண்டதும் தமிழ்.

ஆத்திசூடி தந்த தமிழ்
ஔவை சொன்னதும் தமிழ்
கொன்றைவேந்தன் தமிழ்
நாலடியாரும் தமிழ்.

புறநானூறு தமிழ்
அகநானூறும் தமிழ்
இதிகாசங்கள் தமிழ்
இனியவை யாவும் தமிழ்

வள்ளுவன் வரிகள் தமிழ்
வள்ளியின் கணவன் தமிழ்
கம்பனின் காவியம் தமிழ்
பாரதி பாடலும் தமிழ்.

நன்னெறி தந்ததும் தமிழ்
நல்லது சொன்னதும் தமிழ்
நானிலம் பரந்தது தமிழ்
நாவலர் கண்டதும் தமிழ்.

பண்பாடு காப்பது தமிழ்
பண்ணோடு வளர்வது தமிழ்
இயல் இசை நாடகம் தமிழ்
இனிய விருந்தோம்பல் தமிழ்.

சிறப்புகள் கொண்டது தமிழ்
சிலப்பதிகாரமும் தமிழ்
சீரிய மொழிநடை தமிழ்
சீர்மியம் காப்பதும் தமிழ்.

இத்தனை சிறப்புள்ள தமிழ்~ எம்
தாய்மொழியாகிய தமிழ்
பழம்பெருமை கூறும் தமிழ்
அதன் தனித்துவம் காப்போம் தினம்!

# அழகியலுணர்வுள்ள மாணவ சமூகத்தை உருவாக்குதல்

திருமதி. விஜிதா பிரதாபன்
யா/ஸ்கந்தவரோதயா ஆரம்ப பாடசாலை

"அழகியல் கல்வி" என்பது நுண்கலைகளான இசை, நடனம், சித்திரம், ஓவியம் என்பவற்றை உள்ளடக்கியது. "அழகு" என்பது இயற்கையிலும், மனிதன் உருவாக்கிய பொருட்களிலும் கலைகளிலும் காணப்படினும் அழகியல் என்பது இவற்றின் பண்புகளை விளக்கக் கூடியது என்று பொதுவாகக் கருதப்படினும், கலைப்பொருட்களை விளக்கும் ஒரு சிந்தனை சாதனமாகவே இன்று பலராலும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது என திரு. சு. நடராஜன் "தமிழ் மரபில் அழகியல் கொள்கை" என்னும் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

அழகியலில் பிரதான நோக்கம் இரசனையை மாணவர் மத்தியில் ஏற்படுத்தலாகும். இயற்கையிலும் செயற்கையிலும் உள்ள அழகினைக் கண்டு களிப்பதற்கு அழகியல்கல்வி மாணவர்களைத் தூண்டுகின்றது. மாணவரது இரசனைத் திறன் பயனுள்ளவகையில் கூர்மையடைதல் அவசியம் மாணவர்களிடம் அவரவர் விருப்புக்கிணங்க ஆடலாகவோ பாடலாகவோ கவிதை, சித்திரம், சிற்பமாகவோ இவை வெளிப்படலாம். இதனை ஒவ்வொரு ஆசிரியர்களும் நன்கு கவனித்து உரிய சந்தர்ப்பங்களை வழங்கிச் சிறந்த படைப்புக்களாகக் கொண்டு வரச்செய்தல் அவசியம். "முழு மனிதனை உருவாக்குவது அவனுடைய ஆளுமை எனவே மனிதனின் உடல், உள்ளம், ஆன்மா என்பவற்றை ஒருமித்த வகையில் விருத்தி செய்து ஆளுமையடையச் செய்வதே கல்வியின் பயனாகும்" என்பது காந்தியடிகளின் கல்வித் தத்துவம் ஆகும். பொறுப்புணர்ச்சி, நேர்மை, நல்லொழுக்கம், பரந்த மனப்பாண்மை, உறுதியான சிந்தனை, முகமலர்ச்சி, நல்ல சமூக இசைவுகள் ஆகியவற்றை எவன் ஒருவன் உடையதாய் இருப்பானோ அவனே முதிர்ந்த ஆளுமையுடையவன் என மதிக்கப்படுவான்.

அந்த வகையில் இன்றைய இளைய தலைமுறையினரே நாளைய சமுதாயத்தை உருவாக்கி கட்டிக்காக்கப் போகின்றவர்கள். இவ்விளஞ் சமுதாயத்தினர் விழிப்புணர்வோடு செயற்படுவதற்கும், நாட்டின் ஒருமைப்பாடு, அமைதி என்பன குலையாது பேணப்படுவதற்கும் கலை, கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றில் இவ் இளைஞர்களின் வளர்ச்சியும், முதிர்ச்சியும் அவசியம் எனக் கருதப்படுகிறது. அந்த வகையில் மாணவர்களின் உடல், உளஇயக்கம், அறிவு, மன எழுச்சி ஆகியவற்றைத் திட்டமிட்டு ஒழுங்கு முறையாக நடைமுறைப்படுத்தவும். ஆளுமை வளர்ச்சியை ஏற்படுத்தவும் அழகியல் கல்வி பெரிதும் உதவுகிறது.

உள்ளவர்கள், கள்ளம் கபடமற்ற உள்ளம் கொண்டவர்கள், இவர்களுடைய மனோ நிலைகள் அலைபாய்ந்து கொண்டிருந்தாலும் அவர்களது பிஞ்சு உள்ளங்களால் நன்மை தீமை அறியாமல் எதையும் கிரகிக்கும் தன்மை வாய்ந்த வையாக இருப்பது இயற்கை. இத்தகைய கபடமில்லாத உள்ளங்களிலே விவேகத்தையும் சாதுரியத்தையும் வளர்ப்பதற்கும், அவர்களது குணாதிசயங்களை, நல்வழியில் திருப்பி சிறந்த பிரஜை ஆக்குவதற்கும் கலை உணர்வு ஒரு தலை சிறந்த சாதனமாக அமைகிறது. இக் கலையுணர்வு அக்குழந்தையின் எதிர்கால நல்வாழ்விற்கு வித்திடுகிறது. இத்தகைய கலையின் பமானது அவர்களது நல்ல உளவளத்திற்கு உரமாகின்றது. இதனைக் கருத்தில் கொண்டே கருத்தில் கொண்டே ஆரம்ப வகுப்புக்களில் ஒன்றிணைந்தபாடத்திட்டம் நடைமுறைப்படுத்தப் படுகின்றது. இதில் இணைப் பாடவிதான செயற்பாடுகளினூடாக மாணவர் மத்தியில் அழகியல் உணர்வை மேம்படுத்தும் வகையில் அமைந்த பாடல்கள் அழகியல் காட்சிகள், வர்ணனைகள் போன்றவற்றை ஆசிரியர்கள் நவீன தொழில்நுட்ப சாதனங்களை பயன் படுத்தியும் தமது உடற்செயற்பாட்டினூடாகவும் மாணவர் மெய்மறந்து இரசித்து விரும்பும் வகையிலும் அக்கல்வியை விருப்புடன் ஈடுபடுவதற்கேற்ற சந்தர்ப்பங்களை உருவாக்குதல் வேண்டும். அதே போன்று விளையாட்டுக்கள், கதைகள், மூலமாகவும் சிறிய தாளக்கருவிகளைப் பயன்படுத்தியம் பாடல்களை பாடி ரசிக்கச் செய்யலாம். சிறுவர் நாடகங்கள் மாணவர் மன்றங்கள் போன்றவற்றினூடாக மாணவர்களது கலை நிகழ்ச்சிகளை நடாத்தி ரசனைகளை சிறுவயது முதலே மாணவர் மனதில் அழகியல் உணர்வுகளை ஏற்படுத்த முடியும். அத்துடன் மாணவர்களைக் குழுக்களாக பிரித்து குழுவுக்கு ஒரு தலைவர் என நியமித்து வகுப்பறைகளில் அரங்க மூலைகளை அமைத்து இணைப்பாட விதானச் செயற்பாடுகளின் மூலம் மாணவர்களின் விருப்பம் ஆற்றல் திறன்களுக் கேற்ப நிகழ்ச்சிகளை முன்வைக்க சந்தர்ப்பம் அளிக்கும் போது மாணவர்களிடையே கூச்ச சுபாவம் நீங்கி தலைமை தாங்கும் தலைமைத்துவப் பண்புகள் நன்கு சிறப்பாக வளர வழியேற் படும் இவை மட்டுமன்றி குழந்தைகளானவர்கள் விளையாட்டில் பெரிதும் விருப்பமுடையவர்கள். இதனைக் கருத்தில் கொண்டு மாணவர் மத்தியில் அழகியலை திணிக்காது அவர்களின் ஆற்றல் எல்லையற்றது என்பதை அவர்களது உணரத் தக்க வகையில் அவர்களின் ஆளுமையை இயற்கையுடன் ஒன்றியதாக வளரச் செய்யும் வகையில் அபிநயம் இசை இயக்கம் என்ற அடிப்படையில் அவர்கள் கூடியாடி விளையாட ஊக்கப் படுத்துதல் வேண்டும். இதன் மூலம் மாணவர்கள் மத்தியில் கூட்டு மனப்பான்மை மற்றவர்களை மதிக்கும் தன்மை ஒழுக்கம் கூட்டொழுங்கு என்பன இயல்பாகவே வளரும்.

இவ்வாறாக ஆரம்பக்கல்வியில் அழகியற் கலை ஒரு பாடமாக இருப்பதனால் பிள்ளைகள் நயக்கும் பண்பையும் இசைக்கேற்ப அசையும் தன்மைகளையும் கொண்டு வளர்கிறார்கள். ஆகவே ஆரம்பக்கல்வியில் அழகியல் கல்விக்கான அத்திவாரம் இடப்படுவதால் கனிஸ்ட இடைநிலைப்பள்ளிகளில் இதனைத் தொடர்ந்து கற்பிப்பதும் கற்பதும் கடினமாக இருக்க மாட்டா. இன்றைய கல்வி மாணவர் மையக் கல்வியாகும் இதனால் இங்கு மாணவர்கள்

முக்கியத்துவப் படுத்தப்படுகிறார்கள் கல்விச் சீர்த்திருத்தத்திற்கமைய உருவாக்கப்பட்ட புதிய கல்வித்திட்டத்தில் அழகியற் கல்வியில் ஆக்கம், நயத்தல். கலாசாரப் பின்னணி ஆகிய அம்சங்கள் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள விடயங் களாகும். மாணவர்கள் க.பொ.த. சா/தரம். உ/தரம் பரீட்சைகளிற்கு தோற்றக் கூடிய பாடங் களாக அழகியற் கல்வியை தெரிவு செய்து கற்பதற்கும் இவை பெரிதும் உதவுகின்றன.

இவற்றைக் கருத்தில் கொண்டு மாணவர் கள் மத்தியில் கலை ஆர்வம் அழகியல் உணர்வை ஏற்படுத்தும் வகைகளிலும் இன்று பாடசாலைகளிலும் பரிசளிப்பு விழா, கலைவிழா, ஆண்டு நிறைவு விழா, நவராத்திரிவிழா, முத்தமிழ் விழா என பல விழாக்கள் கொண்டாடப் பட்டு வருகின்றன இவற்றினூடாக மாணவர்கள் மத்தியில் அழகியல் உணர்வு நாட்டம் விருப்பம் வளர்த்தெடுக்கப்படுகின்ற அதே வேளையில் தமிழர்கலை கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் இசை, நடனம், நாடகம் என்பன பாடசாலைகளில் நடைபெறுகின்றன. இவ் இசை நடன அரங்குகளுக்கு அகில இலங்கை ரீதியில் ஒருதளத்தை அமைத்துத் தருவன தமிழ் மொழிப்போட்டிகள் ஆகும். ஆண்டு தோறும் தமிழ்மொழித் தினப் போட்டிகள் பாடசாலை, வலயம், மாவட்டம், மாகாண மட்டங்களில் நடாத்தப்பட்டு பின்னர் அகில இலங்கை ரீதியி லும் நடாப்பட்டு வெற்றிபெறும் மாணவர்களுக்கு தங்கப்பதக்கம், கேடயம், சான்றிதழ்கள் என்பன வழங்கப்படுகின்றன. இச்செயற்பாடானது மாணவர் மத்தியில் கலை உணர்வையும் கலைத் தாகத்தையும் ஏற்படுத்தி அவர்களை இக் கலையில் முழு ஆர்வத்துடன் ஈடுபட வழி வகுக்கும் அதே வேளை மாணவர்களது ஆற்றலை வளர்க்கவும் வெற்றி தோல்விகளை சரிசமமாக கருதவும் நல்மனப்பாங்குகளை வளர்த்துக் கொள்வதற்கும், போட்டிகளில் பங்காளர்களாகக் கலந்து கொண்ட பெருமை யினை பெறுவதற்கும் வழி ஏற்படுத்திக் கொடுக் கின்றது.

இவை மட்டுமன்றி மாணவர்களிடையே அழகியல் உணர்வை ஏற்படுத்துவதன் மூலம் மாணவர்களின் கற்பனை வளத்தைப் பெருக்குவதற்கும், இரசனை, இரகசிகத்தன்மை ஆகியவற்றை விருத்திசெய்வதற்கும், தமிழ் கலாசாரப் பாரம்பரியத்தினை தெரிந்து கொள்வ தற்கும் அனுசரணையாக இவை அமைவதுடன் மனிதனிடத்திலே இயல்பாகவே அமைந்துள்ள மென்மையான உணர்வுகளைத் தட்டி எழுப்பு வதற்கு ஏற்ற கருவியாகவும், ஒவ்வொரு தனி மனிதனையும் மதிக்கும் தன்மை, நல்மனப் பாங்கு, ஒற்றுமை பகுத்தறிவுடன் நடந்து கொள்ளல் போன்ற நற்பண்புகளையும் வளர்த்தெடுக்கலாம். மற்றும் இலக்கிய ஆக்கங்களாக கட்டுரை, கவிதை, சித்திரம் போன்றவற்றில் ஈடுபட சந்தர்ப்பம் ஏற்படுத்து வதால் மாணவர்கள் தவறான வழிகளில் செல்வதைத்தடுத்து நல்லதொரு பொழுதுபோக்கு அம்சமாக அழகியல் உணர்வு மாணவர் மத்தியில் ஈடுபாட்டை ஏற்படுத்தும். இதனால் மாணவர் களிடையே சிறந்த உடல், உள, மன ஒருமைப் பாடு என்பன வளர்க்கப்படும் அதேவேளையில் அழகியல் உணர்வினை ஏற்படுத்தும் அழகியல் கல்வியை மாணவர்கள் பெறும் போது மாணவர்கள் சமுதாயத்தில் புகழ் பெறுவதற்கும் மேலதிக வருவாய் பெறும் தொழிலை

பிற்காலத்தில் இடம் பெறவும் வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

தற்கால நிலைமைகளில் வாழும் மாணவர்கள் பல்வேறு உளத்தாக்கங்களுடன் பாடசாலை வருக்கின்றார்கள் அம் மாணவர் களுக்கு ஆசிரியர்களின் வழிகாட்டுதல்கள் வகுப் பறைக்குள்ளேயும், வெளியேயும் வேண்டப்படு கின்றன. இன்று மாணவர்களிடையே பாட சாலை வன்முறைகள், போதைப்பொருள் பாவனை அதிகரிப்பு, பாலியல் சார்ந்த நெறி பிறழ்வுகள் போன்ற தவறான நடவடிக்கைகள் நிகழ்ந்த வண்ணம் உள்ள அதே வேளையில் தகவல் தொழிநுட்பங்களின் அதிகரித்த பாவனையாலும் மாணவர்கள் தவறான பாதைக்கு இட்டுச் செல்லப்படுகிறார்கள். எனவே ஆசிரியர்கள் அவர்கள் மன உந்தல்களை அவதானித்து அவர்களுடன் நன்கு அளவளாவி ஆடல், பாடல்களை மேற்கொண்டு உரிய சூழலுக்குள் அல்லது கற்றல் நடவடிக்கை களுக்குள் தம்முடன் அவர்களையும் கொண்டு வருவதற்கு இவ் அழகியற் கல்வி பெரிதும் வழி ஏற்படுத்திக் கொடுக்கின்றது. பிள்ளைகளின், சூழல், அறிவு, உடலியல், உளவியல், சிந்தனை ஆற்றல் என்பவற்றை கருத்தில் கொண்டு அவர்களை ஏற்ற கவின் நிலைக்கு இட்டு செல்வதற்கும் ஒவ்வொரு மாணவர்களிலும் மனப்பாங்கு ரீதியாக நல்மாற்றத்தை ஏற்படுத்த வும் கல்வியறிவிலும் வெளிப்பாடுகளிலும் அபிவிருத்தி தன்மைகளை ஏற்படுத்துவதற்கும் ஒவ்வொரு ஆசிரியர்களும் அழகியல் உணர் வினை மாணவர்கள் மனதில் ஏற்படுத்தி மாணவர்களுக்கு ஆசிரியர் ஒரு சிறந்த வழிகாட்டி யாகவும், ஆலோசகராகவும், பிரச்சினைகளை விடுவிப்போராகவும், பாதுகாவலராகவும் விளங்க வேண்டியராக உள்ளார். ஆகவே இத்தகைய நன்மைகளை கொடுக்கின்ற, கொடுக்கப் போகின்ற அழகியல் உணர்வினை வளர்த் தெடுத்தலில் ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வித் துறை சார்ந்தவர்கள் அனைவரும் அதிக கவனம் செலுத்தி கல்விச் சமுதாயத்திற்கு பூரணமான ஒளியினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

"கலைகளின் பயில்வு ஒருவனை முழு மனிதனாக்குகிறது"

# நிலவென்ன பேசுமோ.......!

திருமதி.த.நிறைமதி
ஆசிரிய ஆலோசகர் (தமிழ்)
வ/வவுனியா தெற்கு வலயம்
வவுனியா

வானில் பதிந்த வண்ணநிலா
வழங்கும் உண்மை எண்ணிலா!
மதம் கடந்து மனம் கடந்து
மணக்கின்ற இன்பநிலா!
பிறைகண்டு நோன்பெடுக்கும்
முஹமதியர்தம் பிறைநிலா!
முழுமதி தோறும் நோன்பிருந்து
அன்னையைத் துதிக்கும்
இந்துதுவத்தின் இதயநிலா!
பிறப்பும் ஞானமும் பரிநிர்வானமும்
பார்த்து வளர்ந்த போதிநிலா!
முழுமதி முகமென
முகமது மதியென
உவமைக்கவிகளின்
ஊற்றுப்பொருளாய்......
கூனற்பிறை நுதலில்
குளிர்நிலவாய் திலகமிட்ட
நேச நங்கையரின்
நீள் விழிப்பார்வை கிட்டின்
நிலவையும் பறித்து வருவமென
காளையர் தோள்களுக்கு
வீரத் தினவுப் பொருளாய்......
காதலர் தம் உளமறிந்து
வரவிடுத்த தூதுப் பொருளாய்.....
மகிழ்ச்சியின் மதகளிப்பில்
மனங்கவர் குளிர்நிலவாய்..........

தனிமையின் தவிப்பில்
தகித்துக் காய்க்கும் சுடுநிலவாய்
சூரியப் பெருநெருப்பின்
வெப்பக் கதிர்களை
குளிர்த்திப் போர்த்தும்
வித்தைகற்ற விந்தைப் பொருளாய்
வளர்பிறை தேய்பிறை
அமாவாசை பூரணை
என்றெலாம் பன்முகங்காட்டுவதாய்
ஔவைப்பாட்டி காலை நீட்டி
அமர்ந்தே இருந்து தாம்பூலம் தரிப்பதால்
அரவம் விழுங்கிய கிரகணச் செயலாய்
எண்ணற்று விளங்கிய
நம்பிக்கைக் கதைகளெல்லாம்
இன்று........
காலாவதிக் கணக்குகளாயின
லைக்கா முகர்ந்து காட்டிய வழியில்
நீல் ஆம்ஸ்ரோங்
நின்று நிமிர்ந்த வேளையில்
அடிபட்டுப் போன ஆயிரங்கதைகள்
படிப்பித்த செய்தி பற்பல!
பூமியின் உபகோளாய்
சுற்றிச் சுழல்வதால்
தேய்வும் வளர்ச்சியும் !
சந்திர மண்ணின்
குன்றுங்குழிகளும்
ஔவைக் கிழவியென

பொய்முகங் காட்டியதும்
சந்திர சூரிய பூமியின் நிலைகள்
கிரகணம் செயல் காட்டியதும்
தூர வேற்றுமையால்
தோற்றங்கள் வேறுபட்டதும்
புரிந்தது எமக்கு!
மேகம் ஓட தானே ஓடுவதாய்
தோன்றும் தோற்றம்
காண்பதெல்லாம் மெய்யன்று
ஆய்ந்து காணல் உண்மையென்ற
அனுபவம் புகட்டும்!
துண்டாடப்பட்டுத்
துளிர்க்கும் பிறைகள்
பாடம் புகட்டும்!
தேய்வதும் வளர்வதும்
தேனிலா பழக்கம்
தாழ்வதும் உயர்வதும்
வாழ்க்கையின் வழக்கம்!
தேய்ந்தாலும் ஒருநாள்
நிறைநிலவாய் மாறும்!
நிறைநிலவாய் ஆனாலும்
ஒருநாளது தேயும்!

உச்சத்து வாழ்வெல்லாம்
ஊரின்றி வேரின்றி போகும்!
ஊரின்றி வேரின்றி
போனதொரு வாழ்வும்
உலகறிய உயர்நிலையில்
ஊன்றுதலும் கூடும்!
மறுபுறம்........
உல்லாசப் பணயமாய்
நிலவிற்கு ஓடிப்போய் வரலாம்
என்ற உண்மை உணரப்பட்ட
உன்னத காலத்திலும்
சாதிமத சாக்காடுகள்
இனபேத சாக்கடைகள்
பண்பாட்டைச் சாக்காட்டும்
பாதாளச் சிக்கல்கள்
இத்தனையும் இன்று
இறுகித் தளையானால்
பூரணைத் தினங்களிலும்
அமாவாசை இருளாகி
எமது இரவுகளை இருளாக்கித்
தாக்காதோ
சிந்திப்போம்!

"நின்னொளி யாகிய பாற்கடல் மீதிங்கு
வெண்ணிலாவே! - நன்கு
நீயும் அமுதும் எழுந்திடல் கண்டனன்
வெண்ணிலாவே!"
- பாரதியார்

# கண்ணன் கீதமும் வண்ண அமுதக்கீதையும்

சைவப்புலவர் கலைமாமணி
அமரர் பொன் தெய்வேந்திரன்
பன்னாலை, தெல்லிப்பழை

குழலினிது,யாழினிது என்றார் வள்ளுவர். ஆதிகால மனிதன் மந்தைகள் மேய்க்கும் போது குழலூதி மகிழ்ந்து தனிமையைப் போக்கி ஏகாந்தத்தை இனிதாக்கி இன்புற்றான் என்பது வரலாறு காட்டும் உண்மை. காலப்போக்கில் இது புல்லாங்குழல் என்ற பெயரைப் பெற்று, துளைகருவி வகையில் சார்ந்தது. பண்டைய காலத்தில் ஒரு வகை தடித்த, உள்ளே காற்றுப் புகும்வகையில் அமைந்த புல்லில் இருந்தே இது கண்டுபிடிக்கப்பட்ட தென்பர். காலப்போக்கில் மனித அறிவின் செறிவால் பல்வகைக்கழல்கள் அறிமுகமாயின.

அகில உலகத்திலும் காணப்படும் பழைமையான கருவியான புல்லாங்குழலுக்கு மூங்கில் குழலே சிறந்தது. குழலின் மேல் துளைகளிட்டு, இடப்பக்கம் அடைத்து வலப் பக்கம் திறந்த நிலையில். முத்திரை என்னும் பெயர் கொண்ட வாய் வைத்து ஊதும் முதல் துவாரத்தில் ஊதும் முறைக்கேற்ப இன்ப ஒலி, பரவசநாதமாய் வெளிவரும். மற்றைய துளை களை விரல்களால் முடியும் திறக்கும் முறையில் ஏழுஸ்வரங்களும் அமுதகானமாய் வானம் வரை கேட்கும். சிலம்பில் ஆச்சியா குரவைப்பகுதியில் பலவித குழல்களை இளங்கோ காட்டுகிறார்.

கொன்றைக்குழல், ஆம்பர். முல்லைக் குழல் என்று மூன்று வகைகள் பற்றியும் சாரங்கதேவர் தனது சங்கீர்த்தனா சாகாத்தில் பத்து வகைகளைப் பற்றியும் குறிப்பிடுகின்றார். கண்ணன் மகிழ்ந்து இசைத்த மூங்கில், சந்தனம்,வெண்கலம், செங்காலி, கருங்காலி ஆகியவற்றால் செய்யப்பட்டதென்பர் அறிஞர்.

குழலின்றி கண்ணன் உருவத்தைக் காண முடியாது. கண்ணனையே பாடிய ஊத்துக்காடு வெங்கட சுப்பையர் என்ற மகான் அலைபாயுதே கண்ணா உன் ஆனந்த மோகான வேணுகானமதில் என்று மெய்சிலிர்க்கின்றார். குழலோசைக்கு மயங்காதவரே இல்லை எனலாம்.

தேனினுமினிய அமுதகானம் குழலில் பிறக்கின்றது.அதனாலேயே கண்ணனின் பிருந்தாவனக்குழல் ஓசையில் தாவரங்கள் புல்லரிக்கினறன.ஆவினங்கள் அசையாது நிற்கின்றன என்று ஆழ்வார்களும் ஆண்டாளும் பாடி மகிழ்ந்து கண்ணன் பாதம் நாடியும் தேடியும் இருந்த வரலாறுகளை ஸ்ரீமத்பாகவதம் காட்டுகின்றது.

கோகுலக்குட்டன், கோகிலவாணன், கோபாலகிருஷ்ணன், கார்மேக கண்ணன்,

கண்ணன் என்றெல்லாம் வியந்த பெரியாழ்வார் குழல் முழவம் விளம்பும் புதுவைக்கோன் விட்டுனு சித்தன் விரித்த தமிழ் என்று அனுபவத்தைப் பாடியதை நுகர்ந்த கல்கி அவர்கள், கண்ணன் குழலூதிய அழகைத் தேனில் குழைத்தார். ஆனால் எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்களோ வானில் குழைத்து காற்றினிலே வரும் கீதம் என்று மீரா எனும் திரைப்படத்தில் பாடி, சகலரையும் கண்ணன் கீதத்தையும் பாதத்தையும் தேட வைத்து விட்ட பெருமைதான் என்னே! குழலினிதே!

"ஓசை ஒலியெல்லாம் ஆனாய் நீயே" என்று கண்ணன் அடியவர்களை திண்ண உணர்வுடன் மண்ணில் நல்ல வண்ணம் வாழ இதுவே வழிகாட்டியது!

கண்ணன் கீதத்தில் மனதைப் பறி கொடுத்து.பக்திப்பரவசத்தில் ஊண் உறக்கமின்றி அகில உலகிலும் பரவியுள்ள ஹரே ராமா ஹரே கிருஷ்ணா இயக்கத்தின் தொழிற்பாடு வியக்க வைக்கின்றது. குழலூதி மனமெல்லாம் கொள்ளை கொண்ட கண்ணனின் கீதம் பிருந்தாவனத்திலிருந்து பாரெல்லாம் பரந்து விரிந்து என்றால் காரணம் தான் என்ன? பட்ட மரங்களும் தளிர்க்கும் கீதமாய் இருப்பதே. பட்ட மரங்களும் தளிர்க்க முடியுமா? ஆம் முடியும் என்றார் ஓர் அறிஞர்.

"கோவிந்தனின் கோமளவாயில் குழல் முழைஞ்சுகளினூடு குமிழ்த்து கொழுத்து இழிந்த அமுதப் புனல்" என்று ஆழ்வாரை அழ வைத்த வேனுகானம், சக்தியுன் பக்தி கொள்வோரை முத்திக்கு இட்டுச்செல்லும் என்பது அவர் வாதம். முக்தி வேறு, மரணம் வேறு. செத்தவர்கள் மறுபடி பிறப்பார்கள். முத்தர்கள் அப்படியல்ல. எந்த நிலையடைந்தார்களோ சீவன் முத்தர்கள் அப்படியே இருந்துவிடுவார்கள்.சாதாரண மானவர்களின் இறப்பும் சித்தர்கள் அடையும் சமாதியும் வித்தியாசமானவையே. கார்முகில் வண்ணனின் குழலோசையால், செத்த மனிதர் மறுபிறவி எடுப்பது போன்று, பட்டமரங்களும் தளிர்த்தன. கண்ணன் குழலின் தன்மையிது.

பிருந்தாவனமும் நந்தகுமாரனும் யாவருக்கும் சொந்தமென்ற சிந்தனை பாரதியாரையும் விட்டு வைக்கவில்லை. அவரது கண்ணன் பாடல்கள் தெவிட்டாது இன்பம் தருபவை. "புல்லாங்குழல் கொண்டு வருவான்– அமுது பொங்கித்தும்பும் நல்கீதம் படிப்பான்" என்று கண்ணன் கீதத்தை மகிழுகிறார். தாவரங்கள் இசையால் வளர்கின்றன என்பது ஆய்வாளர் முடிபு.

கண்ணன் குழலின் ஒலி வலிமையால் கோபியர் ஆடை நெகிழ, உடல், உளமுருக, ஆனந்தம் பெருக அவனையே துணையாக்கி அணைத்தனராம். இங்கு சிருங்காரரசமில்லை. பக்திப்பரவசத்துடன் இறை சிந்தனை வலுப்பெற்றவர்கள் எல்லாவற்றையுமே துறந்து விடுவர். அவரது உடலும் உயிரும் தன்னையே இழந்து விடும்.

"எல்லாம் அற என்னை இழந்த நலம்" என்று அருணகிரியார் பாடுகின்றாரே. இதே நிலையில் தான் கோபியர் கூட்டமும் சேவித்தனர். கண்ணனைக் கடவுளாகவே பாவித்தனர்.

மனம் அலை பாய்வது, புத்தி சலன மற்றது. மனம் விரிவை விரும்பும், புத்தி ஒடுக்கத்தை விரும்பும், அபிராமிப்பட்டரை எண்ணின் இது புரியும். கடவுள் புத்தியால் உணரத்தக்கவர். மனத்தால் அனுபவிக்கத் தக்கவர். புத்தியில் தன்னைத் தேடுபவர்களுக்கு கீதையைக் கொடுத்தான். கீதமும் கொடுத்துக் கீதையையும் தந்தான்.

எண்ணங்களில் வண்ணம் கோலும் சத்திய நெறியே கீதை. கீதையின் போதனைள் வேதனைகளை அகற்றும். சோதனைகளைத் தடுக்கும். சாதனைகளை நிலைநிறுத்தும். புத்தி வழியில் தன்னைத் தேடுபவர்களுக்கு கிருஷ்ணர் கீதையைத் தந்தார். வில்லுக்கு வீரன் விஜயன் என்று புகழப் பெற்ற அர்ச்சுனன் கிருஷ்ணர் சொல்லுக்குப் பணிந்தான். செயல் ஒழிந்த விஜயனை செயலில் ஆழ்த்தியது கீதை. செயலில் இருந்த விலங்குகள், மனிதர், தேவர் அனைவரையும் செயலழிக்க வைத்தது கண்ணன் கீதம். போரில் அர்ச்சுனன் தேரில் கிருஷ்ணபரமாத்மா, கீதையின் உள்ளடக் கங்களை எடுத்து விலக்க வேண்டியவற்றை விடுத்து வாழ்வுக்குத் தேவையானவற்றைக் கொடுத்து ஆற்றிய உபதேங்கள், இன்று தேசங்கள் எங்கும் வியாபித்து மனித வாழ்வை, தாழ்விலா நிலையில் மேம்படுத்தி வைத்திருக்கின்றன. இது அழகிய தமிழில் மொழி பெயர்க்கப்பட்டதுமின்றி வேற்று மொழிகளிலும் தனது பெருமையைப பறைசாற்றிக் கொண்டிடுதானிருக்கின்றது. நடப்பது நடந்தே தீரும். முதிர்ந்த ஞானம் பெற்றவன் வாழ்க்கையில் பற்றற்றநிலை எய்துவான். "பற்றுக பற்றற்றான் பற்றினை" என்ற நிலை வரும். கௌரவர்கள்,துரோணர், பீஷ்மர் போன் றோர்க்காக மட்டுமன்றி மறைந்து போன பிதிர்களுக்காவும் அர்ச்சுனன் வருந்துகின்றான். அர்ச்சுனனின் இத்தகைய சிந்தனை பகவானுக்கு விந்தையாகவே இருக்கின்றது.

உடம்பையே நிச்சயமாகக்கொள்ளும் அர்ச்சுனன், அதனால் அவ்வுடம்புகளின் அழிவுக்குப்பின் இராச்சியம்தான் கிடைத்தாலும் என்ன பயன் என்று அங்கலாய்க்கின்றான். இதனைச்சுட்டிக்காட்டும் பகவான் அழியக்கூடிய உடம்பிற்குப் பின்னால் உள்ள அழிவற்ற ஆன்மாவே பொருட்படுத்துவதற்குரியது என்பதை எடுத்துக் கூறிகின்றார். விழிப்படைந்த அர்ச்சுனன் தெளிவு பெறுகிறான். கீதோப தேசத்தின் கருவேயிது.

கீதை புத்திக்கு விருந்து கீதம் மனதிற்கு விருந்து கீதையாலும் கீதத்தாலும் உயிர்களை உய்விக்கும் கண்ணனே உயிர்களின் விருந்து. கீதை உயிர்களுக்கு மருந்து. யோகிகளின் பார்வையில் புல்லாங்குழல் என்பது சரீரம். மனித சரீரத்தில் ஒன்பது துவாரங்கள் உள்ளன. "ஒன்பது வாசல் ஒக்க அடைக்கப் பெற்றாலும்" என்றார் அப்பர் அடிகள். குழலிலும் அடைக்காத வலப்பக்கம் சேர்த்து ஒன்பது துவாரங்களே.

சுவாசக்காற்றைக் குழலில் செலுத்தி னால் கானம் பிறக்கிறது.சரீரத்தில் சுவாசக் காற்றை ஒழுங்குபடுத்தினால் பிராணாயாமம் முறையில் குண்டலினி விழிக்கிறது. இதுவே கண்ணன் கீதத்தின் அருமையும் கீதையின் பெருமையுமாகும்.

# பௌர்ணமியே வந்து வரம் தந்திடு.......!

கவிஞர் ம. புவிலக்ஷ்மி
பெரிய நீலாவணை

அன்னை மடியில் அரவணைத்து
அன்புப் போர்வையில் அளவளாவி
'அ' படிக்க பாடசாலையில் நுழைந்து
அவனிதனில் அல்லற்படும் குழந்தைக்கு
பௌர்ணமியே வந்து வரம் தந்திடு.....!

பருவமதில் நண்பர் மத்தியிலே......
பக்குவமாய்ப் பல்கலைக் கழகம் சென்று
பறக்கும் பட்டாம் பூச்சிகளாய்
வலம் வரும் பருவச் சிறார்களுக்கு
பௌர்ணமியே வந்து வரம் தந்திடு.....!

வேலைக்கு விண்ணப்பித்த இளம் மொட்டுக்களாய்
வேதனையைச் சுமந்துவரும் கருவண்டுகளாய்
வேர்விட்டு ஓங்கிநிற்கத் துடிக்கின்றவர்களுக்கு
வேளையைக் கூட்டிவர .......
பௌர்ணமியே வந்து வரம் தந்திடு.....!

சாதிமத பேதமில்லை வேற்றுமைக்கு இடமுமில்லை
சாந்தி ஒன்றைத் தேடிவரும் நங்கையர்க்கும்
சாதனைகள் பல சமைத்து .....
சான்றோனாய் சமூகத்தில் உயர்ந்து வர
பௌர்ணமியே வந்து வரம் தந்திடு.....!

சீதனக் கொடுமைகளோ பல வழியில்
சீர்கெட்ட வாழ்வோ பலமங்கையருக்கு
சீறி வாழ்வதற்கோ சமூகத்தில் இடமுமில்லை ~அவன்
சிறப்பான வாழ்விற்காய் ....
பௌர்ணமியே வந்து வரம் தந்திடு.....!

# ஓவியக்கலையில் எகிப்திய கிரேக்கக் கலைகள்

செல்வி.தர்சினி கனகராசா
ஆசிரியை,
வ/சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம்.

ஓவியக்கலையின் எகிப்திய கிரேக்க கலைகள் மிகவும் முக்கியமானவையாகும். நைல்நதிக் கரையில் கி.மு 4500 – 1090 வரைக் குரிய காலத்தில் சிறந்து விளங்கிய நாகரீக மக்களால் எகிப்தியக் கலைகள் தோற்றுவிக்கப் பட்டது.ஓவியங்களில் பேரோ எனப்படும் அரசர்களின் வாழ்வைச் சித்திரிக்கும் தொடர் ஓவியங்களுள் கைறோக் கிளிப்ஸ் எனப்படும் சித்திர வடிவிலான எழுத்துக்களும் முக்கிய இடம் பெறுகின்றன. பிறமிட்டுக்களின் உட்புறத்திலும் பாறைச் சுவர்களிலும் ஓவியங்கள் வரையப் பட்டுள்ளன. மனித உருவங்களின் தலையும் காலும் பக்கப்பாடாக வரையப்பட்டுள்ளது. மரம், செடி, கொடி, பறவைகள் போன்றவை இதில் சித்தரிக்கப்பட்டுள்ளன. இறந்த அரசர்களை அடக்கம் செய்வதற்கு பிரமிட்டுக்கள் எனப்படும் கூர்நிதிக் கோபுரங்களை அமைத்தனர். மிகப்பெரிய பிரமிட் 400 அடி உயரமானது. கட்டிடத்தில் தூண்கள் பைப்பிறஸ் எனப்படும் பூவின் வடிவில் அமைந்தவையாகும். கட்டிடங் களில் தோபஸ் நகரிலுள்ள லக்சோர் ஆலயம் (கி.மு.1411 இல்) அமினோபிஸ் 111எனும் அரசன் காலத்தில் அமைக்கப்பட்டது. அபுசம வெல் எனும் இடத்தில் சூரிய தெய்வத்தின் ஆலயம் அபிதாஸ் எனும் இடத்திலுள்ள ஆசாதி ஆலயம் ராசெஸ் என்னும் அரசனால் அமைக்கப்பட்டது. தங்கத்தால் ஆக்கப்பட்ட எகிப்தின் அரசு இலட் சணமாகிய கழுகு கலையம்சம் கொண்டதாகும். அரசனின் மேன்மையை உணர்ந்த பிரமிட்டுக் களுக்கு முன்புறம் அமைக்கப்பட்ட சிப்பமான ஸ்பினழகஸ் (Sphinx) எனப்படும் உருவம் மனித தலையும் சிங்க உடலையும் கொண்ட தாகும். சுண்ணாம்புக் கல்லில் அமைக்கப்பட்டு நிறம் தீட்டப்பட்ட நெபிரிற்றி, ஆதார் கோயில் வாசலில் காணப்படும்.

கிளியோபற்றா, துடங்காமன் அரசன், அபுசிம்பெல் சூரிய ஆலயத்திலுள்ள ராம்சொல 11 அரசன் மனைவி (65 அடி) ஆகிய சிற்பங்களும் முக்கியமான எகிப்திய கலை வடிவங்களாகும் மட்டுப்படுத்தப்பட்ட கலைப்படைப்பானது ஆக்நாதன் என்னும் அரசன் காலத்தில் சிறிது சுதந்திரம் வழங்கப்பட்டது.

இனி கிரேக்க கலையை நோக்கினால் இது கி.மு.2500 கி.மு.1400 வரையான காலத்தில் வளர்ச்சி பெற்றதாக கூறப்படுகின்றது. பெரிக்ளில் மன்னன் காலத்தில் அதென் சில அமைக்கப்பட்ட பாதினென் தேவாலயம் கட்டிடச் சிறப்புக்கு எடுத்துக் காட்டப்படும். இதன் தூண்கள் "டொறிக்" முறையில் அமைக்கப்பட்டது. நாட்டிற்கு சேவை செய்த அரசியல்வாதிகள் கலைஞர்கள்

விளையாட்டு வீரர்கள் நூலாசிரியர்கள் போன்றோரை சிற்பங்களாக வடிவமைத்தனர். அனேக சிற்பங்கள் பளிங்குக்கல்லால் ஆனவை வேறுபட்ட அமைப்பைக் கொண்டவை "பருதி வட்டம் வீசுவெண்" மைறான் என்ற சிற்பியால் ஆக்கப்பட்டது. இதன் மூலமாதிரி வெண்கலத்தால் ஆக்கப்பட்டது. ஈட்டி எறிபவன், தலைமயிர் கட்டிய இணையள் இவை இரண்டும் பொலிக்டீடஸ் என்பவரால் ஆக்கப்பட்டது. லியூக்லிஸ் வரைந்த திராட்சைப்பழ ஓவியத்தில் பறவைகள் மயங்கி பறந்து வந்ததாக கூறப்படுகின்றது.

இவ்வாறு ஓவியக்கலை வளர்ச்சியில் கிரேக்க எகிப்து கலைகள் இன்று வரை செல்வாக்கும் அழியாத் தன்மையும் பெற்று வருவதை காணக் கூடியதாக உள்ளது.

"சித்திரக் கலை நமது சிந்தனையை
விரிவுபடுத்தி ஆளுமையை வளர்க்கிறது"

# தமிழர் பண்பாட்டில் கலை

திரு.பஞ்சநாதன் ராகுலன்
ஆசிரியர் - சித்திரம்
மு/ புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி

கற்காலம் தொட்டே தமிழரின் பண்பாட்டு வளர்ச்சியானது பல்வேறு சூழல்களுக்கிடையே வளர்ந்தும் தேய்ந்தும் வந்துள்ளதை அவதானிக் கலாம். ஏனெனில் மனித இனக் குழுதான் வாழ்ந்த சூழலுக்கும் தேவைகளுக்கும் ஏற்ப தனது பழக்க வழக்கங்களை ஒழுங்குபடுத்தி முறைப்படுத்தி வரையறுத்து கொள்வதனால் பண்பாடும் அதனோடு இயைந்து போனது. எனவே பண்பாடு என்பது மனிதனால் உருவாக்கப்பட்டது என்பது தெரிகிறது. மேலும் பண்பாட்டினை இரு வழிகளில் இனங்கண்டு கொள்ளலாம். அவையாவன:-

- மொழி வழிப் பண்பாட்டு உருவாக்கம்
- மத வழிப் பண்பாட்டு உருவாக்கம்

மொழி வழிப் பண்பாட்டு உருவாக்கம் என்பது மக்கள்மொழி பேசும் வாயிலாக பண்பாட்டினை வெளிப்படுத்தலே ஆகும். உதாரணமாகத் தமிழ்பேசும் மக்கள் தமிழ்த் பண்பாட்டை நிலை நாட்டல் மதவழிப் பண்பாடு எனும் பொழுது இந்த பண்பாட்டு வட்டத்தினுள் வருவோரிடையே காணும் வழக்காறுகளை உன்னிப்பாக அவதானித்தல் அவசியம்.

தமிழிலே பண்பாடு பற்றிய நூல்கள் இல்லாது போனாலும் தொல்காப்பியர் காலம் தொட்டு பண்பாடு பற்றி ஆங்காங்கே குறித்து சென்றுள்ளதை காணலாம். இதன் விளக்கம்

> "பண்புடையார் பட்டுண்டு உலகம்
> பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்"

இந்த அடிச்சொற்றொடர் மூலம் பண்பாடு பற்றி அறியலாம். மேலும் பண்பாடு என்பது "பரம்பரை பரம்பரையான நல்ல குடித்தன்மை யாலும் பிறரிடம் வேறுபாடு காணாத ஒழுக்கத் தாலும் பொருத்தமாக அமைவதாகும்" என்று சமூக அறிவியல் கலைக்களஞ்சியம் குறிப்பிடு கின்றது. பண்பாடு என்பது "குறிப்பிட்ட ஒரு மக்கள் கூட்டம், சமூக, வரலாற்று வளர்ச்சியினூ டாகத் தோற்றுவித்துக் கொண்ட பௌதீகப் பொருட்கள், ஆத்மாத்த கருத்துக்கள், மத நடை முறைகள், சமூக பெறுமானங்கள் ஆகியவற்றின் தொகுதி" என பேராசிரியர் கா. சிவத்தம்பி இலங்கை பண்பாட்டு கலைகள் ஓர் அறிமுகத் தில் குறிப்பிடுகின்றார்.

அடுத்து தமிழர் பண்பாட்டில் கலைகளின் முக்கியத்துவத்தை நோக்குவோமாயின் பண்பாட் டைப் பேணுவதில் ஏனையோருக்கு அதனைத் தெரிவிப்பதில் நேரடியான பார்வையில் நமக்குக் கிடைக்கும் சான்றுகளில் ஒன்று கலைகளே. கலையில் மனிதன் தனது சிந்தனையை, உணர்ச்சியை ஏதோ ஒரு வகையில் குறை

நிலைப்படுத்துவதோடு அதற்குள் தன்னையே காட்டி நிற்கின்றார். தனக்கு விரும்பியதை தனக்குத்தானே மெய்ப்பிக்க அவன் ஒவ்வொரு உணர்வையும் அந்தந்த வடிவத்தோடு வெளிப்படுத்துகின்றான். மேலும் இதனை உதாரணத்துடன் பார்த்தால் பசிக்கும் போது பசி தீர்க்கும் தேவை போல அவனிக்கும் இந்த வெளிப்பாடு அமைகிறது. இவ்வாறு அவன் நம்பியதும் விரும்பியதும் அந்த சமூகத்தை ஒட்டியே வரும் எனவே தான் கலைகளில் அச்சமூகத்திற்குரிய பண்பாடு தெரிகின்றது என்கின்றோம்.

அந்த வகையில் தமிழர் பண்பாட்டு உருவாக்கத்தில் கலை என்பது தனிமனிதன், தன்வாழ்க்கை நடைமுறைகளின் போது அந்த சமூகத்திற்குரிய நடைமுறைகளையும், விழுமிய ங்களையும் விளங்கிக் கொள்ள வேண்டியவனா கின்றான். மேலும் பண்பாடு என்பது வெளிப் பார்வைக்கு நடத்தை முறைபோல் தோன்றி னாலும் அது ஒரு அறிகை முறையே என்று குறிப்பிடுகின்றனர். இந்த அறிகை முறை என்பது கலைக்குரிய பண்பாக அமைவதும் குறிப்பிடத் தக்கது.

மேலும் தமிழரின் பண்பாட்டில் கலைகள் கோயிலை மையப்படுத்தி இசை, நடனம், ஓவியம் ,சிற்பம், கட்டடம் வளர்க்கப்பட்டு தமிழர் பண் பாட்டில் சிறப்பிக்கப்பட்டன. அந்த வகையில் கிராமப்புற மக்களாலும் கலைகள் வளர்க்கப் பட்டன. அந்த வகையில் பாவகையாலும் பண்ணிசையாலும் உருவாக்கப்பட்ட இசை யானது தற்போது ஆலயத்தில் பஞ்சபுராணங்கள், திருமுறைகள் ஓதல் போன்றவற்றின் ஊடாக வளர்க்கப்பட்டு மக்களின் பண்பாட்டுடன் தொடர்புபட்டுள்ளது மேலும் தவில், நாதஸ்வரம் போன்ற வாத்தியங்கள் எல்லாக் கிரியைகளிலும் தமிழரின் விசேட வைபவங்களிலும் இசைக்கப் பட்டு தமிழர் பண்பாட்டுடன் தொடர்புபடுகின்றது.

நடனக் கலையானது ஆலயத்தை மையமாகக் கொண்ட நடராஜப் பெருமானின் வடிவம் தான் நடனக் கலை தமிழர் பண்பாட்டில் மக்களிடம் தொடர்புபட்டது. இவற்றைவிட நடனக்கலை கூத்து வடிவில் மக்களிடம் தொடர்புபட்டன. அதாவது யாழ்ப்பாணத்தில் வசந்தன் கூத்து, முல்லைத்தீவில் கோவலன் கூத்து, மட்டக்களப்பில் வடமோடி, தென்மோடிக் கூத்து என இவ்வாறாக ஒவ்வொரு இடத்தின் மக்களின் பண்பாடு வெளிப்படுகின்றது.

ஓவியக்கலையை எடுத்துக் கொண்டால் சோழர் காலத்தில் தஞ்சைப் பெருங்கோயில் ஊடாகத்தான் கலைகள் வளர்க்கப்பட்டன. இவற்றுள் ஓவியமும் சிறந்து காணப்பட்டு மக்களிடம் தொடர்புபடுகின்றன. உதாரணமாக விஷ்ணுகோயிலை எடுத்துக் கொண்டால் தசாவதாரங்கள் ஓவியமாக தீட்டப்பட்டு மக்களுக்கு முன்பு நடந்த கதைகளை உணர்த்தி பண்பாட்டுடன் தொடர்புபடுத்தி நிற்கின்றது.

கட்டடக் கலையானது கோயிலை மையப்படுத்தித்தான் கட்டடக் கலைகள் சிறப்புப் பெற்றன. இந்தக் கோயிலானது மக்களின் பண்பாட்டின் கருவூலமாகத் திகழ்கின்றது. அடுத்துத் தமிழர் பண்பாட்டு கலைகளில் சடங்குகள் முக்கியம் பெறுகின்றன. கலைகளின் ஊற்று மதச் சடங்குகள் ஆகும். சடங்கு என்பது

பண்பாட்டு விழுமியங்களை ஏற்றுக் கொள்வ தான குறியீட்டு நடவடிக்கை எனலாம்.

அடுத்து தமிழர் பண்பாட்டுக்கலைகள் குலரீதியாக சிறப்புப் பெற்றது. கலைகள் குலமரபினரால் தான் உருவாக்கப்பட்டு மக்களின் பண்பாட்டில் தொடர்புபட்டன. இந்த வகையில் கலைகள் யாவும் தனி மனிதனால் கலைஞனால் வெளிப்படுத்தப்பட்டாலும் அவை அச்சமூகத்திற் காகப் பொதுமைப்படுத்தப்படல் வேண்டும்.

அந்த வகையில் தமிழர் பண்பாட்டு உருவாக்கத்தில் கலைகள் சமூகத்தில் உள்ள அனைவரும் பகிர்ந்து கொள்ளக் கூடிய கருத்துக்களைக் கலைகள் பொதித்து வைத்திரு க்க வேண்டும். என்று கூறப்படுவதிலிருந்து கலைகளும் பண்பாடும் ஒன்றிலிருந்து ஒன்று தங்கி இன்றியமையாத் தொடர்பு கொண்டு ள்ளன என்பது கண் கூடு.

நுண்கலைகளான ஓவியம், சிற்பம்,சங்கீதம்,நடனம்,நாடகம் முதலானவை மனிதனுக்குப் பொறுமை என்ற நற்குணத்தைக் கற்றுக் கொடுப்பன.பெண்கள் பொறுமை சாலிகளாக இருக்க வேண்டும் என்பதனாலேயே நம் முன்னோர் இக்கலைகளை அவர்கள் கற்க வேண்டுமென வலியுறுத்தினார்கள்.

# சொல்லு பாப்பா!

பா. பாலச்சந்திரன்
ஓய்வுநிலை அதிபர்,
மயிலணி, சுன்னாகம்.

01. ஒருதெய்வம் உண்டென்று சொல்லு பாப்பா
உன்னில் உண்டென்று சொல்லு பாப்பா
தருமம் நன்றென்று சொல்லு பாப்பா
தளராமல் செய்யென்று சொல்லு பாப்பா
திருட்டு தீதென்று சொல்லு பாப்பா
திருடாமல் வாழென்று சொல்லு பாப்பா
குருமாரை கும்பிடென்று சொல்லு பாப்பா
குடும்பமாய் வாழென்று சொல்லு பாப்பா

02. பொறாமை ஒழியென்று சொல்லு பாப்பா
பொல்லாக்கை அஞ்சென்று சொல்லு பாப்பா
பொறுமை பெரிதென்று சொல்லு பாப்பா
பொய்மை கேடென்று சொல்லு பாப்பா
புறங்கூறல் பழுதென்று சொல்லு பாப்பா
புண்ணியங்கள் புரியென்று சொல்லு பாப்பா
வறியோர்க்கு வழங்கென்று சொல்லு பாப்பா
மனிதரை மதியென்று சொல்லு பாப்பா

## என்று நீ பாடு!

03. கல்வி இன்று கற்க
கடமை என்று அறிக
கல்வி எமது உடமை
கற்பித்தல் உமது கடமை
என்று நீ பாடு!

04. அடியும் இன்று இல்லை
தடியும் இன்று இல்லை
பசியும் இன்று இல்லை
பழிப்புடையும் இன்று இல்லை
என்று நீ பாடு!

05. பாடி ஆடவூஞ்சல் உண்டு
ஆடிப் பாடவேளை உண்டு
கூடிப் பேச கூடம் உண்டு
தேடி படிக்க நிலையம் உண்டு
என்று நீ பாடு!

## எங்கள் பள்ளியிலே

06. நோயென்றால் மருந்துண்டு
ஊஎன்றால் உதவியுண்டு
குறையுண்டேல் நிறைவுமுண்டு
எங்கள் பள்ளியிலே.

07. மேளமுண்டு தாளமுண்டு
மேடையுண்டு கூத்தோடுசங்
கீதமுண்டு கேணியுண்டு
எங்கள் பள்ளியிலே

08. கரபந்துண்டு கால்பந்துண்டு
குத்துச்சண்டையுண்டு கூடைபந்துண்டு
துடுப்புமுண்டு தோற்பந்துமுண்டு
எங்கள் பள்ளியிலே.

09. தொண்டருண்டு தோட்டமுண்டு
தொலைபேசியுண்டு தொலைகாட்சியுண்டு
தொன்மையுண்டு தூய்மை உண்டு
எங்கள் பள்ளியிலே.

# உள்மனச்சித்திரம்
## (உளவியல் அரங்கு பற்றிய குறிப்பு)

**திரு.முத்து இராதாகிருஷ்ணன்**
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்
வடமாகாணம்.

நம்பிக்கைகளும் வாழ்வின் மர்மங்களும் புரிபடாத அல்லது இயற்கையின் மர்மங்கள் புரிபடாத பண்டைய மனித வாழ்வியல் முறையிலிருந்து முற்றாக மாறிய நவீன சமூக வாழ்வு உண்மையில் மனிதனை பெரும் பிரயத்தனத்துள் ஆழ்த்தியுள்ளது என்றே குறிப்பிடவேண்டும் அளவிட இயலாத பெருத்த ஒன்று என்ற நிலையில் இருந்து அனைத்தும் கிட்டிய கிராமமாக பூமி மாறியது. ஆனால் மனிதன் தனது தனித்துவத்தையும் பாரம்பரியம் ,பலம் என்பவற்றையும் தக்கவைக்க தொடர்ச்சியாக போராடுகின்றவனா கின்றான். இது அவனது வாழ்ந்து கொன்டிருக்கும் அக்கணத்தை முக்கியத்துவம் மிக்கதாக்கு கின்றது. இம் முக்கியத்துவம் அதற்கான அவனது இருப்பு இருப்புக்கான பிரயத்தனம் இவையே அவனது கலை இலக்கிய வெளிப்பாடுகளா கின்றன. தனது திருப்தியை நோக்கியதாக அவனது படைப்புக்கள் மாறின. அல்லது அமைந்தன இவ்வாறே இன்றய ஓவியனதும் அவனது படைப்புக்களதும் அவனது பிரயத்த னத்தை வெளிக்காட்டுபவைகளாக உள்ளன மாற்றங்கள் மட்டுமே நிலையானதாக நிச்சய மானதாக உள்ள இன்றய யதார்த்தத்தின் மெய்யான ஒரு சொல் நவீனம் எனலாம் இதை இன்னும் ஒரு வகையில் கூறினால் இன்றைய ஓவியம் ஓவியனின் உளப்பாங்கு கற்பனை அனுபவம் என்பவற்றுடன் உண்மையினை வெளிப்படுத்துவதாகவும் அமைதல் வேண்டும்.

இந்த வகையில் உள் மனச் சித்திரம் என்ற இந்த தலைப்பு எதைக் குறிப்பிடுகின்றது அல்லது எதனை ஆராய முற்படுகின்றது என்பதை இனி நோக்குவோம்.

ஒரு ஓவியம் எப்போதும் சில அடித்தள மான விடயங்களை கொன்டிருத்தல் அவசிய மானதாகும் அதாவது ஓவியத்தின் வடிவமைப்பு அல்லது அமைப்பு முறைக்கான உருவமைப்பு அதனை வெளிக் கொண்டு வரும். இரேகை நிறம் வெளி இவற்றிலிருந்து பிரிய முடியாத உணர்வின் உண்மைத் தன்மை அதன் அதிர்வு நிலை இவை எல்லாவற்றினதும் ஒருங்கி ணைந்த இயங்கு நிலை ஆகியனவே அவையாகும்.

ஆனால் பல்வகைப்பட்ட பாணிகள், இசங்கள் இன்று ஓவியத்தில் பயன்படுத்தப்பட்டாலும் இந்த இயங்கு நிலை எல்லா ஓவியங்களிலும் வந்துவிடுவதில்லை. உணர்வுகளுடனான மனித நடத்தைகளை மனிதர்கள் கண்டுணரும் போது தான் அல்லது அவ் ஓவியன் கண்டு அதனைப்

பகிர முற்படும் போது தான் இத்தகைய ஓவியங்கள் உருவாகும்.

இது ஓவியங்களுக்கு மட்டுமில்லை எல்லாவிதமான படைப்பிலக்கியங்கள் படைப் பாக்கங்களுக்கும் பொருத்தம். அதுமட்டு மல்லாது மனிதன் தன்னைச் சுற்றியுள்ள யதார்த்தத்தின் செல்வாக்கினை அல்லது தாக்கத்தினை அனுபவிப்பதன் விளைவாக தான் சார்ந்துள்ள சமூக தொழிற்பாடுகளில் அசைவினை அல்லது மாற்றங்களை ஏற்படுத்த விளையும் ஒரு இயங்கு நிலையை காண்பிக்கின்றான். யதார்த்தத்தினை அனுபவிக்கும் தன்மை ஒவ்வொரு தனி நபருக்கும் வேறுபட்டதாக அமையும். இது அவர்களின் வளர்ந்த சூழல் அனுபவம் உளவயது முதிர்ச்சி என்பவற்றுடன் தொடர்புபட்டது.

உதாரணமாக ஒரு பெண் சந்திக்கும் உளம் சார்ந்த நெருக்கீட்டு நிலைக்கும் அதே அனுபவத்தை பெறும் ஆணின் நிலைக்கும் வேறுபாடு உண்டு. பெண் கண்ணீரும் துக்கமும் கொண்டவளாக தன்னை துலங்க செய்யும் அதே வேளை ஆண் எதிர்ப்புணர்வை வெளிப்படுத்தும் துலங்கலைக் கொண்டவனாக இருக்கின்றான். இவ்வாறு ஒவ்வொரு தனி நபரும் யதார்த்தத்தை அனுபவிப்பதிலும் துலங்கும் விதத்திலும் வேறுபட்டே காணப்படுகின்றனர். தூண்டப்படும் எண்ணம் உணர்வு என்பவைகளை மனிதன் தனக்குள் மீண்டும் மீண்டும் எழச் செய்து அனுபவிக்க முயல் கின்றான்.

உண்மையில் ஒவ்வொரு ஓவியமும் பார்வையாளருடன் பேசுதல் வேண்டும். பார்வையாளர்களும் ஓவியங்களுடன் அந்தரங் கமான உரையாடல்களை புதிது புதிதாக நிகழ்த்திக் கொண்டிருத்தல் வேண்டும் அந்த ஓவியங்கள் தமக்குள் தாமே பேசுவதும் உரையாடுவதும் எமக்கு புரிதல் வேண்டும். இது எப்போது ஏற்படும் இந்த உணர்வு நிலை ஆலயத்தின் மூலஸ்தானத்திற்கு முன் நிற்பது போன்ற உணர்வு நிலை, பக்தி நிலை, ஆண், பெண், ஆடை, நிர்வாணம், அதுவும் தெரியாத எதுவும் புலப்படாத புரியாத ஓர் நிலை இது வேண்டும். இது ஏற்பட வேண்டும்.

உண்மையில் உள்மனச் சித்திரம் என்பது அரங்கு என்ற வலிமையான ஒரு நிகழ் கலையின் தாக்கத்தினூடாக உணர்வுகளை உறவாட வைத்து அதன் முழுமையினை ஓவிய மாக்கி அடக்குதல் அல்லது அதன் அதிர்வுகளை அனுபவித்தல் என்பதாக குறிப்பிடலாம்.

இங்கு வாழ்வின் பிரத்தனங்கள், போர், காதல், துன்பம் எல்லாம் ஒன்றன் மேல் ஒன்றாகி இறுகி அசையாமல் கிடக்கும் மனதின் பாரத்தினை, முட்டினை வெளிக் கொண்டு வருதல் முதற் படியாக அமையும். இவ் அனுபவப் பகிர்வு அரங்கியலில் முக்கியமான ஒன்றாகும். அரங்கு, அரங்கப்பட்டறை இதனைச் சாதிக்கும் நம்பிக்கையும் நட்பும் உண்மையும் நிறைந்த இடம் கிடைக்கும் போது இவ்வுணர்வுகள் முட்டுடைந்து வெளிப் பெருகும்.

பலரது மனங்களின் உணர்வு வெளிப்பாடுகள் பல்வேறுபட்ட கதைகளை, பிரச்சினைகளை துயரங்களைக் காட்டும். எல்லோரது பிரச்சினை களும் பொதுமையான பண்பை கண்டு ஒரு பெரும் உணர்வுப் பாறையாக அல்லது துயரப்

பாறையாக வடிவம் பெறும் போது அதனை அரங்க முறையிலான படிமங்களாகக் காணலாம்.

உண்மையில் அரங்கு என்பது ஒரு உயிருள்ள காட்சிகளின் இயக்கம் என்பர். இங்கும் இவ்வரங்கில் பங்கு பற்றுபவர்களின் உணர்வின் உண்மைத் தன்மையும் அதன் அதிர்வும் உயிருள்ள காட்சிப் படிமங்களுக் கூடாக உயிர்த் தன்மையான ஓவியக் காட்சியாகின்றது. உயிருள்ள காட்சி என்பது இங்கே இந்த நிமிடத்திலே இப்போது என்ற அர்த்தத்தில் வெளிப்படும்.

வெளிப்படும் உயிருள்ள காட்சிப் படிமம் இயங்கத் தொடங்க அல்லது அசைவைப் பெற அது ஆற்றுகையாகின்றது. உண்மையில் இந்த ஆற்றுகையினை அசையும் ஓவியம் எனக் குறிப்பிடலாம். இவ்விடத்தில் இவ்வரங்கில் பங்கு பற்றும் ஓவியன் இவ்வசைவினை ஆற்றுகை யினை முன்னர் தனது மனத்தி லிருத்திய உணர்வின் தன்மையுடன் இணைத்து முழுமையாக்குகின்றான். அசையும் இயங்கும் படிமங்களை சுயாதீன கோடுகளின் கூட்டி ணையாக இயங்க வைக்கிறான். அந்த உயிர்த் தன்மையதான அதன் அசைவை மனதில் நிறைத்து அதன் முழு வலிமையையும் அது தரும் வலியையும் அல்லது மகிழ்வையும் முழுமை யாக ஓவியமாக வெளிப்படுத்துகின்றான். இதுவே உள் மனச் சித்திரம் எனலாம்.

நிலவின் கீழே துயில் கொண்டிருந்தான்
சூரியன் கீழே குளிர் காய்ந்திருந்தான்
செய்யத்தான் போகிறோம் என்று வாழ்ந்திருந்தான் - என்று
செய்யாமலேயே மாய்ந்து விட்டான்.

# தமிழோடு நான்

ஆ.சுமானர் (பாலபண்டிதர்)
ஆசிரியை
மன்/அல். அஸ்ஹார் ம.வி

அகமகிழ்ந்த அன்னையும்
என்னை
அரவணைத்து தாலாட்டுப்
பாடியதும் தமிழிலே
தத்தித் தவழ்ந்த
சின்னக்கிளி நான்
முத்தமிட்டு முடிச்சவிழத்த
முதல் வார்த்தையும்-தமிழே

பாருலகில் பாவையிவள்
பாடசாலை சென்று
கற்ற கல்வியம்-தமிழே

தமிழ் பெற்றெடுத்த
தத்தெடுத்த-காப்பியங்கள்
அகநானூறுகண்டு
அகம்மகிழ்ந்திருக்கிறேன்
புறநானூறில் புருவம்
உயர்த்தியிருக்கின்றேன்
வள்ளுவர் மாலையை
வாயாரப் புகழ்ந்திருக்கின்றேன்

கவிச்சக்கர வர்த்தியின்
கம்பராமாயணத்தில்
இதயம் பூரித்திருக்கின்றேன்
சிலப்பதிகாரத்தில்
சிந்தை சிலிர்த்திருக்கின்றேன்
மணிமேகலையில்
மாண்புகளைக் கண்டிருக்கின்றேன்
நளவெண்பாவில் பிரிவின் துயரை அறிந்திருக்கின்றேன்.
புரட்சிக்கவி பாரதியின்

புதுமைகண்டு
புன்னகைத்திருக்கிறேன்
பாரதிதாசனின் அழகின்
சிரிப்பில் அங்கலாய்த்திருக்கிறேன்

கண்ணதாசனின்
அனுபவக் கவிகண்டு
கண்கலங்கி இருக்கிறேன்
வைரமுத்துவின் வைர
வரிகளுக்கு
வாழ்த்துப் பாடியிருக்கிறேன்

மேத்தாவின்
ஊர்வலத்தில்
உரியபொருள்
கண்டு உவகையுற்றியிருக்கிறேன்.

அப்துல் ரஹ்மானின்
அடக்கத்தில்
அங்காரிகை (கரும்பு)
சுவைத்துச்
சுதிகண்டிருக்கிறேன்.

தாமரையின்
தமிழின் தழுவலுக்கு
தாளலயம் போட்டிருக்கிறேன்.

பா.விஜயின்
உடைந்த நிலாவில்
நானும்
ஒருத்தியாக
நாணேற்றிப்
பார்த்திருக்கிறேன்

இவற்றோடு
நான் வாழ
என்னோடு
தமிழ் வாழ்கின்றது

# வடமராட்சி கல்வி வலயத்தின் முழுநிலா நாள்
# கலைவிழாவின் நிகழ்ச்சிகளில் சில













# வலிகாமம் வலயத்தின் முழுநிலா நாள்
# கலைவிழாவின் நிகழ்ச்சிகளில் சில












# வவுனியா தெற்கு வலயத்தின் முழுநிலா நாள்
# கலைவிழாவின் நிகழ்ச்சிகளில் சில















# ஐரோப்பிய சங்கீதமும், கர்நாடக சங்கீதமும் ஓர் ஒப்புநோக்கு

வி.ஆரணி
மானிப்பாய்

தமது நாட்டினுடைய சங்கீத அறிவை விருத்தி செய்து கொள்வதற்குப் பிற தேசத்தில் வழக்கிலிருக்கும் சங்கீதத்தைப் பற்றி ஓரளவு அறிந்து கொள்ளுதல் அவசியமாகும். புதிய ஆக்கங்களை, இசைத்துறையில் விருத்தி செய்து கொள்வதற்கு எமக்கு மிகவும் பரிச்சயமான இசைகளான ஹிந்துஸ்தானி இசை, மேலைத் தேய இசை ஆகியவற்றின் அடிப்படைத் தத்துவங்களை அறிதல் உகந்தது.

சாஸ்தீரிய சங்கீதம் யாவும் ஒரே அடிப்படைத் தத்துவத்திலேயே வளர்ந்துள்ளன. ஸ.ப,ஸ.ம, சம்பந்தமான (வாதி,ஸம்வாதி) தத்துவங்கள் உலகம் அனைத்திலும் ஏற்றுக்கொள்ளப் பட்டவை.

இந்திய சங்கீதத்தில் ஸ,ரி,க,ம,ப,த,நி என அழைக்கப்படும் ஸப்த ஸ்வரங்களும் மேற்கத்திய இசையில் டோ,ரே,மீ,வா,ஸோ,லா,டீ (DOH,RAY,MIFAH,SOH,LA,TEE) என அழைக்கப்படுகின்றன.இவ்வாறு ஸ்வரங்களை அழைக்கும் முறை இந்தியாவில் மிகப் பழங்காலந்தொட்டே வழக்கிலிருந்து வந்தது. அதாவது நாரதரது பரிவாரஜக உபநிஷதத்தில் 4000 ஆண்டுகளுக்கு முன்பே இவ்வாறு குறிப் பிடப்பட்டுள்ளது. மேற்கித்திய SOLFA முறை GUIDOD AREZZO (995-1050 AD) காலத்திலிருந்தே வழக்கிலிருந்தது.

மேற்கித்திய இசையில் அடிப்படையான இராகம் மேஜர் ஸ்கேல் (Major Scale) அதாவது கர்நாக இசையில் தீரசங்கரா பரணத்திற்கும் வட இந்திய இசையில் பிலாவலுக்கும் ஒப்பான தாகும்.

மேஜர் ஸ்கேலில் உள்ள ஸ்வரங்கள் நார்சுரல் (Natural) என அழைக்கப்படும். நார்சுரல் அல்வாத ஸ்வரங்களை எடுத்துக் கொள்ளும் இராகங்களை அவ் ஸ்வரத்திற்கேற் பளட் (FLAT), ஸார்ப் (SHARP) என்றும் குறிப்பிடப்படும். உதாரணமாக கல்யாணி இராகத்தில் பிரதிமத்திமமே வருகிறத. அதனை FSHARP என்றும் கரகரப்பிரியாவில் வரும் சாதாரண காந்தாரத்தை EFLAT என்றும் குறிப்பர். என்றும் கரகரப்பிரியாவில் வரும் சாதாரண காந்தாரத்தை EFLAT என்றும் குறிப்பர்.

ஸப்த ஸ்வரங்களும்

C,D,E,F,G,A,B

ஸ, ரி, க, ம, ப, த, நி

என வழங்கப்படும்.

இந்திய சங்கீத லிபி முறையை ஸ்கிரிப்பட் நொடேஷன் (SCRIPT - NOTATION) என்றும் மேற்கத்திய சங்கீத லிபி முறையை (STAFF - NOTATION) ஸ்டாவ் நொடேஷன் என்றும் அழைப்பர்.

இந்திய இசையில் உள்ளது போன்றே மூன்று வித வலய வேறுபாடுகள் மேற்கத்திய இசையில் காணப்படுகின்றன.

**விளம்பித லயம் – SLOW TEMPO**
**மத்திம லயம் – MEDIUM TEMPO**
**துரிய லயம் – FAST TEMPO**
**துரித விளம்பித – ALLEGRO**
**துரித மத்திம – ALLEGRO MODERATO**
**துரித துரித – ALLEGRO ASSAI**

என்றும் அழைக்கப்படும்.

இந்திய இசையில் பாடகர் தன் குரல் வளத்திற்கேற்ப சுரதியை தேர்ந்தெடுப்பதற்கு சுதந்திரம் உண்டு. மேற்கத்திய இசையிலே பாடல் எந்த Key (Pitch) இல் எழுதப்பட்டுள்ளதோ அந்த Key யிலேயே பாடவேண்டும். மனோதர்ம சங்கீதம் என்பது இந்திய சங்கீதத்திற்கே உரிய வரப்பிரசாதமாகும். ஆலயபஜனை, கற்பனா ஸ்வரம், நிரவல்,பல்லவி, தானம் போன்ற வித்துவான்களின் கற்பனை வளத்தை எடுத்துக் காட்டும் அம்சங்கள் மேலைத்தேய இசையில் இல்லை.

மேற்கத்திய இசையில் இராகத்தை அஸ்கேல் (Scale) என அழைப்பர். ஸ்கேல் என்னும் பதமானது இலத்தீன் மொழியிலுள்ள ஸ்காலா (Scale) என்னும் பதத்திலிருந்து வந்ததாகும். ஸ்காலா என்றால் ஏணி என இலத்தீன் மொழியில் பொருள்படும்.

மேற்கத்திய இசையில் பிரதான ஸ்கேல் களான மேஜர் (Major) மைனர் (Minor) ஆகிய இரண்டும் 17ம், 18ம் நூற்றாண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் விருத்தியாயின. Major Scale இலிருந்தே புதிய இராகங்கள் கிரகபேதத்தின் மூலம் உருவாயின.

ஆங்கில இசையில் காணப்படும் பைத கோரியன் (Pythagorranmala) மேளமானது அதன் ஆரொகண ஸ்வரங்கள் வேறுபட்டு இருந்தாலும் ஆரோகன ஸ்வரங்களானவை கர்நாடக சங்கீதத்தில் வழங்கும் தேவகாந்தாரி இராகத்திற்கு ஒப்பானதாகும்.வேறு சில இத்தாலியப் பாடல்களும் தமது குறிஞ்சி அரபு நாதநாமக் கிரியா போன்ற இராகங்களுக்கு ஒப்பான மெட்டுக்களில் அமைந்துள்ளன. ஸிம்மேந்திர மத்திம இராகம் மேலை நாட்டு ஜிப்ஸி சங்கீதத்தில் காணப்படுகின்றன.

ஹார்மானிக் மைனர் ஸ்கேல் தமது கீரவாணி இராகததிற்கு ஒத்தாகும். இந்திய சங்கீதத்தில் ஒரு சமயத்தில் ஒரு ஸ்வரத்தையே பாடவோ வாசிக்கவோ முடியும். ஒன்றுடன் ஒன்று சம்பந்தமுள்ள ஸ்வரங்களை ஒரே தருணத்தில் ஒலிக்கச் செய்வது ஹார்மணிக்கல் சங்கீதமாகும். ஐரோப்பிய இசையில் ஸ்வரங்களை நோட் (Note) என்றும் சுரதியை பிச் என்றும் அழைப்பர்.

கர்நாடக சங்கீதத்தில் காணப்படுவது போன்று பெருவாரியான தாளங்களோ, இராகங்

களோ மேற்கத்திய இசையில் இல்லை. இந்திய இசை பக்தியை அடிப்படையாகக் கொண்டது. இந்திய இசைக்கச்சேரிகளில் 2 அல்லது 3 பக்க வாத்தியக்காரர்களே காணப்படுவர். மேற்கத்திய இசைக் கச்சேரி வாத்தியங்களையே பிரதான மாகக் கொண்டது. மல்லியம் முக்கிய இடம் வகிக்கிறது. மேலைத்தேய இசையில் Conductor முக்கிய இடத்தை வகிக்கிறார்.

இந்திய இசையில் கமகம், மனோதர்ம சங்கீதம் எனப்படுபவை முக்கிய அம்சங்களாகும். ஆனால் மேற்கத்திய இசையில் இசை காணப்படு வதில்லை. மேற்கத்திய இசையில் மனோதர்ம என்றும் அம்சம் வாக்கேகாரிடம் மாத்திரமே எதிர்பார்க்கப்படுகிறது.

ஐரோப்பிய சங்கீதத்தில் பெண்களுக்குரிய குரலை மூன்று விதமாகப் பிரிப்பர்.

1. சொப்ரானோ – Treble – உயர்ந்தது
2. மெஸோ – ஸொப்ரானோ – நடுத்தரமானது
3. கொன்டராக்டோ – தாழ்வானது

ஆண்களுக்குரிய குரலை நான்கு விதமாகப் பிரிப்பர்.

1. ஆல்டோ – ஆபூர்வமாக உயர்ந்தது
2. டெனர் – உயர்ந்தது
3. பரிடோன் – நடுத்தரமானது
4. பாஸ் – தாழ்ந்தது

12 ஸ்வரஸ்தானங்களும் அவற்றிற்கு சமானமான ஹிந்துஸ்தானி இசையில் வழங்கும் பெயர்களும் மேலைத்தேய சங்கீதத்தில் வழங்கும் பெயர்களும் கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

| மேலைத்தேய சங்கீதம் | கர்நாடகம் | ஹிந்துஸ்தானி சங்கீதம் |
|---|---|---|
| 1. C | ஸட்ஜம் | ஸட்ஜம் |
| 2. D flat | சுத்தரிஷபம் | கோமள ரிஷபம் |
| 3. D | சதுஸ்ருதி காந்தாரம் | தீவிர ரிஷபம்/ சுத்தரிஷபம் |
| 4. E flat | சாதாரண காந்தாரம் | கோமள காந்தாரம் |
| 5. E | சுந்தர காந்தராம் | தீவிர காந்தாரம் |
| 6. f | சுத்த மத்திமம் | சுத்த மத்திமம் |
| 7. f sharf | பிரதி மத்திமம் | தீவிர மத்திமம் |
| 8.G | பஞ்சமம் | பஞ்சமம் |
| 9. A flat | சுத்த தைவதம் | கோமள தைவதம் |
| 10 A | சதுஸ்ருதி தைவதம் | தீவிர தைவதம் |
| 11. B flat | கைசிகி நிஷாதம் | கோமள நிஷாதம் |
| 12.B | காகலி நிஷாதம் | தீவிர நிஷாதம் |

# கலைகள் சமூகப் பிரக்ஞையின் வடிவங்களாகும்

திருமதி.வலன்ரீனா இளங்கோவன்
ஆசிரியை,
யா/பொன் பரமானந்தர் ம.வி.
குரும்பசிட்டி.

கலையென்பது ஓர் "சமூக அழகியல் நிகழ்வு" ஆகும். ஒருவன் தான் அனுபவித்த உணர்வைப் பிறருக்கு வியாபிக்கச் செய் வதே கலையின் செயலாகும். தனிமனிதன் தனது அனுபவங்களை எப்படிக் கலையின் மூலமாகப் பதிவு செய்ய விரும்புகின் றானோ, அதே போன்று சமூகமும் சேக ரிக்கப்பட்ட தனது பண்பாட்டை அனுப வங்களை கலையில் பதிவு செய்ய விரும்பு கின்றது. கலை எந்தளவுக்குத் தனிமனித அனுபவத்தின் வெளிப்பாடாக இருக்கிறதோ, அதேயளவுக்கு அது சமூகப் பண் பாட்டின் விழுமியங்களைத் தாங்கியதாகவும் இருக் கின்றது. இதனால் தான் கலைகள் உணர்ச்சி களின் சமூக விழுமியங்களின் மிகச் சிறந்த வெளிப்பாடாக விளங்குகின்றன எனக் கூறப்படு கின்றன. இங்கு டால்ஸ் டாய் குறிப்பிடுவது போல "கலை உணர்ச்சிகளைத் தெரிவிப்பது" என்ற அர்த்தத்தில் சொல்லப்படவில்லை. மாறாக "சமூகப் பிரக்ஞையின் வெளிப்பாடு தான் கலை" என்பதை உணர முடிகிறது.

கலைஞனானவன் சமூகத்தின் ஓர் அங்கத்து வனாக, ஒரு சமூகப் பிராணி யாக இருக்கின்றான். அவன் தன் சமூகத் தோடு கொண்டுள்ள உறவின் தன்மைக் கேற்பவே ஆக்கங்களை ஆக்கு கின்றான். அதாவது வாழும் காலமும், சமூக நிலைமைகளும் அளிப்பன பற்றியே கலைஞ னால் அனுபவிக்க முடிகிறது. மனிதனது சமூகப் பிணைப்புக்கள், உறவுகள், குறிப்பிட்ட சூழலில் மனிதர்களது வாழ்க்கைகள், நட வடிக்கைகள், அன்றாட பிரச்சினைகள், சம்ப வங்கள் போன்ற சமகால சமூகம் தரும் அனுபவங்கள் கலைஞனது ஆக்க நுண்திறன் களைப் பாதிக்கின்றன. அப்போது அவன் கற்பனை செய்கின்றான். அந்தக் கற்பனை ஒரு கட்டுக்கோப்புக்குள் அமையும். அந்த கற்பனை யானது அவன் பெற்ற அனுபவத்தை மேற்கொ ண்டு செல்வ தாகவோ அல்லது முன்பு நடந்த ஒன்றோடு இணைத்துக் கூறுவதாகவோ இருக்கும். கலைஞனுக்கும் சமூகத்தில் வாழு கின்ற மற்ற அங்கத்தவர் களுக்குமுள்ள வேறுபாடு என்னவெனில் அவனது கற்பனை அனுபவம் வன்மையாக, பிரக்ஞை பூர்வமான தாக செறிவானதாக இருக்கும். இதனால் அவன் தன்னைச் சூழவுள்ள புற உண்மை களைத் தனக்கே உள்ள முறையில் தொகுத்துக் கொள்கின் றான். ஒவ்வொரு கலைஞனும் தான் காணும் புற உலகத்தைச் சித்திரிப்பது மாத்திரமல்லாமல், அவற்றை மற்றவர்கள் காணும் தன்மையிலும் உருவாக்கு கின்றான். அதாவது கலைஞன் தான் பார்க்கின்ற விடயங்களை அல்லது சித்தரிக்கின்ற விடயங் களைப் புறநிலைப்படுத்தி, ஒரு வடிவத்தில் தோற்றுவிக்கின்றான்.

நிஜ உலகை கலைப் படைப்பில் மீள் உற்பத்தி செய்வதென் பது, அவற்றைச் செய்வதற் கான பௌதிகப் பொருட்கள் யாவை என்பதிலும்

இந்த பௌதிகப் பொருட்களைப் பயன்படுத்தி இந்தக் கலையைத் தோற்றுவிக்கலாம் என்பதிலும் கலைக்குக் கலை வேறுபாடுகள் உண்டு. அதாவது கலைப்பொருளின் விடயத்தை கலைஞ னானவன் நன்கு தெரிந்து கொண்டு ஒரு குறிப்பிட்ட ஒளித்தெறிப்பு முறையில் கலைப்பிம் பங்கள் மூலம் சித்திரிக்கிறான். இந்தப் பிம்பங்கள் கலை வடிவங்களுக்கு ஏற்ப மாறும். உதாரண மாக இலக்கியத்தில் இது சொல் மூலமும், ஓவியத்தில் உலகின் வர்ண வளத்தைக் கொண்ட கட்புலப்படி வங்களாகவும், சிற்பத்தில் நெகிழ்வு டைய படிமங்கள் முப்பரிமாண வடிவம் மூலமாக வும், வரை கலையில் கரைகோடுகளின் மூலமும், இசையில் ஒலித்தொனி வேறுபாடுகளின் மூலமும், அரங்கிலும், சினிமாவிலும் நடிகர் களின் செய்து காட்டுகை மூலமாகவும் இது வேறு வேறு வடிவங்களில் தோன்றுகின்றன. இந்த யதார்த்த உலகை கலைஞன் ஒளித் தெறிப்பு முறையில் சித்திரிப்பது என்பதன் நோக்கம் மக்களுடைய அழகியல் தேவை களைப் பூர்த்தி செய்வதற்கேயாகும்.

இவ்வாறு கலை வடிவங்களின் தன் மைக்கேற்ப சித்திரிக்கும் கலைஞனின் கலைப்படைப்புகள் ஏதோ ஒரு வகையில் கலைஞனின் கருத்துக்கள், இலட்சியங்கள், விழுமியங்கள் ஆகியவற்றை உறுதிப் படுத்தும் உள்ளார்ந்த தரிசனங்களாகவும் விளங்கு கின்றன. இப்படைப்புக்கள் கலைஞனுக்கும் அந்த சமூகத்திலுள்ள மற்றைய அங்கத்தவர் களுக்கும் இடையிலானதொரு பாலமாக அதாவது ஒரு தொடர்புச் சங்கிலியாக அமைந்து விளங்கு கின்றன. தன்னுடைய கலைப் படைப்பைத் தான் யாருக்கென்று தோற்றுவிக்கின்றானோ அவர் களுடன் புதிய முறைமைகளில் அவன் தொடர்பு கொள்கிறான்.

அவனது கலைப் படைப்புக்கள் ஏதோ ஒரு வகையில் சமூகத்தில் பாதிப்பை ஏற்படுத்து கின்றன. அப்படைப்புக்களினூடு காணப்படும் கருத்துக் காரணமாகவோ அல்லது கருத்துநிலை காரணமாகவோ மக்களை அவன் உணர்ச்சி வசப்படுத்தச் செய்கின்றான். தனது படைப்பு ஏதோ ஒரு வகையில் சமூகத்தால் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும் என்பதை அவன் விரும்புகின்றான். குறிப்பிட்ட ஒருவரால் குறிப்பிட்ட ஒரு சூழலில், குறிப்பிட்ட ஒரு முறையில் உண்டாக்கப்படுகின்ற கலைப் படைப்பு அது உண்மையான கலைப் பெறுமா னங்களைக் கொண்டிருக்குமேயா னால், இந்த சமூகத் தளைகளுக்கு அப்பாலே சென்று உலகப் பொதுவானவையாக மாறிவிடு கின்றன. இதனால் கலைஞர் ஒரு சமூகத் திற்குச் சொந்தமானவர்களானாலும் உலகப் பொதுவா னவர்களாக மேற்கிளம்புகிறார்கள். அதாவது எல்லா உயர் கலைகளும் அவ்வவற்றின் தோற்றத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு உரியனவானாலும் அவற்றின் பலாபலனைப் பொறுத்தவரையில் அவை உலகப் பொதுவான வையாகின்றன. ஒரு மனித சூழலிலிருந்து கிளம்பி உலகப் பொதுவான மானிடத்திற்குச் செழுமையளிக்கின்றன. அப்போது அக்கலை யில் குறிப்பிட்ட சமூகம், உலகப் பொது மையாகிய இரண்டும் சங்கமிக்கின்றன. இவ்வாறு தனது படைப்பு சமூகத்தால் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும் என்ற கலைஞனின் அவா சில சந்தர்ப்பங்களில் உலகம் பகிர்ந்து கொள்ளும் உயர்ந்த கலைப் படைப்பாகவும் மாறி வருகின்றன.

சில சமயங்களில், குறிப்பிட்ட சூழ லுக்கும் தனக்கும் இயைபின்மை ஏற்படு மேயானால் அவன் அந்த இணைப்பை சிலபோது உடைத்து

விடவும் முற்படுகின்றான். இவ்வாறு நிகழும் போது அவை நல்ல விளைவுகளையும் ஏற்படுத்தலாம் அல்லது தீய விளைவுகளையும் ஏற்படுத்த லாம். உதாரணமாக சாஸ்திரிய சங்கீதமே நிலைபெற வேண்டும் என்று ஒரு சமுதாயம் எதிர்பார்க்கின்றபோது, அதனை ஏற்காத ஒரு கலைஞன் ஓர் வளர்ச்சியை ஏற்படுத்தும் ஓர் உந்துதலில் புதிய இசை வடிவங்களைச் சிருஷ்டிக்கிறான். அதை ஏற்க வேண்டும் என்பதே அவனுடைய எதிர்பார்ப் பாகும். ஏற்காது விடக்கூடும் என்பதில் அவனுக்கு அக்கறையில்லை. அதே போலவே ஒரு சிறந்த கலைப் படைப்பை சமூகம் வேண்டும் என்றோ அல்லது அக்கறையின்றியோ புறக்கணிக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு. உதாரணமாக மேலைத்தேச நாகரிகம் மேலானது எனக் கருதப்பட்ட காலத்தில் எமது நாட்டுக் கூத்துக் கலைகள் பாமர மக்களுடையவை என்று சமூகத்தால் பலவீனப் படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான எதிர் எதிர் அம்சங்கள் கூட அக்கால சமூகப் பிரக்ஞையை உணர்த்துவனவாகவே உள்ளன.

மேலும் ஒரு கால கட்டத்தில் எழுந்த கலைப் படைப்புக்களைக் கொண்டு அக்கால சமூகப் பிரக்ஞையினை அறிந்து கொள்ளக் கூடிய தாகவும் இருக்கிறது. உதாரணமாகப் பூர்வீக மக்கள் மிருகத்தினைப் பிடிப்பது போல ஓவியத்தைக் கீறினார்கள். உண்மை யில் அந்த மிருகத்தைத் தான் பிடித்துக் கொள் ளலாம் என்ற உணர்வின் அடிப்படையிலேயே புராதன மனிதன் ஓவியத்தைக் கீறினான். இதிலிருந்து மனித பூர்வீக நிலையில் கலைக்கும் அவர்களுடைய சீவியத்திற்கும் உழைப்புக்கும் நேரடியான தொடர்பு இருந் தது என்ற உணர்வை நாம் பெறுகிறோம். மேலும் கல்வி மறுமலர்ச்சிக் காலத்தில் கண்டுபிடிப்புக்களைச் சமுதாயம் அவாவி நின்றது. அந்த உந்துதலின் விளைவே லியனோ டாவின்சியின் தீர்க்க தரிசனமான கலைப் படைப்புக்களை ஏற்படுத்தின. இத்தகைய அம்சங்களும் அவ்வக் காலத்தின் சமூகப் பிரக்ஞையினை எடுத்தியம்புகின்றன.

எனவே, இவற்றைத் தொகுத்து நோக் கும்போது கலைகளானவை சமூகத்தினை எடுத்துணர்த்தும் உயிர்ப்பு மையமாக அமைந்து ள்ளன என்பதை உணர முடிகிறது. இதனை இன்னொரு வகையில் கூறினால் கலைகள் யதார்த்தத்தை கலைப் பிம்பங்களாகச் சித்திரிக் கின்ற ஒரு முக்கிய மனித செயற்பாடாகத் திகழ்கின்றன. சுருங்கக் கூறின், நிஜ உலகின் நிகழ்வுகள் கலை ஞனைப் பாதிக்கின்றன. இதனால் அவனது கற்பனைகள், அனுபவங்கள் தூண்டப்படுகின்றன. இவற்றின் களமாக அவனது உள்ளார்ந்த தரிசனத்தை வெளிக் கொணரும் வகையில் கலைப் படைப்புக்கள் உருவாக்கம் பெறுகின்றன. இப்படைப் புக்கள் மற்றைய அங்கத்தவர்களையும் பாதிக்கின்றன. இதனாலேயே "சமூகச் செல்வாக்குக்கு அப்பாற் பட்ட கலையும் கிடையாது. கலைப் படைப்பால் பாதிக்கப்படாத சமூகமும் கிடை யாது" எனக் கூறப்படுகின்றமை குறிப்பிட த்தக்கது. இவ்வாறு கலைகளானவை ஒரு சமூக அழகியல் நிகழ்வாக விளங்குவதனாலேயே அவை "சமூகப் பிரக்ஞையின் வடிவமாக விளங்குகின்றன" என விதந்தோதப்படுகின்றன.

உசாத்துணை நூல்கள் :

1) தமிழ் அழகியல் – இந்திரன்
2) வாழ்க்கையும் கலையும் – டால்ஸ் டாய்
3) கலைமகள் (தீபாவளி மலர் – 1986)

# யாழும் யாழ்ப்பாணனும்

**அறிவுடைநங்கை,**
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

யாழ் எனும் இசைக்கருவியானது இன்று வழக்கொழிந்துபோன ஒரு பழைமை வாய்ந்த வாத்தியம் ஆகும். இன்னிசை வீணையர் ஒருபால் யாழினர் ஒருபால் என மணிவாசகர் தனது திருவெம்பாவைத் திருப்பள்ளியெழுச்சியில் குறிப்பிடுகிறார்.

யாழ் என்றால் நரம்புகளால் யாக்கப் பட்டது அல்லது கட்டப்பட்டது என்று பொருள். சங்ககாலத்திற்கு முன் வாழ்ந்த வாழ்ந்த தொல்காப்பியர் யாழ் பற்றிக் கூறியுள்ளார். அத்துடன் சிந்து வெளிநாகரீகத்தில் யாழ் பயன் படுத்தப்பட்டதாகவும் கூறுவர். இராமயணத்திலும் யாழினைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

மேலும் திருஞானசம்பந்தர் அருளிய தேவாரங்களை திருநீலகண்டயாழப்பாணர் அழகாக யாழில் வாசித்தார் எனவும் அறிகிறோம். முத்தமிழ் காப்பியமான சிலப்பதிகாரத்தில் யாழின் சிறப்பினைப்பற்றி இளங்கோவடிகள் கூறியி ருக்கிறார்.

இது தனி வாத்தியமாகவும் பக்க வாத்தியமாகவும் உபயோகிக்கப்பட்டுள்ளது. யாளி என்ற மிருகத்தின் தலையை ஒத்து தண்டியின் முனை அமைந்திருப்பதால் யாழ் என்ற பெயர் பெற்றது எனக்கூறப்படுகிறது.

யாழ்வகைகள் சகோட யாழ், செங்கோட்டு யாழ், மகரயாழ், பேரியாழ், ஆதியாழ் என்பவை முக்கியமானவை. இவற்றில் ஆதியாழ் 1000 நரம்புகளை உடையது என விபுலானந்தர் யாழ் நூலில் குறிப்பிடுகிறார்.

சங்க காலத்தில் தோன்றிய யாழே இடைக்காலத்தில் கின்னரி(கின்னரம்) என்ற இசைக்கருவியாகி இக்காலத்தில் வீணையாக மாற்றம் பெற்றுள்ளது எனக் கூறப்படுகிறது. செங்கோட்டு யாழ் வீணையின் முன்னோடி எனக் கருதப்படுகிறது.

யாழ் மீட்டி வாசிக்கப்படும் நரம்புக் கருவியாகும். இதில் மெட்டுக்கள் கிடையாது. இதன் தந்திகளை மீட்டியே வெவ்வேறு ஸ்வரங்கள் உண்டாக்கப்பட்டன. இரண்டு கை விரல்களினாலும் மீட்டி இது வாசிக்கப்பட்டது. யாழைச் சுத்த மேளமான ஹரிகாம்போதி இராகத்திற்கு (செம்பாலைப்பண்) சுருதி கூட்டி வாசித்தனர். இதைக் கிரகபேதம் செய்து மற்ற இராகங்களை வாசித்தனர். உதாரணமாக ஹரிகாம்போதி இராகத்திற்குச் சுருதி கூட்டப்பட்ட யாழின் மத்திம நரம்பை ஆதார

மாகக் கொண்டு சங்கராபரணத்தினை வாசித்தனர்.

செம்பகை, ஆர்ப்பு, அதிர்வு, கூடம் என்று சிலப்பதிகாரத்தில் வேனிற்காதையில் கூறப்பட்டிருக்கின்ற 4 குற்றங்களையும் நீக்கி வாசிப்பவனே யாழ்வல்லோன் எனக்கருதப் பட்டான். பகை என்பது இராகத்திலிருந்து விலக்கப்பட்ட ஸ்வரம். ஆர்ப்பு என்பது குறிப்பிட்ட சுருதிக்குச் சற்றுக் குறைவாக ஒலிப்பது. அதிர்வு என்பது பருத்தநரம்புகளை மீட்டுவதால் ஏற்படும் குற்றம். இவ்வாறு ஏற்படும் பல குறைபாடு களையும் தவிர்த்து வாசிப்பவனே யாழ் வல்லோன் ஆவான்.

இத்தகைய யாழ்வல்லோன் ஒருவன் மூலம் எமக்குக் கிடைத்ததே யாழ்ப்பாணம் ஆகும். பண்டைய தமிழ் இசை உலகின் பாவலர்கள், பாணர்கள் என அழைக்கப்படடனர். பாணர்கள் என அழைக்கப்பட்ட இவர்கள் யாழ் இசை வாசிபப்தில் கை தேர்ந்த விற்பன்னர்களாக மிளிர்ந்தனர்.

இலங்கையின் வடபகுதியின் தலைநகர மாக விளங்கும் யாழ்ப்பாண, வரலாற்றுப் பின்னணியினை எடுத்து நோக்கும் போது யாழ் வாத்தியத்துடன் சரித்திர ரீதியில் எழுந்ததாக அமைந்த நிலப்பரப்பே யாழ்ப்பாணம் ஆகும். வரலாற்று ரீதியில் பார்க்கும் போது யாழ்ப்பாணம் ஆனது இந்தியாவின் தமிழ் நாட்டிற்கு மிகச் சமீபமாக அமைந்துள்ளது. இதனால் முற்காலம் தொட்டே இந்தியாவுடன் மிக நெருங்கிய தொடர்புகளைக் கொண்டுள்ளது.

இதுபற்றி யாழ்ப்பாண வைபவ மாலையில் மயில்வாகனப்புலவனார் கூறுவ தாவது தமிழகத்தின் சோழ நாட்டில் குருடனாக இருந்த அந்தகக்கவி என அழைக்கப்பட்ட வீரராகவன் எனும் பாணன் இலங்கைக்கு வந்து ஜெயதுங்கராஜசிங்கன் எனும் வடபகுதி அரசன் அவையில் யாழ் வாசித்து அரசனை மகிழ்வித்து அரசனது பாராட்டினைப் பெற்றதன் விளைவாக அவ்வரசன் யாழ் இசைப்பாணனுக்குப் பரிசாக வழங்கிய நிலப்பரப்பே யாழ்ப்பாணம் ஆகும்.

மேலும் அருணகிரிநாதர் (16,17ம் நூற்றாண்டு) திருப்புகழில் “யாழ்ப்பாணராயன் பட்டினமேவிய பெருமாளே” எனக்குறிப்பிடு கிறார்.

இதிலிருந்து நாம் தெரிந்துகொள்வது யாதெனில் தமிழரின் நாளாந்த பண்டைய கலைத்துறையுடன், இலக்கிய பண்பாட்டு விழுமியங்களுடன் ஒன்றுபட்டு இரண்டறக் கலந்துள்ள ஒரு முக்கிய நரம்பிசை வாத்தியமாக மிளிர்வது யாழ் என்றும் யாழ்ப்பாணம் என்பது இசைக்கலைஞனுக்கும் இசைக்கும் கிடைத்த ஒரு கௌரவமான பரிசுப்பொருள் என்பது மாகும்.

அன்று யாழ்ப்பாணனுக்குப் பரிசாகக் கிடைத்த நிலப்பரப்பு இன்றைய யாழ் வைத்தியசாலைக்குத் தெற்குப் பக்கமாக உள்ள வர்த்தக நிலையங்கள், மணிக்கூட்டுக்கோபுரம், நூலகப்பரப்பு, யாழ்கோட்டைப் பகுதிகளாகும்.

மணற்றிடலாகக் காணப்பட்ட இப்பகுதியில் யாழ்ப்பாணன் எனப்பட்ட

வீரராகவன் தன் இனசனங்களைக் குடியேற்றி இசையும் கலைகளும் இங்கு வளரக் காரணமாகினான். பிற்காலத்தில் ஒல்லாந்தர், போர்த்துக்கீசர் ஆட்சியின்போது இங்குள்ள மக்கள் மதம் மாற்றப்பட்டனர்.

அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் நிலவிய கடுமையான சாதி வேறுபாட்டுக் கலாசாரம் இம்மக்களின் மத மாற்றத்திற்கு காரணமாக இருந்திருக்கலாம்.

அக்காலத்தில் பாணர்கள் எனப்பட்ட யாழ் வாசிப்போனுடன் அவனது மனைவியான பாடினியும் உடன் செல்வாள். பாணன் யாழ் வாசிக்கும் போது பாடினி ஆடுவாள். இவர்களில் ஆண் பாலார் கூத்தர் எனவும், பெண்பாலார் கூத்தியர் எனவும் அழைக்கப்பட்டனர். இவர்கள் யாழ்ப்பாணத்தின் மேட்டுக்குடியினரால் உயர்ந்த சாதியினராகக் கருதப்படவில்லை. இத்தகைய காரணங்களால்தான் இன்றும் யாழ்ப்பாணம் என்ற பெயருக்குக் காரணமான உயரிய இசைக்கலைஞனை யாரும் நினைப்ப தில்லையோ தெரியவில்லை.

இவ்வாறு ஒரு சம்பவமே நடக்க வில்லை இது புனை கதை எனக் கூறுவோரு முண்டு. ஆனால். யாழ்ப்பாணம் என்பது இசைக்குக் கிடைத்த பரிசு என்பது ஒவ்வொரு இசைக்கலைஞனும் பெருமிதம் கொள்ள வேண்டிய விடயமாகும். இசை என்பது ஜாதி, மத, இன, மொழி பேதங்களைக் கடந்த மாபெரும் சக்தியன்றோ.

எனினும் இன்று எம்மில் பலர் யாழையும் யாழ்ப்பாணன் எனப்பட்ட வீரராகவ னையும் அனேகமாக மறந்தே போய் விட்டோம் என்பது வேதனைக்குரிய விடயமாகும்.

உலகிலுள்ள மிகச் சிறந்த, மிக அழகான பொருட்களைக் காண முடியாது. தொட்டுணரக் கூட முடியாது. அவற்றை இதயத்தால் உணர வேண்டும்.

# யாழ் இசைக்கும் யாழ்ப்பாணன்



# கல்வி

திரு.ப. அன்ரன் கிருபைநாயகம்
மன்/முன்றாம் பிட்டி அ.த.க.பாடசாலை
வெள்ளாம்குளம், மன்னார்

அகர முதல எழுத்தெல்லாம்
அகிலமதில் அறிய வைத்தே
எழுத்துடனே எண்ணுமதைக் கருத்தாய்ப்
பாங்குடனே பயில்விக்கும் கல்வி.

பேதம் களைந்திட வேதம் தளைத்திட
மானம் நிலைத்திட மனிதராய் வாழ்ந்திட
இறைபதம் நாடி இனிதே தொழுதிட
பண்பதைப் பாரினில் விதைத்திடும் கல்வி.

அறியாமை அகல அறிவொளி ஏற்ற
பகைமை நீங்கிப் பண்புடன் வாழ
மனிதம் மலர மாநிலஞ் செழிக்க
கருத்தாய் எம்மை வாழ்விக்கும் கல்வி.

அள்ள அள்ளக் குறைந்திடா
வெள்ளமதால் அழிந்திடா
வெந்தழலில் வேகிடா
வேந்தர் தம்மால் கொள்ளையிட முடிந்திடா
அக இருள் நீக்கும் தெள்ளமுதாகிய கல்வி.

கல்வி அது கரையிலவாம்
கற்பவர் நாள் சிலவாம்
மெல்ல நினைக்கில் பிணிபலவாம்
முயன்றே கற்றிடல் நம் பணியாம்.

அன்னசத்திரம் ஆயிரம் அமைத்திடலாம்
ஆலயம் பதினாயிரம் நாட்டிடலாம்
அழகிய நீரச்சுனைகள் பல இயற்றிடல்ம்
அன்னயாவினும் புண்ணியம்
அங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்திடும் கல்வி.

# மனங்களுடன் அழகியற் கலைகள்

செல்வி.உதயகலா சிவபாதசுந்தரம்
உதவி வளநிலைய முகாமையாளர்,
உளசமூக வளநிலையம், வடமாகாணம்.

"கொஞ்சங் கூட நிம்மதியா இருக்கமுடிய வில்லை, இது என்ன உலகம்" எனச் சலிக்கும் மக்கள்.

ஒய்வு ஒழிவின்றி குடும்ப உறுப்பினர் களோடு பகிர நேரமின்றி அலையும் நம்மவர். பிள்ளைகளின் நன்மை தீமைகளில் பங்கெடுக்க முடியாத பெற்றோர்.

"காலில் சில்லுப் பூட்டி இருக்கின்றதோ!" என எண்ணத் தோன்றுமளவிற்கு வீட்டிற்கு வெளியிலே அலைந்து திரியும் இளைஞர் குழாம். எங்கு பார்த்தாலும் மதுபானச் சாலைகளிலும் மருத்துவ நிலையங்களிலும் அலைமோதும் மக்கள் கூட்டம்.

"எனக்கு மனசே சரியில்லை அதனால் குடிக்கிறேன்" என ஒருவகையினர் கூற, "போட்டியில் வெற்றிபெற்ற சந்தோஷத்தைப் போத்தலிலே கொண்டாடுவோம்" என வேறு சிலர் காரணந் தேடப் புதிது புதிதாய்த் தோன்றிய நோய்களைக் கூறி சோர்வடையும் பலர் இந்நிலையில், "ஆளுக்கு ஆள் இடைவெளி அதிகரித்துக் கொண்டே போகிறதே, இதை எப்படிச் சரி செய்வது?" என உண்மையான அக்கறையோடு அங்கலாய்க்கும் சிலர்.

சரி, .... பல்கிப் பெருகியிருக்கின்ற தொழில்நுட்ப யுகத்திலே செயற்திறன் குறைந்து சோர்வடையும் போக்கு ஏன்? யோசிக்க வேண்டிய விடயம். ம்.. பார்க்கலாம்.

கொஞ்சம் நில்லுங்கள்!!! ....தூரத்தே பலர் கூடிப் பாடும் இசை கேட்கிறது.



"பாலாய் நிலவு பொழிகிறது
பௌர்ணமி நாளில்
ஓராயிரம் நினைவு
நெஞ்சில் அலைமோத (பாலாய்)
முன்னாளில் ஒரு நாள்
முழு நிலவில் முற்றத்தில்
தென்னை முழுகையில்
தென்றலைத் தாலாட்டும் – (பாலாய்)

ஓ... உங்களுக்கும் அம்மா, அப்பா, மாமன், மாமி, தங்கை, தம்பி, தாத்தா, பாட்டி என அனைவரும் கூடியிருந்து நிலாச் சோறுண்டு சிந்தை களித்த அந்தக் காலம் ஞாபகம் வருகிறதா?

"என்ரை உறவுகள் என் முகத்தைப் பார்த்தே நிலைமையை ஊகித்தறிந்து எனக்கு உதவிய அந்தக்காலம்...." "அந்த உறவுகளால் அல்லவோ இன்று உயர்ந்திருக்கின்றேன் எனப் பெரு மூச்செறிகின்றீர்களா?

குடும்ப உறவுகளுக்குள் முகம் பார்த்துப் பேசுவதே அரிதாகி விட்ட இந்தக் காலத்தில் எப்படி ஒருவரின் உணர்வுகளைப் புரிந்து வழி காட்ட முடியும்?



அப்படியே புளுங்கி, உள்ளுக்குள்ளேயே அடக்கி வைத்து "உளக்காயம்" வந்ததுதான் மிச்சம். உளக்காயம் என்றதும் ஞாபகம் வருகிறது, அது உங்களுக்குத் தெரியுமா?

மனத்தளவில் புதைத்து வைத்திருக்கின்ற விடயங்கள் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாய் உடல் நோய்களைப்போல் வெளித் தள்ளுகிறதாமே! பேராசிரியர் தயா சோமசுந்தரம் என்ற எங்கட உளமருத்துவ நிபுணர் சொல்லியிருக்கிறார். கேள்விப்பட்டிருக்கிறியளே....! விளங்காட்டி நான் கொஞ்சம் எடுத்துக் காட்டுறன் புரியுதோ என்று பாருங்கோ,

"என்னெண்டு தெரியயேல்ல ஆனா சோர்வாயிருக்கு......"

"அதை நினைச்சா எனக்குக் கையும் ஓடல காலும் ஓடல...."

என்று பலர் கதைக்கிறதை நீங்கள் கேட்டிருப்பீர்கள்....


இதில் இருந்து உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும், உங்கட மனசில ஏதோ இருக்கு என்று அதுமட்டுமல்ல.....

"நான் நெஞ்சு வலில துடிச்சுப் போய் டொக்டரிட்ட அந்தரப்பட்டு போறன். அவர் நுஊபு எடு, சலம், இரத்தம் சோதிச்சுக் கொண்டு, வா பிறஷர் ஷெக் பண்ணுறன். ஏன்டு என்னை 5 மயிலுக்கு மேல செலவளிக்கப் பண்ணிட்டு, "உங்களுக்கு ஒண்டுமில்ல, இந்தப் பனடோலப் போட்டால் போதும் தானாச் சரியாயிடும்" எண்டு என்னைப் போகச் சொல்லிட்டார். அடப் போங்கடா,.. எனக்கிருக்கிற வருத்தத்தைப் பற்றி ஆராய முடியாம இருக்கிற அந்தாள் ஒரு டொக்டரே!! இந்தாளுக்கு ஒண்டும் தெரியாது" என்று நினைத்து அடுத்தடுத்த வைத்தியர்களை நாடிக் காசை வீணடிக்கின்றீர்களா? விழிப்பாயிருங்கள்!!. பனங்கறக்கிற மிஷின் களும் இருக்கும். இவரைத் திட்டுறதை விட்டிட்டு முதல்ல அந்த டொக்ரர் சொல்லு றதைப் பற்றி

யோசிச்சுப் பாருங்கோ சோதிச்சுப் பார்த்து "ஒன்றுமில்லை" என்று சொன்னால், "உங்கட உடம்பில ஒரு நோயும் இல்லை" என்று தானே அர்த்தம். "அப்ப என்னெண்டு எனக்குச் சரியா நெஞ்சு வலிக்குது" என்று இழுக்காதேங்கோ....... வேறென்னெண்டு? உங்கட மனசுக்குள்ள இருந்துதான் வலிக்குது.

"அதை எப்படிக் குறைக்கிறது?" என்று நீங்கள் நினைக்கிறது எனக்கு கேட்குது.

எங்கட ஆக்களிட்ட இருந்த அந்த வழியெல்லாத்தையும் மறந்து போனது எங்கட பிழை. ஆனால், வெள்ளத் தோல்காரர் இப்ப ஏதோ ஆராய்ச்சி என்று கண்டுபிடிச்சுச் சொன்னால் கேட்பியள்.




கண்ட கண்ட குப்பை எல்லாத்தையும் உங்களுக்குள்ள ஏன் சேர்த்து வைக்கிறியள்? உங்களுக்குப் பிடிச்ச நம்பிக்கையான ஒரு ஆளிட்டை மனந்திறந்து கதையுங்கோவன். கொஞ்சமெண்டாலும் பாரம் இறங்குமல்லே!.
இப்பிடி வைக்கிறதால அஸ்மா, தோல்வியாதி, மனவடு, மனச் சோர்வு, பதற்றம், மெய்ப்பாட்டு நோய் போன்ற பல உள நோய்கள் ஏற்படலாம். ஜாக்கிரதை.

சில நேரம் நாங்கள் "சரியோ? பிழையோ?" எண்டு யோசிச்சுப் பார்க்கிறதுக் குள்ள எங்கட உணர்ச்சிகள் முந்தி வந்து விழுந்திடும். கோபம், ஏமாற்றம், கவலை, விரக்தி, சலிப்பு, சந்தோஷம்,என்று சொல்லுறதைத்தான் உணர்ச்சிகள் என்கிறோம். இவை வந்து விழுந்த வேகத்தில, எதையாவது சொல்லுவியள். அல்லது நடப்பியள். அது பல நேரங்களில மற்றாக்களுக்குப் பிடிக்காது. அதால, உங்களுக் குள்ள பிரச்சினைகளை இன்னும் கிளறி, உங்களை நிம்மதியாய் இருக்க விடாமல், உண்டு இல்லை என்று பண்ணிவிடுவார்கள். பிறகென்ன, ஒருத்தருக்கு ஒருத்தர் மூஞ்சியை தூக்கி வைச்சுக்கொண்டு ஆளுக்கொரு திக்கில நிப்பியள். கொஞ்சம் ஆற அமர யோசிச்சுப் பார்த்தால் எல்லாம் விளங்கும். இதைத்தான் அறிவு என்று சொல்லுறம். அதுக்குப்பிறகு, மன்னிப்பு கேட்கலாம் எண்டாலும், இந்த குரங்கு மனம் கேளாது. கேளாட்டி என்ன? பிறகு உங்களுக் குள்ள நிரந்தர இடைவெளி தானே!

சரி இதுவும் சரிப்படாட்டித்தான், எங்கட அழகியற் கலைகள் என்று இருக்கிறது. அழகியற் கலைகள் என்றால் அவை என்ன? என்று கேட்டிடாதேங்கோ.

ஆடல்,பாடல், நாடகம், சித்திரம்,..... என்று சொல்லுற விடயங்கள் தான்.உங்களுக்கு அதில ஏதாவது ஒன்றைச் செய்ய முடிஞ்சாச் செய்யுங்கோ. வரையுங்கோ,பாடுங்கோ, ஆடுங்கோ, நடியுங்கோ. உங்களுக்குள்ள இருக்கிற குப்பையை வெளியே கொட்டுறதுக்கு சரியான வழி அதுதான். "இதெல்லாம் என்னால ஏலாது" எண்டால் ஆராவது நடிக்கிறதை, ஆடுறதைப்

பாருங்கோ, இரசியுங்கோ, பாடுறதையாவது கேளுங்கோ உங்களுக்குள்ள புது உற்சாகம் பொங்கி வரும். அனுபவிக்க வேண்டியது தானே. மனசும் லேசாயிடும்.

உங்களுக்கு ஒரு செய்தி சொல்லட்டே!, இப்பெல்லாம், உள நோய்கள் என்று சொல்லப் பட்டதைக் குணப்படுத்த இசைச் சிகிச்சை (Music Therapy), வரைதற் சிகிச்சை (Art Therapy), நடனச் சிகிச்சை (Dance Therapy), நாடகச் சிகிச்சை (Drama Therapy) என்று இந்த அழகியற் கலைகள் எல்லாத்தையும் ஒரு சிகிச்சை அளிக்கிற குணமாக்கும் உத்தியாய் பயன்படுத்தி வெற்றி காண்கிறார்களாம். நீங்கள் கேள்விப்பட்டதில்லையே?

ஏன்? எங்கட பக்கத்து நாட்டில புகழ் பெற்ற வயலின் இசைக் கலைஞர் இருந்தார்.. என்ன தெரியேலையே, அவர்தான் குன்னக்குடி வைத்தியநாதன். அவர் "ராக ஆராய்ச்சி மையம்" என்ற ஒன்றை நிறுவி,இசையை ஆராய்ச்சி செய்து, தன்னுடைய இசையால நோய்களைக் குணப்படுத்தியிருக்கிறாராம்.

இசைச் சிகிச்சை என்று சொல்லுறது எப்படியென்றால், இது ஒரு நரம்பியல் அடிப்ப டையில் ஒரு சிகிச்சை மாதிரியாக அமையுமாம். Neurological Music Therapy என்று இதை ஆங்கிலத்தில சொல்லுகினம்.


மனிதமூளை மிக வேமாய் செயற்படும். எங்களுக்குள்ள ஏற்படுற மறையான எண்ணம், நடத்தை, உணர்ச்சிக் குவியல்கள் எல்லாத் தையும் அது நோயா வெளித்தள்ளுறது. இதை நிவர்த்திக்க வேணுமெண்டால், மூளைதான் சரியான இடம் என்று கண்டிருக்கினம். இந்தச் சிகிச்சை முறை எப்படியென்றால், இசையால எங்கட மூளையின் புலனுணர்ச்சிகளைத் தூண்டுவதன் மூலம் நடத்தையில் மாற்றத்தைக் கொண்டு வந்து, எங்கட தொழிற்பாட்டை நல்ல முறையில மாற்றியமைக்கினம் அவ்வளவுதான். இசைத்தல், கேட்டல் வாய்மொழி வாதப் பிரதி வாதம், படைப்பாக்கம் என்ற எல்லாம் சிகிச்சை யாய் பயன்படுத்துகிறார்கள்.

நீங்கள், உங்களுக்கு பிடித்த இசை யைக் கேட்டால் என்ன செய்வீர்கள்?காலால் தாளம் போடுவீர்கள். கையைப் புரட்டிப் புரட்டித் தட்டுவீர்கள். தலையை அந்தப்பக்கமும் இந்தப்பக்கமும் அசைத்து அசைத்து இரசிப் பீர்கள். இவை எல்லாம் தசை இறுக்கங்களை குறைத்து நல்லா செயற்பட வைத்து உடம்பை நல்ல ஆரோக்கியமாய்க் கொண்டு வருமாம். ஆனா, வேகமான இசை ஆபத்து...... கவனம். அது மட்டுமல்ல இந்த இசை மூளையின் உணர் ச்சி களில் சமூக இடைவெளியில் தாக்கம் செலுத்தும் வல்லமை வாய்ந்தவையாம். இவ்வ ளவு நல்ல விடயத்தை ஒதுக்கலாமோ ...?



இது மட்டுமே, நாங்கள் சும்மா கிறுக்கிற கிறுக்கல்கள் கூட சிகிச்சையாகுமாம். ஆழமா மனசுக்குள்ள இருக்கிற விடயங்கள் எல்லாம் வெளீல வந்து கொட்ட இது நல்ல வழி என்று

கண்டுபிடிச்சிருக்கினம் மனவடு என்ற உள நோய்க்கு வரையிறது நல்ல வெளிப்பாட்டு முறையாகி மருந்துபோல உதவுதாம். அப்ப உங்கட பிள்ளைகள் சித்திரம் வரையிற போது தடுக்காதீர்கள் வரையட்டும் உள்ளம் தூய்மையா கட்டும்.



இதுமட்டுமல்ல. எங்கட பிரக்ஞை நிலையில உள்ள உடல் உள இயக்க மாற்றங் களுக்குள்ளான மொத்த செயற்பாட் டையும் குறியீட்டு முறையில் ஆற்றுப்படுத்த நல்ல ஊடகமாக நடனமும் நாடகமும் விளங்குமாம்.

அழகியற் கலைகளில் எங்கட உடல், உள்ளம், உணர்வு, எண்ணம் எல்லாம் ஒன்றுபட்டு, அர்த்தங்கள் வெளிப்படுறதால அனைத்துத் தனி நபர்களுக்கும் ஒரு முழுமையான உணர்வைக் கொண்டு வருமாம்.

நான் முதற் சொன்ன உளநோய் களோட ஓட்டிசம், கண்பார்வைக் குறைபாடு காதுகேளாமை,விவேகக் குறைபாடு, மனச் சோர்வு, கற்றல் இடர்பாடு, மெய்ப்பாட்டு முறைப்பாடுகள் போன்ற நோய்களில இருந்து விடுபட முடியுமாம். இப்பிடியான நோய்க் குள்ளானவர்களை இந்த அழகியல் கலைகளில் ஈடுபட வைச்சு அதன் போது ஏற்படுகிற மாற்றங்களை ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு செய்திருக்கினம். அப்படி ஆய்வு செய்து, எங்களுடைய புலனுணர்வு மட்டம் உயர்ந்து, புலனியக்கத்திறன் விரிவடைந்து கொள்ளுற போது எங்களுக்குள்ள இருக்கிற தனிப்பட்ட தாழ்வான எண்ணங்கள் எல்லாம் குறைந்து போய்விடும் என்று தெரியப்படுத்தி இருக்கி றார்கள்.

அதுமட்டுமல்ல, ஆளுக்காள் தகவல் தொடர்பு அதிகரித்து உடல் உள சமூக ஒருங்கிணைப்பும் ஏற்படுமாம். மற்றும் உளச் சமநிலையைச் சீராக வைத்து, எங்களது உடல் செயலிழப்பைக் குறைக்க வல்லது என்கின்றனர். மேலும், சுவாச வெளிப்பாட்டைச் சீர் செய்வ தோடு, பதற்றங்கள் குறைந்து, மன இறுக்கம் நீங்கி, சுய ஒழுக்கமும் சுயகட்டுப்பாட்டுத் திறனும் மிக்க ஆரோக்கியம் மிக்க மாணவர்களாக ஆக்குமாம். விடாமுயற்சியும் குழுக்களை ஒன்றிணைக்கும் சக்தியும் உடல் இயக்க ஆரோக்கிய உறவைத் தக்க வைக்கச் செய்யும் என உளநல சிகிச்சையர்கள் கூறுகிறார்கள்.

இப்ப விளங்கியிருக்குமே! ஒருவரது முகத்தில் புன்முறுவல் பூத்து, எவ்வித சூழமைவையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் சக்தி படைத்த இவ்வளவு நல்ல அம்சங்களைக் கொண்ட இந்த அழகியற் கலைகளை இனி மறக்கவோ வீண் என்று கருதவோ நினைக்கலாமோ?

ம்..சூம் .....மூச்.

# மனித வாழ்வில் இசைக்கலை

கீதப்பிரியா
யாழ்ப்பாணம்.

இசை என்பது விளக்க முடியாத ஒன்றினை விளக்க முயல்வதாகும். இசையே ஒரு தனி மொழி மனித குலம் எங்கு வாழ்கின்றதோ அங்கெல்லாம் இந்நுண்கலை புகுந்து மனித வாழ்வில் தனக்கென ஒரு முக்கிய இடத்தைப் பிடித்து வேறேதுவும் சாதிக்க முடியாததை யெல்லாம் சாதிக்கின்றது. இக்கலை ஒரு குலத்தினருக்கோ, ஒரு சாதியினருக்கோ, ஒரு மதத்தினருக்கோ சார்புடையதல்ல இது எல்லா மனிதர்களையும், எல்லா உயிர்ப் பிறவிகளையும் ஈர்க்க வல்ல ஓர் உணர்ச்சி மொழியாகும்.

இக்கலையின் தோற்றத்தைப் பற்றித் திட்டவட்டமான முடிவான கரத்துக்களைக் கூறமுடியாதெனினும் கி.மு.2000 ஆண்டுக்கு முன் உலகிலேயே தொன்மையான நாகரீகமென விளங்கும் சிந்து நதி நாகரீக மக்கள் வாழ்வில் மிக முக்கிய இடத்தைப் பெற்றிருப்பதை நாம் அறியக் கூடியதாக இருக்கின்றது. பர நாகரீகங்களில் மக்களிடையே வேறுபட்ட அசை முறைகள் இருந்த பொழுதிலும் பழந்தமிழ் மக்களிடையே இடம்பெற்றுப் படிப்படியாக வளர்ந்து இன்று உலகிலேயே சிறப்பும் புகழும் பெற்று விளங்கும் கர்நாடக இசைக்கு நிகராக எந்த ஓர் இசை முறையும் எந்த ஒரு நாட்டிலோ, சமுதாயத்திலோ இருந்ததாகவோ அன்றி இருப்பதாகவோ எமக்குத் தெரியவில்லை ஏதோ ஒரு வகையில் கர்நாடக இசைக்கலை தான் உலகின் மற்றைய சமுதாயங்களிலுமுள்ள இசை முறைகளுடன் தொடர்புள்ளதாக அறியக்கிடக்கின்றது. "யாமறிந்த மொழிகளில் தமிழ்மொழி போல் இனிதாவதெங்குங் காணோம்" என பாவலராலும் நாவலராலும் போற்றப்பட்ட தேனிலுமினிய தீந்தமிழில் தான் இயல், இசை, நாடகம் என முப்பிரிவுகளும் சிறந்து விளங்கும் இசைத் தமிழைத் தமிழர் சமுதாயம் ஒன்றே பெற்றிருக் கின்றது என்றால் இதையிட்டு தமிழரகளாகிய நாம் பெருமைப்படாமல் இருக்க முடியாது.

ஆதிகால மனிதர் தமது மனித ஓய்வு நேரங்களில் அவப்பொழுதாக கழிக்காது எல்லோரும் ஒன்று சேர்ந்து இன்பமாகப் பாடிக் கழித்தார்கள் அன்றாட வாழ்வில் உபயோகித்த பொருட்களிலிருந்து புதிய விதம் விதமான ஒலிகளை எழுப்பிப் பாடலுடன் கலந்து இசைமீட்டினர். இவ்வாறு வரன் முறை ஒழுங்கு முதலிய எதுவுமின்றித் தோன்றிய இக்கலை படிப் படியாகச் சமுதாயத்தின் அறிவு வரை வளரச் சில கட்டுப்பாட்டு விதிகளுக்கு உட்பட்டது. இதனால் வாத்திய உபகரணங்களையும் சிறிது சிறிதாக மாற்றியமைத்து நன்னிலைக்கு கொண்டு வந்தனர். ஆரம்பத்தில் ஓய்வு நேரத்துக்கெனப் பயன்பட்ட இசைக்கலை பின் தொழிலாளர்கள் வேலை செய்வது போன்ற பல வேலைகளைச் செய்யும் போது பயன்பட்டது.

இவற்றை விட உலகில் பல பாகங்க ளிலும் தோன்றிய ஞானிகளையெல்லாம்

இயங்க வைத்தது இசைக் கலையாகும். முனிதன் தனது உள்ளத்தில் உணரும் ஆழ்ந்த உணர்ச்சி களையெல்லாம் உலகுக்கு வெளிப்படுத்து வதோடு பரம்பொருளின் புகழ்பாடி அவன் பாதாரவிந்தங்களை அடையப் பயன் பட்ட சுலபமான வழி இசைக்கலையே மீராபாய் கிருஸ்ண பகவானிடம் தான் கொண்ட பிரேமையை அவன் புகழைப்பாடியே தெரிவி த்தாள். நம் நாட்டிலன்றி உலகின் பலபாகங் களிலும் தத்துவ ஞானிகளும், குருமார்களும், கவிஞர்களும், ஆசிரியர்களும், இசையைக் கருவியாகக் கொண்டே இறைவனை துதித்தனர். தேவார திருவாசகங்கள், திவ்விய பிரபந்தங்கள், காவியங்கள் போன்றவை பக்திச் சுவையும், பொருட் செறிவும், கவிதை நயமும், நிரம்பிய இசைப்பாடல்களாக மிளிர்கின்றன. ஸ்ரீ தியாகராஜா சுவாமிகளின் கீர்த்தனைகள் இதற்கோர் எடுத்துக்காட்டாகும். கிருஸ்ண பரமாத்மா கூடத் தன் அழகிய தோற்றத்தினால் உலகினையே வசீகரிக்கும் ஆற்றல் இருந்தும் கூட வேய்ங்குழலை பயன் படுத்தியே இனிய கானங்கள் இசைத்து மனிதர்களை மட்டுமன்றி இயற்கை முழுவதையுமே தன்பால் ஈர்த்தார் என்றால் இசையின் சிறப்புத்தான் என்னே.

ஆர்பியஸின் யாழுக்குச் சிங்கங்கள் வயப்பட்டன ஆனாயநாயனாருடைய குழலிசை வெளிப்பட்ட போது நிற்பனவும் அசைவனவும் அதன் வசப்பட்டன. என்றெல்லாம் இசையின் சிறப்பைக் குறித்து எத்தனையோ கதைகள் இருக்கின்றன. வேலை செய்வோரை ஊக்கு விக்க, குழந்தைகளையும் நோயாளிகளையும் உறங்க வைக்க, ஆன்மா முத்திப் பேற்றை அடைய கவலைகள் மறப்பிக்க இசை பயன்படு கின்றது.

**"தன்னுள்ளே இசையில்லாதான் தனி யொலி யிலூறுங்**
**கன்னலுண் குருகான் வஞ்சங் கடுஞ்சதி கேடு செய்யப்**
**பின்னிடான் அவன் பிராணன் இசைவுறா தரவு போலக்**
**கொன்றை கிருளேவாய்ந்த குணத்தினாட் நம்பொணாதே"**

என்கிறார் மகாகவி சேக்ஸ்பியர்.

இவ்வாறு சிறப்பும் திறமையும் வாய்ந்த இசைக்கலையே ஆதி காலம் தொட்டு மக்களும் காவலரும் பெரிதும் போற்றிக் காத்து வந்தார்கள். குறிப்பாகத் தமிழ் நாட்டு மன்னர் தம் அரண்மனையிலே சிறந்த இசை வித்துவான் களை வைத்திருந்தனர். இசை வல்லுநர்களை ஆதரித்துப் பரிசில் வழங்கி ஊக்குவித்தார்கள்.

இசை வளர்க்கும் கல்விக் கூடங்களை அமைத்து இசையை வளர்த்தனர். பாவலர் தம்மிடத்தே உள்ள சொல்லற்கரிய கருத்துக் களைக் கேட்போர் விரும்பி ஏற்றுக் கொள்ளும் வகையில் இனிய ஓசையோடு கூடிய சொற் களால் புலப்படுத்தி இயற்றமிழையும் இசைத்தமி ழையும் ஒருங்கே வளர்த்தனர். இயற்றமிழ் சிறப்படைய வேண்டுமானால் இனிய இசை அதனுடன் ஒருங்கே சேர வேண்டும் நடனம், நாடகம் உயிர் பெற வேண்டுமானால் இசை மிக மிக அவசியம். இசையின்றேல் நடனம், நாடகம் வெறும் தேகப்பயிற்சி போல்தான் ஆகி விடும்.ஆகவே இயற்றமிழுக்கும் நாடகத் தமிழுக்கும் மூல வேர் போல ஏன் அமிர்தம் போல அமைவது இசைத்தமிழே ஆகும். இவை மட்டுமல்ல இந்தியாவில் அழகர் கோவில், திருநெல்வேலி, ஆழ்வார் திருநகர், சுசீந்திரம் ஆகிய தலங்களில் காணப்படும். சிறந்த சிற்ப வேலைகள் நிறைந்த இசைத் தூண்களை பார்க்குங்கால், அக்கால மக்கள் இசைக் கலையினைசி சிற்பக்கலையுடன் கூடப் பிணைத்திருக்கிறார்கள் என்பது புலப்படும். இசைக் கருவிகளிலிருந்து எழும்ட நாதங்களை எழுப்ப முடியும். இந் நாதங்கள் ஜலதரங் கத்திலிருந்து எழும் நாதத்திற்கு ஒப்பாக

இருக்குமென அறியக்கிடக்கிறது. இவ்வாறு மக்கள் தமது செயற்பாடுகள் ஒவ்வொன்றிலும் இசையைப் புகுத்திப் போற்றி வந்திருக்கிறார்கள்.

நம் நாட்டில் மட்டுமின்றி உலகின் பல பாகங்களிலும் வாழும் மக்கள் தமக்குக் கை தேர்ந்த இசை முறைகளை வளர்த்துக் கொண்டே வருகிறார்கள். நாகரீகத்தில் இன்று சிறந்தோங்கும் நாடுகளான இங்கிலாந்து, ருசியா, யப்பான், போன்ற நாடுகளைக் கருத்தில் கொள்ளுமிடத்துக் காலத்துக்குக் காலம் இசைக் கலையும் சமுதாய வளர்ச்சிக்கு ஏற்ப வளர்ந்து வருவதையும் புதுப்புது யுக்திகளையம் இசைக் கருவிகளையும் பயன்படுத்தி மேலும் மேலும் வளரச் செய்து வருவதையும் காணலாம். இருந்தும் எமது கர்நாடக இசையில் இருப்பது போன்ற விதிமுறைகளோ ஒழுங்குகளோ அரிய திறமையான செயற்பாடுகளோ மற்றைய நாட்டு இசையில் இல்லையென்றே கூறலாம். இற்றைக்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இசைக்கலை இந்தியாவில் சிறந்து விளங்கியதைத் சரித்திர வாயிலாக அறியக்கிடக்கின்றது. மனித வரலாற்றைப் பற்றிய உண்மைகள் தெரியத் தெரிய இந்திய நாடே இசையின் தாயகமாகவும், இதைத் தழுவியே பிறநாடுகளில் காணப்படும் இசைமுறை நடைமுறைக்கு வந்ததையும் அறியலாம். தமிழ் நாட்டில் சாதிபேதம் இறுக்கமாக இருந்த பழங்காலத்தில் இவ் இசை முறைகளை ஒரு குறிப்பிட்ட சாதியினரே வாசிக்கவோ. பின்பற்றவோ முடியுமென்ற விதி இறுக்கமாக இருந்து வந்தது. ஆனால் காலப்போக்கில் சாதிக் கட்டுப்பாடு தளர இசையை ரசிக்கும் ஆற்றல் மக்களிடையே வளர வளர இசை சாதி சமயங்களுக்கு அப்பாற்பட்டு தெய்வீகத் தன்மை பொருந்திய தென உணர்ந்து எவ்வளவோ கஷ்ரப்பட்டு பயின்று இன்று வித்துவான்களாக இருப்பதையும் நாம் காணலாம்.அதாவது ஊதியத்துக்காக இசையைத் தொழிலாகக் கொண்டு வாழ்பவர்கள் இருந்தாலும் இசையிலே கொண்ட ஆர்வம் காரணமாக அதைக் கற்று வித்துவான்களாக திகழும் சிலரும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இசை தெய்வீகத் தன்மை வாய்ந்தது. மானிடப் பொது மொழி சாதி மதமொழி பேதங்கட்கு அப்பாற்பட்டது. யாவரும் எந்நேரத்திலும் ரசிக்கக் கூடியது.ஆன்ம ஈடேற்றத்திற்கு இன்றியமையாதது. இதனையே தமிழ் நாட்டுக்குக் கவிஞர் ஒருவர்,

"ஒடுங் கொடிய விடப்பாம்பும் மேயும் இசை கேட்டு ள்
—உருகி
யாடும், கருங் கல்லசைந்து விழும், அழுத குழவி
மாடும் இசை கேட்டமுது வரும் வந்த பசுவும்
—குரலடங்கும் பால் சுரக்கும்
பாடும் இசை கேட்டுருகாரை என்னென் றுரைப்பேன்
—பாவலரே"

எனப் பாடியுள்ளார்.

ஒவ்வொரு சமூதாயத்தின் பண்பாட்டிலும் இசை நிரந்தரமான இடம் பெற்று விட்ட அம்சமாகும். மக்கள் தமது மொழியை மறக்கலாம். நாட்டை மறக்கலாம் தமது நாட்டை விட்ட வேறு நாட்டுக்குச் சென்று விடலாம். ஆனால் தமது இசையை மறக்க முடியாது இவ்வளவு சக்தியும் பெருமையும் புகழும் வாய்ந்த இசைக் கலையைத் தமிழர்களாகிய நாம் "தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும்படி செய்தல் வேண்டும், என்ற பாரதியின் அறைகூவலை உள்ளத்தே கொண்டு போற்றி வளர்த்தோமானால் உலகில் எங்கு தமிழர் வாழ்கின்றனரோ அங்கெல்லாம் சீரும் சிறப்பும் பெற்று வாழமுடியும்.

வாழ்க இசைத்தமிழ்!
வளர்க இசையின்பம்!

# நாடக இலக்கிய வளர்ச்சியும் அதன் அவசியமும்

**திருமதி.ஜெ.சத்தியநாதன்**
ஆசிரியை,
வ/நெளுக்குளம் கலைமகள் ம.வித்தியாலயம்.

தமிழின் வளர்ச்சிப் போக்கில் இலக்கிய ங்களுக்கு தனிச் சிறப்புண்டு அதிலும் நாடக இலக்கியம் அதற்கென்று சிறப்புண்டு. இயல், இசை, நாடகம் என்று இலக்கியங்களுடன் ஊறிப்போய் தமிழுக்கு சிறப்புக் கொடுக்கும். ஆந்த வகையில் நாடகங்கள் தமிழ் வளர்ச்சி யோடு பல வழிகளில் ஒன்றி வரைந்து வந்துள்ளது. ஆதியிலே சங்ககாலம் தொடக்கம் இன்றைய கால கட்டத்தில் வருகின்ற இலக்கிய ங்கள் வரையில் நாடகத் தமிழின் வளர்ச்சியை நாம் அளவிட வேண்டும். தமிழ் வளர்ச்சிப் போக்கில் நாடகங்கள், அதனோடு கலந்த இலக்கியங்கள் என வேறுபடுத்த முடியாத அளவிற்கு ஒன்றிப் போயிருப்பதை நாம் காண்கிறோம்.

சாதாரணமாக தமிழ் உரைநடைகளை ஆக்கும் போது அதில் நாடகப் பாங்கு காணப்படும். அவ்வாறான உரைகள் தன்னிகரி ல்லாச் சிறப்புக்குள்ளாகின்றன. எனில் வெறு மனே கூறுகின்ற போது உரைகளுக்கு அதன் உணர்ச்சிகளை வெளிக்காட்ட முடியாமல் போய்விடுகிறது. ஆதன் தன்மையை வெளிக் காட்டவும், கையாளவும் கடினமாக போய் விடுகின்றது. நாடகப் பாங்கோடு ஒரு உரை செல்கின்ற போது விரிவுகள் அவ்வுரையில் ஏற்படுகின்றது. சாதாரணமாகக் காணப்படும் உரைகளுக்கும் இவ்வாறு நாடகப் பாணியால் வரையும் இலக்கியங்களுக்கும் நிறைய கேற்றுமைகள் உண்டு. சங்க காலகட்டத்தை எடுத்துக் கொண்டால் அதில் எழுந்த செய்யுள் இலக்கியங்கள் நாடகப் பாங்கிலே அமைக்கப் பட்டுள்ளன. காதலன், காதலி, தோழி, தாய், செவிலித்தாய், பாணன் என்று ஒருவரோடு ஒருவர் உரையாடும் முகமாகவே இலக்கியங்கள் படைக்கப்பட்டுள்ளன. காதலி கூற்று, செவிலி த்தாய் கூற்று என்று சங்க காலத்தில் எழுந்த செய்யுட்கள் அனைத்தும் நாடகப் பணியில் அமைக்கப்பட்டன. ஆதனைத் தொடர்ந்து வந்த சங்கமருவிய காலம், பல்லவர் காலப்பகுதியில் தமிழ் இலக்கிய வரலாற்றில் நாடகப் பண்பு பேணிப் பாதுகாக்கப்பட்டது. சங்ககாலத்தில் தூய உள்ளங்களில் நாடகப் பண்பு பேணிப் பாதுகாக்கப்பட்டது. சங்க காலத்தில் தூய உள்ளங்களில் ஏற்பட்ட காதல் உணர்வுகள் பல்லவர் காலத்தில் பக்தியாக மாறியது. எனினும் வடிக்கும் செய்யுட்கள் பெரும் பாலும் நாடகப் பணியிலே அமைக்கப்பட்டன.

இறைவனைத் தலைவனாகவும் தம்மைத் தலைவியாகவும் கொண்டு நாடகப் பாணியிலே அமைக்கப்பட்டன. இறைவனைத் தலைவனாகவும் தம்மைத் தலைவியாகவும் கொண்டு நாடகப் பாணியிலே அமைக்கப்பட்ட செய்யுட்கள் எத்தனையோ, எத்தனையோ.

தொடர்ந்து இவ்வளர்ச்சிப் பெரு வெள்ளம் சோழர் காலத்தில் காப்பியங்களாக வெளிவந்தன. தன்னிகரில்லாத தலைவனைப் பற்றி பாடுகின்ற போதும் புலவர்கள் நாடகப்

பணியில் கதையை நகர்த்திச் சென்றார்கள். உதாரணமாகச் சங்கமருவிய காலப்பகுதியில் எழுந்ததாகக் கூறப்படும் மணிமேகலை, சிலப்பதிகாரத்தின் பெரும் பகுதி கதையோட்ட மாகவே செல்கிறது. கதை யோட்டத்தில் கூற்றுக்கள் இடம் பெறும் பகுதி கதையோட்ட மாகவே செல்கிறது. கதையோட்டத்தில் கூற்றுக்கள் இடம் பெறும் போது நாடகப் பண்பு வெளிப்படும். இவ்வாறு உரைகள் என்றாலும் காவியங்கள் என்றாலும் நாடகப் பண்பு வெளிப்படும். இவ்வாறு உரைகள் காவியங்கள் என்றாலும் நாடகப் பண்போடு கூறும் போது சிறப்பான ஒரு சுவை உண்டாகிறது.

சிறு கதைகள் வரையும் போதும் சில புதுக் கவிதைகள் வரையும் போதும் நாடகத் தன்மை வெளிக்காட்டப் படுகின்றது. நாவல் எனப் போற்றப்படும் "நாகம்மாள்" நாடகத் தன்மை மிகுந்த நாவலாகும். அதில் வரும் காட்சிகள், சம்பவங்கள் அதனோடு சேர்ந்த உரைநடைகள் நாடகத் தோற்றப்பாட்டை காட்டுகின்றது. சிறு கதைகளை எடுத்துக் கொண்டால் அதில் இருந்து நாடகச் சேர்க்கையை வெளியேற்றினால் மிஞ்சுவது வெறும் உயிர்ப்பற்ற உரைகளே ஆகும். எனவே கதை யோட்டத்தில் நாடகப் பாணி இடம் பெறுவது அவசியம். அவ்விலக்கியத்தில் இருந்து அப்பாணியை வெளியேற்றினால் மிஞ்சுவது ஒன்றுமில்லை. எனவே நாடகம் என்பது இலக்கியத்தோடு சேர்ந்தால் உயிர்பெற்ற உணர்வை வெளிக்காட்டுகின்றது.

இன்று தமிழ்ச் சுவை சொட்டச் சொட்ட வீதியோரங்களிலும், மேடைகளிலும் அரங்கேறுகின்ற கூத்துக்கள், நாடக இலக்கியங் களில் ஒன்று முல்லைத்தீவில் இன்று கையாளப்படும் சிலப்பதிகாரத்தை "சிலம்பு கூறல்" என்ற தலைப்புடன் கூத்து இலக்கியம் நடைபெற்று வருகின்றது. தங்களை அவ்விலக்கியப் பாத்திரங்களோடு இணைத்து இக் கதையை ஆடுவார்கள். இதை இன்று எம் சமுதாயம் ஏற்றுக் கொண்டு தமிழை வளர்க்கிறது. அதைப் பற்றி யாழ்ப்பாணத்தில் "கோவலன் கதை" என்ற தலைப்புடன் இடம் பெற்று வருவதையும் நாம் அறிகிறோம். எவ்வாறினும் இவற்றோடு இலக்கியங்களில் நாடகப் பாணியும் வளர்ந்து வருகிறது என்பதும், நாடகப் பாணி அமைந்திருப்பதே இவ்வளர்ச்சிக்கு காரணம் என்பதும் நாம் அறிந்ததொன்று இன்று புனையப்படும் நாடகங்கள் இலக்கியத்தோடு ஒன்றிப் போகின்றன. பாடசாலை மன்றங்களில் ஏற்படுத்தப்படும் நிகழ்வுகள் பாணியில் கதைகளை சொல்லும் போது அக்கதையில் உண்மை விளங்குகின்றது. அதன் தன்மை, உணர்வு என்பன எம்மனங்களில் நிலைத்து விடுகின்றன.

நாடகங்கள் நடிக்கப்பவதிலும் பார்க்க, நாடகங்கள் எழுதுவதே சிரமமானது என்றார்கள் பெரியோர்கள். உண்மைதான் நாடகங்களை எப்படியாவது ஒரு முக பாவனையோடு நடித்து விடலாம். ஆனால் அதை எழுதும் போது இலக்கியமாக்கும் போது அதன் உணர்வு உண்மை, தெரிவு என்பன சரியான முறையில் எழுதுவது கஷ்டமாகிறது. அல்லது தவற விடப்படகிறது என்பார்கள். எனவே நமக்குக் கிடைத்திருக்கும் நாடகப் பாங்கான இலக்கிய ங்கள் பெருந் தொகையே அதனை எத்தனையோ புலவர்கள் பாடி எமக்காக விட்டுச் சென்றிருக் கிறார்கள். அவ்வழியில் சென்று நாடகப் பாணியை வளர்ப்பது எமது கடமைகளில் ஒன்றல்லவா நாடகம் என்ற உயிர் இலக்கியங் களை விட்டுச் சென்றால் உடலான உரைகள் மட்டுமே விஞ்சி நிற்கும். நாடக இலக்கியங்கள் தமிழுக்குரிய செல்வங்கள், அவை தமிழ் வளர்வதற்குரிய ஓர் வடிவம் என்றால் மிகையாகாது.

# இசையே....உயிரே

**புனிதகுமாரி ஈழநேசன்**
சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (சங்கீதம்)
தென்மராட்சி

**இராகம்:~ கல்யாணவசந்தம்** **தாளம்:~ ஆதி**

**பல்லவி**

**மனமே உனக்குப் புரியாதா ~ இசை**
**அமுதினில் மயங்கிடத் தெரியாதா ~ என் (மனமே)**

**அனுபல்லவி**

**தினம் தினம் நீயும் அமைதியைத் தேடி**
**அலைந்ததெல்லாம் போதும் ஆனந்த கானத்தால் வானத்தில் பறந்திட**
**(மனமே)**

**சரணம்**

**இசையினில் மயங்கிடா இதயமில்லை ~ நல்**
**இசையின்றி வாழ்வினில் ஏது சுவை**
**இறைவனே இசையதன் வடிவானவன் ~ நல்**
**இசையினில் மயங்கி விடு இறைவனோ டிணைந்து விடு.**

**கண்ட நடை**

**காற்றோசை ஆற்றோசையினிற் கலந்த திசையே**
**கருங்குயிலினின் நாதமும் தருமின்ப மிசையே**
**வருந்துன்பம் யாவையும் விலக்குவது மிசையே**
**அருவாகி உருவான ஸ்வர ராக மிசையே**
**இசையே இசையே இசையே இசையே**
**உயிரே உயிரே உயிரே உயிரே**

**(மனமே.....)**

# "தண்ணீர் இல்லையேல் கண்ணீர்"

## சிறுவர் நாடகம்

திரு.லதிஸ்லாஸ் அமலானந்தகுமார்
அதிபர்
மன்/ மூன்றாம் பிட்டி அ.த.க.பாடசாலை
வெள்ளாம்குளம், மன்னார்.

**[மேடையின் பக்கம் முழுவதும் சிறார்கள் விலங்குகள் வேடத்தில் ஆடி மகிழ்ந்திருப்பர்]**

**பாடல் :–** லாலலாலலாலா – லல லாலாலாலா (4)

கீச்சு மாச்சு தாம்பலம்

கியா மாயா தம்பலம்

மாச்சு மாச்சுத் தம்பலம்

மாயா மாயா தம்பலம்

முயல் :– இப்படியே நாங்க எப்பவும் சந்தோசமாய் இருப்பம் எண்டால்

மான் :– எங்களுக்குள்ள எந்தப் பிரிவினையும் ஏற்படாது

மயில் :– ம்....ஆ! தலை சுற்றுது தண்ணி விடாய்க்குது! ஆ! லேசா என்னைப் பிடியுங்கோ!

நரி :– ஆ! மயிலாரும் என்ன நடந்தது பாட்டுக்கு நல்லா ஆடி களைச்சிட்டார் போல கிடக்குது.

முயல் :– நரியாரே! மயிலாரைப் பிடியுமப்பா. உன்ர பார்வையே சரியில்லாமக் கிடக்கு

நரி :– முயலார் இப்படிக் கதைக்காதையும் எங்கட மூதாதையர் தந்திரம் செய்து பிழைச்சதை நான் ஒத்துக் கொள்ளுறன்

மான் :– இப்ப தந்திரமும் அவதந்திரமும் இல்லாதது தான் குறையோ? மயில் நண்பருக்கு என்ன நடந்தது?

முயல்,நரி:– மயில் நண்பா எழுந்திரு, மயில் நண்பா எழுந்திரு

முயல் :– மயிலார் சரியாக் களைச்சிட்டார் போல கிடக்கு

நரி :– அப்ப அவருக்கு கொஞ்சம் தண்ணீர் குடுத்தா அதை முகத்தில் தெளிச்சா சரியாப் போயிடும்!

மான் :– மயிலாருக்கு முகத்தில் தெளிக்க தண்ணீருக்கு எங்க போறது?

எல்லாரும்:– கொஞ்சம் தண்ணி தருவியளே! (3)

நரி, முயல்,மான்:– மயில் நண்பரை மயக்கத்தில இருந்து எழுப்பக் கொஞ்சம் தண்ணி தருவியளே?

(பார்வையார் மத்தியில்)

**பாடல்**

**இராகம் – கானடா**

தண்ணீர் தண்ணீர் தண்ணீர்

உலகில் எங்கும் கிடைத்த பொருளே தண்ணீர்

தண்ணீர் தண்ணீர் தண்ணீர்

உலகில் இன்று அருகும் பொருளே தண்ணீர்

மான்:– எங்கடை நண்பர் மயிலாருக்கு ஆர் தண்ணீர் கொண்டு வரப்போறது?

முயல்:– ஆர் போறது நீங்கள் போறியளே?

நரி:– நான் போறன் எங்கை தேடியும் என்ர நண்பனுக்காக தண்ணீர் கொண்டு வர நான் போறன்.
(தந்தனத் தானானே தானே, தந்தனத் தானானே தானே, தந்தனத் தானானே தானே,
தந்தனத் தானானே தானே)

குரங்கு:–நரியாரே என்ன அவசரமாய்ப் போறீர்?

நரி:– குரங்கு மச்சான் உன்னோடை நின்டு ஆறுதலாக் கதைக்க எனக்கு நேரமில்லை.........
தண்ணியைத் தேடிப் போறன்

குரங்கு:–தண்ணிக்கென்ன அவசரம்?

நரி:– தண்ணித்தாகத்தால என்ர நட்பு மயிலார் மயங்கிப் போட்டார்

குரங்கு:–பறவைகளின் ராணிக்கு உதவி செய்ய நானும் உங்களோடை வரட்டுமா?

நரி:– நன்றி குரங்கு மச்சான் உன்னைப் போல தானாக முன்வந்து உதவி செய்கிற பண்பு யாருக்கு
இருக்கு?

குரங்கு:–வாரும் கெதியாப் போவம் இந்தக் காடு முழுவதும் வரட்சியாக் கிடக்கு தண்ணீர் கிடைக்கிறது
வலு கஸ்ரம் எண்டு தான் நினைக்கிறேன்.

நரி:– ஏதும் உதவி தேவை எண்டால் தன்னட்ட வரச்சொல்லி சிங்கமகாராஜா சொல்லியிருக்கிறார்
அவரட்ட போய் உதவி கேட்பம்
தொம் தொம் தொம் தகிட தகிட
தொம் தொம் தொம் தகிட தகிட (2)

**பாடல்**

காட்டின் ராஜா சிங்கத்தார்

கடுகடு சினத்தோடு தூங்குகிறார்

காட்டின் விலங்கு நரி, குரங்கார்

உதவகேட்டு சென்றனரே!

கர்ச்சனைக்குப் பயந்து
கர்வத்திற்கும் ஒதுங்கி
காதோரம் செய்தி
சொல்லிடத்துடிக்கும்
நரியாரே ஓ! குரங்காரே
மகாராஜாவை எழுப்புங்கோ
ஐயாவே மகாராஜாவே
எழும்புங்கோ எழும்புங்கோ!

(தூங்கிக் கொண்டிருந்த சிங்கத்தார் மிகவும் கஸ்ரப்பட்டு சோம்பல் முறித்துக் கொண்டு எழும்புகிறார், உதவி கேட்டு வந்தவர்களைப் பார்த்து கர்ச்சிக்கிறார்.)

சிங்கம்:-டேய் பொடிப்பயல்களோ! ஆககககா(சிரித்தல்)

தந்திர நரியாரும் தாளக்குரங்காரும் என் குகை நாடி வந்தது ஏனோ என் தூக்கம்தனைக் கலைத்ததேனோ?

நரி:- தங்கள் தூக்கத்தைக் குழப்பிய இருவரையும் மன்னிக்க வேண்டும் மகராஜா!

குரங்கு:-நரியாரின் மித்திரன் மயிலார் தண்ணீர் கிடைக்காததால மயங்கிப் போட்டார் மகாராஜா

நரி:- மயங்கிப் போன என்ர நண்பனைக் காப்பற்ற தண்ணியைத் தேடி களைச்சுப் போனோம்

குரங்கு, நரி:-அதுதான் உங்களிட்ட உதவி கேட்டு வந்திருக்கிறம் மகாராஜா!

சிங்கம்:- உதவி கேட்டு வந்திருக்கிறீங்கள் அதுவும் லேசுப்பட்ட உதவியைக் கேட்டு வரேல்ல..............

தண்ணீர் ம்................ காடே வரட்சியாய்ப் போயிட்டுது.............தண்ணீர் கிடைக்கிறது முயற்கொம்பு

குரங்கு:-மகாராஜா! என்ன யோசிக்கிறார்?

நரி:- பொறடா மச்சான் காட்டின் ராஜா தண்ணி கிடைக்கிற குளம் எந்தத்திசையில இருக்கெண்டு யோசிக்கிறார் போல கிடக்கு

சிங்கம்:- இந்தத் தண்ணிப் பிரச்சினை எங்களுக்கு மட்டுமல்ல மனிசருக்கும் பெரிய பிரச்சினையா கிடக்கெண்டுதான் கதைக்கிறாம். வாருங்கோ பார்ப்போம் அண்டைக்கு ஒரு இடத்தில தண்ணியைக் கண்டனான் வாருங்கோ பார்ப்பம்

தந்த தகிட தகிட தாம்
திந்த திகிட திகிட தெய் (2)

(தண்ணீர் தேடிப் போன நரியார் இவ்வளவு நேரமாகியும் வராத காரணத்தால் நண்பர்கள் சோர்வடைந்து தமக்குள் பேசிக்கொள்கின்றனர் பழைய நினைவுகளையும் மீட்டிப் பார்க்கின்றனர்.)

மான்:- முயலாரே! இவ்வளவு நேரமாகிப் போயிற்றுது நரியாரைக் காணேல்ல..................

முயல்:- நரியார் எங்கையும் நரிக்கூத்து விட்டுக்கொண்டு நிக்கிறாரோ தெரியேல்ல மானாரே

மான்:- சீச்சீ .......... நரியார் மிகவும் நல்லவர் மூதாதையரின்ர பழக்க வழக்கத்தை வச்சுக்கொண்டு எல்லாரையும் எட போடக் கூடாது

முயல்:- இல்லை மானாரே நரியாருக்கு எங்கட அவசரம் எங்க புரியப்போகுது

மான்:- ம் ......... அவர நாங்கள் மாத்திப்போட்டம் நல்ல சூழல் தீய ஒருவரையும் கட்டாயம் மாத்தும்.

முயல்:- அப்ப ஒருவேளை எங்க தேடியும் தண்ணீர் கிடைக்காம, நரியார் அலையுராரோ?

மான்:- ம்........... பாவம்............ தண்ணிர் கிடைக்காம அலையிறார் போல கிடக்கு

முயல்:- ஓமோம் மானாரே எங்கட அம்மா தண்ணியப்பற்றி நிறையப் சொன்னவ

மான்:- அப்படியோ? தண்ணியப்பற்றி உங்கட அம்மா உமக்கு என்னசொன்னவா? கொஞ்சம் விளக்கமாச்சொல்லுமன்......

(முயல்குட்டியார் தனது தாயுடன் நடந்த உரையாடலை Flashback) ஆக நடித்துக் காட்டுதல்)

பாடகர்- I:- அன்றொருநாள் தாய் முயல்தன் குட்டிமுயலை தனதருகில்அழைத்தது

பாடகர்-II:- ஏனழைத்தது தெரியுமா?

பாடகர்-III:- தாய் சேயை அழைப்பது அன்பைப் பொழிய

பாடகர்-I:- அன்பைப் பொழிந்ததாய் முயல் தன் குட்டிக்கு அறியாத விடயங்கள் பலவற்றையும் கற்றுக் கொடுப்பதைப் பாருங்கள்!

தாய்முயல்:- மகனே நீ அதிகமாய் ஓடித்திருந்து விளையாடுவதைக் குறைத்துக்கொள் மகனே! நீ களைத்து விடுவாய்!

குட்டி முயல்:- ஏனம்மா? சின்னப்பிள்ளை ஓடி விளையாட வேண்டும் எண்டு தானே சொல்லுறவயள்

**பாடல்:-**

இராகம்: ஹம்சானந்தி

வெள்ளை முயல் காட்டுக்குள்ளே துள்ளித்துள்ளிஓடுது
தாயின் பாசம் தேடித்தேடி தாவித் தாவி ஓடுது
அன்பு கொண்ட உறவினை ஆவலோடு நாடுது
ஆதரவு பாசத்தை ஆசையுடன் தேடுது

தாய்முயல்:- ஓம் மகன்! சின்னப்பிள்ளையள் ஓடி விளையாடுறது நல்லம் வியர்வை வெளியேறும், பசிக்கும் சத்தான உணவுகளை உண்பீர்கள் உடலும் வளர்ச்சி பெறும்.

குட்டி முயல்:- அப்படி எண்டால் ஏன் ஓடி ஆடி விளையாடக்கூடாது?

தாய் முயல்:- ஓடியாடி விளையாடுவது நல்லம் .... ஆனால்

குட்டிமுயல்:- ஆனால் ......... என்னம்மா?

தாய்முயல்:– இப்போதைய சூழலில் தண்ணீர் அருகிவரும் கால் தண்ணீர் பொன்னுக்கு சமனான சூழல்....

குட்டிமுயல்:– ஆ.... நான் நன்றாக ஓடி விளையாடினால் களைக்கும் களைத்தால் வியர்க்கும் வியர்வை வெளியேறினால் ............தண்ணீர் விடாய்க்கும் .... தண்ணீருக்கு எங்கை போறது அம்மா?

தாய்முயல்:– விலங்குகளாகிய நாங்கள் குளம், குட்டை, ஆறுகளுக்கு நீர் தேடிப் போறம்

குட்டிமுயல் :– அப்ப மனுசங்கள் அம்மா?

தாய் முயல்:– மனுசங்களும் எங்களைப் போலயும் அதோட கிணறு, குழாய்க்கிணறு எண்டு நீரைப் பெறுகினம்

குட்டி முயல்:–மழையால பூமிக்குத்தண்ணி கிடைக்குது தானே அம்மா?

தாய்முயல்:– ஓம் மகன்............. நீர் ஒர்வட்டம் மாதிரி

குட்டி முயல்:–அது என்னம்மா நீர்வட்டம்?

தாய் முயல்:– நீர்நிலைகளில இருக்கிற நீர் வெப்பத்தால ஆவியுயிர்ப்பு அடையுது

குட்டிமுயல்:–ம் பிறகு

தாய் முயல்:– மரஞ்செடி கொடிகளும் நீரை ஆவியுயிர்ப்பாக்குது

குட்டி முயல்:– ஆ ..... அதுக்குப் பிறகு

தாய்முயல்:– ஆவியுயிர்ப்பு அடைந்த நீராவி முகில்களாக மாறி குளிர்ச்சியடைந்து கருமுகில்களாக மாறி ஒன்றோடு ஒன்று மோதி

குட்டி முயல்:– மோதி ........

தாய் முயல்:– மேலும் குளிர்வடைந்து மழைத் துளிகளாக பூமியை அடையுது மகன்

குட்டிமுயல்:–ஆ! ..... ஜாலி ..... ஜாலி மழை நீர் நிறைஞ்ச நேரத்தில குடிச்சு சந்தோசமாய் இருக்கலாம் தானே அம்மா

தாய்முயல்:– அதுதானே இல்ல மகன் இப்ப பூமி மழையை இழந்து கொண்டு வருகிறது...... வரட்சி .... எங்கும் வரட்சி

குட்டிமுயல்:– வரட்சி ஏனம்மா வருகிது? ஆவியுயிர்ப்பு இப்ப இல்லையாம்மா?

தாய் முயல்:– ஓம் மகன் இயற்கையை நேசிக்காத மனிதன் அவன் உயிர்வாழ ...... இயற்கைத் தாவரங்களை கொலை செய்கிறான். வீடு கட்ட, தளபாடம் செய்ய, விறகுக்கு எண்டு மரங்களை அழிச்சவன் தன்ர உடலை எரிக்கவும் மரத்தை அழிச்சான்...... காடு அழிஞ்சது... மழை குறைஞ்சது .....வரட்சி கூடிற்றுது

குட்டிமுயல்:–இனிவந்த காலம் .......... தண்ணியே கிடைக்காதா அம்மா

தாய்முயல்:– ஓம் மகன்.......... தண்ணீரின்ர நிலையை நீ புரிந்து கொண்டது போல பெரியவங்க சொல்லுற புத்திமதிகளை நீகேட்டு நடந்தா..... நீ வெற்றி அடைவாய்

(தனனானே தனனானே தானா தானே – (2))

(அறிவுரை கூறிய தாய் பிரிந்து போதல் மீண்டும் முயல்க்குட்டி மானுடன் Flashbackஐ முடித்துக் கொள்கிறது)

மான்:- முயலாரே உங்கட அம்மா சொன்னதுபோல இப்ப அந்த தண்ணியே கிடைக்காத காலம் வந்துட்டுதோ?

குட்டிமுயல்:- ஓமோம் ......... தண்ணி கிடைக்காமத்தான் நரியார் அலையிறார் போல கிடக்கு இன்னும் கொஞ்ச நேரம் பாப்பம்

(நீர் தேடி நீண்ட தூரம் நரியார், குரங்கார். சிங்கத்தார் நடந்ததால் மிகவும் களைப்புற்று சோர்வடைந்து விட்ட நிலையில் .....)

தந்த தகிட ...... தகிட தாம்......

நரி:- மகாராஜா என்னால் இயலாது இனி ஒரு அடி கூட எடுத்து வைக்க இயலாது

குரங்கு:-ஓம் மகாராஜா எலிப்பிளுக்கை ஏன் காயுது என்ற கதைதான் ஞாபகத்திற்கு வருகிது

(மூச்சு வாங்குதல்)

சிங்கம்:-ம்.... பொறுங்கோ அங்கதான் ..... அது தான் குளம் (குளத்தைக் கண்ட சந்தோஷத்தில்)

நரி:- ஆ! போன உயிர் திரும்பி வந்திட்டு மகாராஜா

குரங்கு:-(குத்துக்கரணம் போடுதல்) எங்கட தலைவர் சிங்கமகாராஜா வாழ்க (2)

(சிங்கத்தின்ர கழுத்தில கிடந்த துணியைக் கொடுத்து)

சிங்கம்:- ம்.... இதில் நனைச்சு தண்ணியைச் சேமிச்சுக்கொண்டு போய் உன்ர நண்பனைக் காப்பாற்று

குரங்கு:-முதலிலை நரியார் குடிச்சு உயிரப் பிடிக்கட்டும். பிறகு நட்பைக் காப்பாற்றட்டும்

(நரியார், குரங்கு, சிங்கத்தார் இருவரையும் தள்ளி விட்டு தண்ணி குடிக்கப் போதல்)

கிளி:- ஆபத்து! ஆபத்து நரியாரே ஆபத்து!

குரங்கு:-ஏய் கிளியக்கா அபசகுணமாய் ஆபத்து எண்டு ஏன் தருக்கிறாய்

நரி:- சாமி வழி விட்டாலும் கிளிப்பூசாரி குறுக்க சீ சீ என்ர உயிர் போகப்போகிது

சிங்கம்:--நரியாரே! கொஞ்சம் கொஞ்சம் பொறும் கிளியார் ஏன் தருக்கிறார் என்பதைக் கேட்பம்

கிளி:- இந்தக் குளத்து நீரைப்பருகினா மட்டும் உம்மட உயிர் மட்டும் தப்பிடுமா என்ன? கீ கீ கீ

குரங்கு:- அவசரம் புரியாத கிளியக்கா சட்டென்று விசயத்துக்கு வாக்கா

கிளி:- நான் தருப்பதற்கு காரண கர்த்தா சிங்கமகாராஜாதான் அவரின்ர நீதி நழுவி அநீதியான ஆட்சியில் இப்ப நாங்க வாழுறம்

சிங்கம்:- என்ன கிளியாரே என்ர ஆட்சியைப் பற்றி அவதூறு கதைக்கின்றீர் உம்ம ..... (கோபமா)

கிளி:- சிங்கமகாராஜா நான்கொக்கல்ல கிளி,மழை பெய்யாததால வரட்சி எல்லா நீர் நிலைகளும் வற்றி விட்டன இந்தக் குளத்தைத்தவிர இது அநீதியல்லவா?

சிங்கம்:-நரியார் மயிலாரின் நட்புக்காக வந்தார், குரங்கார் நரியாரின் நட்புக்காக வந்தார் நானும் இவர்களுக்காகவே வந்தேன். இது அநீதியா?

குரங்கு:- ஆ.. விசயத்துக்கு வாக்கா ..... நரியாரைப் பாரக்கா!

கிளி:– இந்தக் குளத்து நீர் இப்ப குடிக்கிற நிலமையில இல்லை

சிங்கம்:– ஆ! ஏன்

நரி:– இவள் பாவி பெரிய குண்டைத் தூக்கிப்

போட்டுட்டாளே

கிளி:– இந்தக் குளத்துக்குள்ள மனுசன் பொலித்தீன் பைகளையும், பழைய உக்கின உக்காதபொருட்களையும் வீசியிருக்கிறான் தூர இருக்கிற தொழிற்சாலைக்கழிவுகூட இதுக்குள்ள தான் விடப்படுகிறது பலத்த காற்றினால சரியான தூசு படிஞ்சு போச்சு எங்கட வெக்கம் கெட்ட மிருகபறவையினம் கூட வேற இடமில்லாம இதில எச்சம் போட்டிட்டினம் எங்கட இனம் பலியாக எலும்பும் தோலுமாக உக்கிப் போயிருக்கினம்

குரங்கு:–(மூக்கைப் பொத்தினபடி) கொஞ்சூண்டு தண்ணீருக்குள்ள இத்தூனூண்டு விசயங்களா?

நரி:– தண்ணீர் இல்லாம செத்துப் போவேனே தவிர இந்த கெட்டுப்போன தண்ணி எனக்கு வேண்டாம்.

சிங்கம்:– ம் மனிசரின்ர அனியாயம் வீட்டில, நாட்டில எண்டு பார்த்தா காட்டிலயுமா? இது எங்கட இனத்துக்கு மட்டுமல்ல, முழுமனித குலத்துக்குமே தீமையான விசயம் எண்டத ஏன் இன்னும் மனிசர் உணரேல்ல

குரங்கு:–அப்ப! மனிசரோடை சேர்ந்து நாங்களும் கோவிந்தா! கோவிந்தா தான்

கிளி:– மனிசரும் உணருகின்ற காலம் வந்துட்டுது அங்கை பாருங்களேன்

(பாடல் பாடப்படும் சந்தர்ப்பத்தில் நான்கு நோயாளிகள் வைத்தியரைச் சந்தித்து மருந்தும் ஆலோசனையும் பெறல்)

**பாடல்**

கவலையோடும் கண்ணீரோடும்
போராடும் மனித இனம்
தண்ணீரைச் சரியாக பருகாத காரணத்தால்
நோயென்னும் தீமையால் வரும் துன்பம் ஆயிரம்
தண்ணீரை தூய்மையாய் பருகுங்கள்
தண்ணீரை வடிகட்டிக் குடியுங்கள்
நுளம்பினை அழித்திட முயலுங்கள்

(கொலரா,மஞ்சட்காமாளை,நெருப்புக்காய்ச்சல், டெங்கு என அடையாளமிடப்பட்டு தாதியால் இரத்தப்பரிசோதனை செய்யப்பட்டு இனங்காட்டுதல்)

வைத்தியர்:–உங்கள் எல்லோருக்கும் தெரியும் இப்ப தண்ணியால ஏற்படுற பிரச்சினைகள் வடிகட்டாத கொதித்தாறாத நீர், குளோரின் இடப்படாத நீரை குடிக்கிறதால வாந்திபேதி–கொலரா, வயிற்றோட்டம் – டயறியா, மஞ்சட்காமாளை – யெலோ பீவர், நெருப்புக் காய்ச்சல் –

தைபொயிட் பீவர் நோய்களுக்கு உள்ளாகிறோம். எங்கடை சூழல் அசுத்தமாய் இருக்கிறதால நுளம்புப் பெருக்கம் இவைகளைக் கட்டுப்படுத்த வேண்டியது உங்கட கடமை இல்லா விட்டால் இறப்புக் கூட நேரிடலாம்.... அதுதான் இப்ப நடக்குது

நோயாளி–I எங்களுக்கு உயிர் வேணும் டாக்டர்

வைத்தியர்:– அயற்சூழலைச் சுத்தப்படுத்துங்கள்

நோயாளி–II நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த நாங்க என்ன செய்ய வேண்டும் டொக்ரர்

வைத்தியர்:– நீர் நிலைகளில் கம்பூச்சியா மீனினங்களை வளருங்கள்

நோயாளி–III:– சுத்தமான நீரை எப்படி பெறுறது?

வைத்தியர்:– நீரைக் கொதிக்க வையுங்கள் பில்ரறில வடிகட்டிக் குடியுங்க கண்ட கண்ட இடங்களில தண்ணீர் குடிக்காதேங்க Thats All

நோயாளிI,II,III :– எங்க உயிரைக் காப்பாத்தின உங்களை எப்பவும் மறக்க மாட்டாம் டொக்ரர் (மேடையை விட்டு விலகுதல்)

கிளி:– பாத்தியளே! நல்லா பாத்தியளே! மனிதன் இனியெண்டாலும் திருந்தாட்டியவன் திருந்த வழியே இல்லை

நரி:– மனிதனே அழிவுப் பாதையை நோக்கிப்போகிறான்

குரங்கு:– தண்ணியைப் பொன்னுக்குச் சமனாக மதிக்க வேண்டும்

சிங்கம்:– மனுசனுக்கு சூழலின்ர பெறுமதி தெரியாது விலங்குகள் நாங்கள் எண்டாலும் மனிதனுக்கு முன்மாதிரியா இருப்பம்

நரி:– சரி சரி உங்கண்ட புராணத்தை பிறகு கதையுங்க இப்ப என்ர நண்பனை எப்படிக் காப்பாற்றுறது?

சிங்கம்:– எங்களைப் பெரிய ஆபத்தில இருந்து காப்பாத்தின கிளியக்கா தான் இப்ப உதவி செய்ய வேணும்

குரங்கு:–ஆ! காகம் தாகத்தால திரிஞ்ச கதை எல்லோருக்கும் தெரியும் தானே

பாடகர்:–ஓமோம் (2)

தண்ணீர் சாடிக்குள்ள புத்திசாலி காகத்தார் கல்லுகளைப் போட்ட கதையோ?

கிளி:– Good Idea மனிசன் தங்கட தேவைகளுக்கெண்டு நல்ல தண்ணியை சேமிச்சு வைப்பார் அவங்களிட்ட கேட்டு தண்ணியோட வாறன் buy buy..... (துவாய்த் துண்டோட பறத்தல்)

சிங்கம்:– மயிலாரிடம் போவம்

தந்த தகிட தகிட தாம்

திந்த திகிட திகிட தெய் (2)

குரங்கு:–நரியாரே அங்க பாரும் மயிலார் மானாரோடை விளையாடிக் கொண்டிருக்கிறார்

நரி:– என்ன ஆச்சரியம் மயிலார் மயக்கம் தெளிஞ்சிட்டார்

சிங்கம்:– அவளிட்ட விசாரிச்சா விசயம் விளங்கும்

(மயிலாரும் நரியாரும் கட்டித்தழுவுதல், கிளி நீரோடு வருதல்)

கிளி:– என்ன மயிலாரே மயக்கத்தோடை இருப்பீர் என்டு தண்ணி கொண்டு வந்து உம்மட உயிர் காக்க நண்பர் நரியார் துடிதுடிச்சார் ஆனா

மான்:– தண்ணீரோடு நரியார் வருவார் கனநேரம் காத்திருந்தம் ம்.... வரவேயில்லை

மயில்:– இங்க குட்டி முயலாரைத்தேடி அவற்றை அம்மா வந்தார்

குரங்கு:– வந்து

மான்:– குட்டி முயலார் களைச்சிருப்பார் எண்டு அவர் தண்ணி கொண்டு வந்திருந்தார்

மயில்:– குட்டி முயலாற்றை தண்ணியை எனக்குத் தந்தினம் நான் மயக்கம் தெளிஞ்சிட்டன்

தாய்முயல்:– ம் நான் எப்பவும் மழை காலத்தில மழைத்தண்ணியைச் சேமிச்சு வைக்கிறனான் தண்ணியை வீண் விரயம் செய்யிறதில்லை தண்ணியை சேமிச்சுவைக்கிறது நல்ல பழக்கம்

கிளி:– மயங்கிக் கிடந்த மயிலார் எப்பவும் உங்களை மறக்க மாட்டார்

குரங்கு:–நன்றி மறக்கிறது மனிசர், நாங்களில்ல

குட்டி முயல்:– அங்க பாருங்க அம்மா சொன்னது போல கருமுகில்கள் ஒண்டாச் சேருகினம்

மான்:– அப்ப மழை வரப்போகிது

எல்லோரும்:– மழை வரப்போகுது

சிங்கம்:–ஆ .... அப்ப என்ர காலத்தில மனிசர் செய்த அனியாயத்தால குளங்கள் எல்லாம் இப்படி மோசமாக் கிடக்குது அதுகளைத் துப்பரவு செய்ய வேணும், குப்பைகள் போடாமல் தடுக்க வேணும்.

நரி:– குளங்களை துப்பரவு செய்தமெண்டா நீரைச் சேமிக்கலம் வரட்சியிலிருந்து தப்பிக்கலாம்.

குரங்கு:–நாங்கள் எல்லோரும் சேர்ந்து அந்தக் குளத்தை மழை வாறத்துக்குள்ள துப்பரவாக்குவமே

எல்லோரும்:– ஓமோம் எல்லோரும் சேர்ந்து வேலை செய்தா கெதியா முடிஞ்சிடும் (சிரமதானத்துக்குத் தேவையான பொருட்களுடன் சென்று ஆடிப்பாடி மழையில் நனைந்து சந்தோஷமாக வேலை செய்தல்)

தாய்முயல்:– தண்ணீர் இல்லையேல் கண்ணீர்தான்

சிங்கம், நரி:– நட்புக்காக உதவும் கரங்களாக மாறுவோமா?

எல்லோரும்:– ஓமோம் எல்லோரும் மாறுவோம்

**பாடல்**

சிறுவர் நாங்கள் ஒன்றிணைந்து
இயற்கை வளத்தை நேசிப்போம்
உயிர்களிடத்தில் அன்புகொண்டு

உண்மை நட்புக்க உதவிடுவோம்

சுற்றுச் சூழல் தூய்மை பேணி

நுளம்புப் பெருக்கத்தை ஒழித்திடுவோம்

தண்ணீரைப் பொன்னாக மதித்திடுவோம்

சேமிப்புப் பழக்கத்தைக் கடைப்பிடிப்போம்

முற்றும்

"தண்ணீர் இல்லையேல் கண்ணீர்" எனும் சிறுவர் நாடக இவ் எழுத்துருவானது எமது சுய ஆக்கம் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

**குறிப்பு:-** மாகாண ரீதியாக நடைபெற்று வரும் சிறுவர் நாடகத்தில் வவுனியா – மன்னார் மாவட்ட உப மாகாண ரீதியிலான போட்டியில் முதலாம் இடம் பெற்ற சிறுவர் நாடக எழுத்துரு என்பது குறிப்பிடத்தக்கது.

**கற்பனையும், இலக்கியமும்,கலையும் சாதாரண மனிதனுக்கு உதவுவது எப்படி? ஒரு இலக்கிய விரும்பி கார்ச் சாரதியிடம் இந்த வினாவைக் கேட்டார். அவர் முன்பெல்லாம் என் மனைவியின் முகத்தைப் பார்த்தால் எனக்கு அசிங்கமாகத் தோன்றும். பல இலக்கியச் சொற் பொழிவுகளைத் கேட்டபின் இப்போது என் மனைவியின் முகம் அழகாகத் தெரிகிறது என்று பதில் கூறினார்.**

மெல்லிய மேகத் திரைக்குள் மறைந்திடும்
வெண்ணிலாவே! - உன்றன்
மேனி யழகு மிகைபடக் காணுது
வெண்ணிலாவே!
நல்லிய லார்யவ னத்தியர் மேனியை
வெண்ணிலாவே! - மூடு
நற்றிரை மேனி நயமிகக் காட்டிடும்
வெண்ணிலாவே!
சொல்லிய வார்த்தையில் நாணுற்றனை போலும்
வெண்ணிலாவே! - நின்
சோதி வதனம் முழுவதும் மறைத்தனை
வெண்ணிலாவே!
புல்லியன் செய்த பிழைபொறுத் தேயருள்
வெண்ணிலாவே! - இருள்
போகிடச் செய்து நினதெழில் காட்டுதி
வெண்ணிலாவே!

— பாரதியார்



தீபம் பிறிண்டேர்ஸ், 717, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.